# பத்துப்பாட்டு வசனம்

யாழ்ப்பாணத்து நவாலியூர்
திரு. ந. சி. கந்தையா பிள்ளை
இயற்றியது

ஒற்றுமை ஆபீஸ்
சைதாப்பேட்டை, மதராஸ்
1935
[விலை ரூ. 1

PRINTED AT
THE ROYAL PRINTING WORKS,
MOUNT ROAD. MADRAS.

# முகவுரை

சங்க நூல்களுள் பத்துப்பாட்டுத் தலைமை பெற்றது. அதன்கண் தமிழ் வேந்தரின் போரொழுக்கம், வீரம், கொடை முதலியனவும், அக்கால மக்களின் தொழில், வாழ்க்கை முறை, பழக்க வழக்கம் ஆதியனவும் துலக்கமுறக் கூறப்பட்டுள்ளன. சுருங்கக் கூறுமிடத்து பத்துப்பாட்டு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்களது உண்மைச் சரித்திரமாகும். அதனைப் பண்டைத் தமிழகத்தின் களங்கமற்ற நிழற்படம் எனக்கூறினும் மிகையாகாது.

அந்நூல் பற்றுள்ளமின்றி உள்ளதை உள்ளவாறே கூறுகின்றமையின் ஒப்புயர் வில்லாதது. ஆனமைபற்றியே,

"பத்துப்பாட் டாதிமனம் பற்றினர் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையு மிலக்கணமில் கற்பனையே"

என ஆசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் கூறுவாராயினர்.

ஆசிரியர் நச்சினார்க்கினியர் அந்நூற் குரை கண்டிலரேல் அதன்கண் காணப்படும் வியத்தகு பொருள்களை யாம் கண்டு மகிழ்தல் அரிதாகும். அந்நூல் உரையுடன் மிளிரினும் அதனைக் கற்று விளங்குதல் சாதாரண கல்வியாளர்க்கு எளிதன்று. இக்குறையை நீக்குவதற்கு எழுந்ததே இந்நூலென்க.

வசன நடையில் அமைந்துள்ள இந்நூல் மாணவர்க்கும் பிறர்க்கும் பெரும் பயனளிக்குமென்பது எமது அபிப்பிராயம். இதன்கண் நேர்ந்துள்ள குறை களைந்து குணம் பாராட்டல் கற்றறிந்தோர் கடன்.

"குணநாடிக் குற்றமுநாடி யவற்றுண்
மிகைநாடி மிக்க கொளல்".

தமிழ் நிலையம்,
நவாலி,
1—5—1935.

ந. சி. கந்தையா.

# இப்புத்தகத்திலடங்கியவை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| | முகவுரை | ... | iii |
| | பத்துப்பாட்டு வசனம் | ... | 1—114 |
| 1. | திருமுருகாற்றுப்படை | ... | 1 |
| 2. | பொருநராற்றுப்படை | ... | 13 |
| 3. | சிறுபாணாற்றுப்படை | ... | 21 |
| 4. | பெரும்பாணாற்றுப்படை | ... | 29 |
| 5. | முல்லைப்பாட்டு | ... | 45 |
| 6. | மதுரைக்காஞ்சி | ... | 48 |
| 7. | நெடுநல் வாடை | ... | 68 |
| 8. | குறிஞ்சிப்பாட்டு | ... | 74 |
| 9. | பட்டினப்பாலை | ... | 82 |
| 10. | மலைபடுகடாம் | ... | 93 |

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 7 | 11 | தெற்கே | மேற்கே |
| ,, | 17 | தென்புறத்துள்ள | மேற்குப்புறத்துள்ள |
| 19 | 16 | பகன்றையும். | பகன்றையும், |
| ,, | 20 | நிற்கும், | நிற்கும். |
| 27 | 4 | தன் | தம் |
| 44 | 4 | அரையில் | அறையில் |
| 47 | 12 | அந்ளது | அளந்து |
| 53 | 22 | எல்லையாக | எல்லையுள்ள |
| 56 | 1 | ஆரவாரம் | கூறும் ஆரவாரம் |
| ,, | ,, | புலியின் கூறும் | புலியின் |
| 61 | 2 | களாகி | களாகிய |
| ,, | 5 | பழயன | பழயன் |
| ,, | 27 | இறக்கும். | இறக்கும் |
| 67 | 12 | செல்வர்க்கென்று | செல்வர். சென்று |
| 71 | 17 | பூக்கள | பூக்களை |
| ,, | 18 | எழுதப்பட்டுள்ளனை | எழுதப்பட்டுள்ளன |
| 74 | 4 | சேனதி | சேனபதி |
| 81 | 18 | நம்மூவர் | நம்மூர் |
| ,, | 21 | தேடோ | தோடே |
| 87 | 6 | அடுகப் | அடுக்கப் |
| 88 | 7 | எடுக்கப்படும். | எடுக்கப்படும் |
| 91 | 2 | பூவளர்ந்தன | வளர்ந்தன |
| 92 | 7 | எய்தானினன் | எய்தானயினன் |
| 100 | 12 | குறமகன் | குறமகளிர் |
| ,, | 14 | கலப்பாள் | கலப்பர் |
| , | 16 | ஆக்குவாள் | ஆக்குவர் |
| , | 22 | பெறுகுவிர் | தருவர் |

# I. திருமுருகாற்றுப்படை*

## 1. திருப்பரங்குன்றம்

உலகிலுள்ள உயிர்களெல்லாம் மகிழும்படி ஞாயிறு மேருவை வலஞ் செய்யா நிற்கும். அஞ்ஞாயிறு கடலிடத்திற் றோன்றினாற்போன்று இடைவிடாது ஒளி செய்கின்ற திருமேனியும், தம்மை அடைந்தோரின் தீவினையைப் போக்கும் வலிய தாளும், பகைவரை அழித்த இடியோடு ஒத்த கையுமுடைய முருகக்கடவுள் மறுவில்லாத கற்பினையுடைய தெய்வயானையாரின் கணவன். கார்காலத்திலே வயிறு நிரம்பும்படி கடல்நீரைக் குடித்த முகில் சந்திர சூரியர் கிரணங்களை வீசா நிற்கும் ஆகாயத்தில் துளிகளைச் சிதறிக் காட்டிடத்தே தலைப் பெயலைப் பொழியா நின்றது. அதனாற் குளிர்ந்த காட்டிடத்தில் இருண்டு தழைத்த செங்கடம்பின் தேருருள் போன்ற மலர்களாற் றொடுத்த மாலைகள் முருகக்கடவுளின் திருமார்பிற் கிடந்தசையா நிற்கும்.

அமரருலகைத் தீண்டும்படி மூங்கில் வளர்ந்த மலையிடத்தே தெய்வமகளிர் உறைவர். அவர்களது பிரகாசிக்கின்ற சிவந்த அடிகள் சிறிய சதங்கைகள் அணியப்பெற்றன.

---

* வீடு பெற்றானொருவன் வீடு பெறற் குப்பக்குவனாகிய ஒருவனை அது பெறும்பொருட்டு முருகக்கடவுளிடம் வழிப்படுத்தியதாகச் செய்யப்பட்ட நூல். இதனை அருளிச் செய்தார் தலைச் சங்கத்திற் றலைமை பெற்றிருந்த மதுரை ஆசிரியர் நக்கீரனார். காலம் கி. பி. 100—130.

கால்கள் திரட்சியுடையன. இடை வளைந்து அசை யும் இயல்பினது. தோள்கள் பெருமையுடையன. உடுத் திய பட்டாடை இந்திரகோபம் போன்று இயற்கை நிறம் பெற்றது. அரை மணிகள் கோத்த மேகலாபரணங்கள் அணியப்பெற்றது. அழகு கையினாற் புனையப் பெறாது இயற்கையாயமைந்தது. ஆபரணங்கள் சாம்பூநத மென் னும் பொன்னினாற் செய்யப்பட்டன. குற்றந் தீர்ந்த நிறம் தூரத்தே விளங்கும் ஒளியுடையது. இவ் வியல்பினராகிய சூரரமகளிர் பொழிலகத்தே குழூமி நெய்ப்பினையுடைய தமது மயிரில் சிவந்த காலையுடைய வெட்சிப்பூவை விடுபூவாகத் தூவி அவற்றின் நடுவே குவளை இதழ்களைக் கிள்ளி யிடுவர். பொட்டிட்ட நெற்றியில் சுறுவின் அங்காந்த வாய்போற்செய்த தலைக்கோலத்தை அணிவர். சீதேவி என்னும் தலைக்கோலத்துடனே வலம்புரி வடிவாகச் செய்த தலைக்கோலத்தையும் வைத்தற்குரிய இடத்தேவைப்பர். முற்றமுடியப் பட்டுள்ள கொண்டையில் சண்பகப் பூவைச் செருகி அதன்மேல் பிரகாசிக்கின்ற பூங் கொத்துகளை இடுவர். நீரின் கீழுள்ள கிளைகளினின்றும் எழுகின்ற அரும்பினாற் றொடுக்கப்பட்ட மாலையைக் கொண்டையில் வளையமாகச் சுற்றுவர். இரு காதுகளிலும் செருகிய அசோகின் தளிர் ஆபரணங்களணிந்த அவர்கள் மார்பிடத்தே கிடந்து அசையாநிற்கும். அத்தெய்வமகளிர் வாசம்பொருந்திய மருதம்பூவை அப்பினாற்போலச் சந்தனக் குழம்பைக் கோங்கின் மொட்டை ஒத்த தமது தனங்க ளிடத்தே அப்பி ஈரம் புலர்வதன்முன் வேங்கைப் பூவின் தாதையும் அதன்மேல் அப்புவர். விளவின் சிறு தளிரைக் கிள்ளி தப்பாமற் படும்படி ஒருவர்மேல் ஒருவர் எறிந்து "கோழி உயர்ந்த வெற்றிக்கொடி வாழ்வதாக!" என்று வாழ்த்தி மலை இடங்களெல்லாம் எதிரொலி செய்யும்படி

பாடி ஆடுவர். இவ்வாறு தெய்வமகளிர் விளையாடு கின்ற சோலையையுடைய மலையிடத்தே மரங்கள் நெருங்கி வளர்ந்திருப்பதால் மந்திகளும் அவற்றில் ஏறி அறியா. இம் மரச் செறிவு மிக்க மலையிடத்துள்ள செங்காந்தண் மலராற் றொடுத்த மாலையை முருகக்கடவுள் தமது திரு முடியிற் சூடி யருளுவார்.

பேய்மகள் போர்க்களங்களில் அச்சந்தோன்றும்படி உலாவும் விருப்பினள். அவளது பறட்டை மயிர்கள் உலரப் பெற்றன. பற்கள் நிரை ஒவ்வாதன* பசிய கண்கள் கோபத் தாற் சுழலும் விழிகளையுடையன. நோக்கு அச்சம் விளைக் குந் தன்மையது. மார்பளவு நீண்டு அலைகின்ற காதுகள் பிதுங்கிய கண்ணையுடைய கூகையும் அச்சந்தரும் பாம்பு மாகிய குண்டலங்களைப் பூணப்பெற்றன. உடல் ஒப்பரவில் லாதது. நடை கண்டோரால் அஞ்சத்தக்கது. கூரிய நகங்க ளுடைய வளைந்த விரல்கள் உதிரம் அளைதலால் சிவப்பு நிறம் பொருந்தியன. கரங்கள்முடை நாற்றமுடையனவும், கண் தோண்டி உண்ணப்பட்டனவுமாகிய கரியதலைகளை ஏந்தும் தொழிலன. இவ்வகைத் தோற்றத்தினளாகிய பேய்மகள் நிணந்தின்கின்ற பெரிய வாயினாலே, கொன்று வென்ற வெற்றிக்களத்தைப் பாடித் தோளை அசைத்துத் துணங்கைக் கூத்தாடுவள்.

குதிரை முகத்தையும் மக்கள்யாக்கையையும் பெற்ற சூரபன்மா மாயையினால் கடலிடத்தே கீழ்நோக்கிப் பூத்த கொத்துகளையுடைய மாமர வடிவாகி நின்றானாக, அவுணர் களது வெற்றி அடங்கும்படியும், கடல் நிலை குலையும்படியும், பேய்மகள் துணங்கை ஆடும்படியும் முருகக்கடவுளின்

---

* தெற்றுப்பற்கள்.

செவ்வேல் விரைந்து சென்று அவனை அறுவகைப் படை* யுடன் அஞ்சும்படி அழித்தது.

செந்நாப்புலவனே! முருகக் கடவுளின் திருவருளைப் பெறுதற்குத் தலைமைபெற நீ விரும்பினையாயின் வீடுபேற்றைத் தப்பாமல் இப்பொழுதே பெறுவை. அதனைப் பெறுதற்கு அவன் யாண்டு யாண்டு உறையு மெனில் கூறுவேன் கேட்பாயாக.

ஆலுகின்ற வெற்றிக்கொடிக்கு அருகே வரிந்து கட்டப்பட்ட பந்தும் பாவையும் அறுப்பாரின்றித் தூங்குகின்ற கோபுர வாயிலையும், பல மாடங்களையும் சீதேவி உறையும் தெருக்களையுமுடைய மதுரைக்குத் தெற்கே பெரிய நெல்வயல்களுண்டு. கரிய சேற்றினை யுடைய அவ் வயல்களிடத்தே வாயவிழ்ந்த தாமரை மலர்களில் வண்டுக் கூட்டங்கள் இராப்பொழுதில் துயில் கொள்ளும்; விடியற்காலத்தே தேனூறுகின்ற நெய்தற் பூவை ஊதி ஞாயிறு தோன்றிய காலத்தில் சுனைமலரில் முரலும். இவ்வகையான மதுரைக்குத் தென்புறத்துள்ள திருப்பரங்குன்று என்னும் தலத்திலே முருகக் கடவுள் எழுந்தருளி யிருப்பார்.

## 2. திருச்சீரலைவாய்

அங்குசம் வெட்டுதலால் வடுவழுந்தின நெற்றியில் அசைகின்ற பொன்னரிமாலையையும், நெற்றிப் பட்டத்தையும், இரு பக்கங்களிலும் ஒலிக்கின்ற மணிகளையும், பிறரால் தடுத்தற்கருமையால் கூற்றுவனை ஒத்த நடையையும் உடைய களிற்றின்மீது முருகக்கடவுள் எழுந்தருளு

---

* (1) மூலப் படை, (2) கூலிப்படை, (3) காட்டுப்படை, (4) துணைப்படை, (5) பகைப்படை, (6) நாட்டுப்படை.

வார். அவரால் அணியப்பெற்ற *ஐந்து வேறு வடிவினை யுடைய முடிகள் ஒளிவிடுகின்ற இரத்தினங்கள் அழுத்தப் பெற்றன. பொன்னாற் செய்யப்பட்ட மகரக் குழைகள் மதியைச் சூழ்ந்து நீங்காத †மீன்களைப்போல் அவிரும். அவரது திருவதனம் தவத்தை முடிப்பவர்களது உள்ளத்திற் காலும் ஒளிபோல் விளங்கா நிற்கும்.

முருகக் கடவுளின் ஒருமுகம் இருண்ட பெரிய உலகம் குற்றமின்றி விளங்கப் பல கிரணங்களைத் தோற்றுவிக்கும்; ஒருமுகம் அன்பர்கள் துதிக்க அதற்கு மகிழ்ந்து அவர்கள் வேண்டும் பொருள்களை முடித்துக் கொடுக்கும்; ஒரு முகம் மந்திரமுடைய வேத முறையில் ஒழுகும் அந்தணரது யாகங்களில் தீமை வராமற் காக்கும்; ஒரு முகம் வேதத்தின் மறை பொருள்களை ஆராய்ந்து இருடிகள் மகிழும்படி உணர்த்தித் திங்கள் போலத் திசைகளை எல்லாம் விளக்குவிக்கும். ஒரு முகம் போர்க்கெழுந்தவர்களைக் கொன்று கோபித்த உள்ளத்தோடு போர்க்களத்தை விரும்பும்; ஒரு முகம் குறமடமகளாகிய வள்ளியுடன் மகிழ்ச்சியைப் பொருந்தும்.

முருகக் கடவுளின் திருமார்பினின்று தோளளவும் உத்தம இலக்கணமாகிய மூன்று வரைகள் நீண்டுள்ளன. அவரின் வலிய தோள்கள் பகைவர்மேல் படைக்கலங்களை எறிந்து மார்பைப் பிளந்து வாங்கும் பெருமையுடையன. அவரது திருக்கரம் ஒன்று ஆகாயத்தே இயங்குகின்ற இருடிகளுக்கு அபயங் கொடுக்கும்; ஏந்திய அக்கையின்

---

* கேடகம், கிம்புரி, மகுடம், பதுமம், கோடகம்.

† வியாழமும் வெள்ளியும் சந்திரனுக்கு இருமருங்கும் நிற்கும் கோள்கள்.

இணைக்கை மருங்கிலே கிடக்கும்; ஒரு கை யானையை அங்குசத்தால் செலுத்தும்; ஒரு கை தொடையின்மீது ஆடைமேற் கிடக்கும்; இரு கைகள் கரிய பரிசையையும் வேலையும் வலமாகச் சுழற்றும்; ஒரு கை முனிவர்களுக்குத் தத்துவங்களைக் கூறி உரையிறந்த பொருளை உணர்த்துங் காலத்து மார்பிடத்து விளங்கும்; ஒரு கை திருமாலையைத் திருத்தும்; ஒரு கை பாரவளையோடு சுழலா நிற்கும்; ஒரு கை இனிய ஓசையுடன் ஆடுகின்ற மணியை ஒலியா நிற்கும்; ஒரு கை நீல ஆகாயத்தின் மிக்க மழையைப் பொழியா நிற்கும். இவ்வகை பன்னிரண்டு கரங்களும் ஆறுமுகங்களுக்குப் பொருந்தும் வகை செய்யும்.

ஆகாயத்திலே துந்துமி ஒலியா நிற்கும். வயிரிய கரிய கொம்புகளும் வெண்சங்கும் முழங்கும். இடியேற்றின் இடிப்புப் போன்ற ஓசையுடைய முரசு அதிரும். பல பீலிகளையுடைய மயில் வெற்றிக் கொடியில் இருந்து ஓசையைச் செய்யும். இவ்வகைப் பல ஆர்ப்புடன் ஆகாயமே வழியாக விரைந்து சென்று மிக்க அழகு பொருந்திய சீரலைவாய் என்னும் திருப்பதியில் எழுந்தருளியிருத்தல் முருகக் கடவுளின் நிலைபெற்ற குணமாகும்.

## 3. திருவாவினன்குடி

முனிவர்கள் மரவுரியைத் தைத்த உடையினர்; வடிவு, நிறம், அழகு முதலியவற்றால் வலம் புரிச் சங்கை ஒத்த நரைத்த முடியினர்; நீராடுதலால் அழுக்கின்றி விளங்கும் உடம்பினர். பட்டினியிருந்து விரதங்காத்தலால் என்புக்கோவைகள் தோன்றும் மார்பினர்; தைத்த மான் தோலாகிய போர்வையினர்; பல நாட்பட்டினியிருக்குமியல்பினர்; வெறுப்புஞ் சினமுமில்லா மனத்தினர்; எவ்வகைப் பொருள்களைக் கற்று வல்லுநரும் அறியமுடியாத

அறிவினர்; பலவற்றையுங் கற்றார்க்குத் தாம் வரம்பாயிருக்குந் தலைமையர்; காமம் வெகுளி முதலியன அவிந்த தோற்றத்தினர்; மெய்வருத்தம் உள்ளவேனும் மனவருத்தம் சிறிதும் அறியாத இயல்பினர்.

வெள்ளிய நச்சுப்பற்களையும் அழல்போன்ற மூச்சினையுமுடைய பாம்பைச் சாக அடிக்கும் கருடனை வாகனமாகவும் கொடியாகவு முடைய திருமால் காத்தற்றொழிலுக்குரியர். முப்புரத்தை அழித்த வெற்றியையும், மூன்று கண்களையும், இடபக்கொடியையும், பாகத்தே உமாதேவியாரையு முடைய உருத்திரன் அழித்தற் றொழிலுக்குரியன். நிலத்தே கிடக்கின்ற வளைந்த துதிக்கையினையும் நான்கு மருப்பினையுமுடைய ஐராவதமாகிய வாகனமும், ஆயிரங் கண்களு முடைய இந்திரன் நூறு வேள்விகள் வேட்டு அவற்றின் பலனால் பகைவரை அடக்கிய வெற்றியுடையன். *முப்பத்து மூவர் நாலு வேறுபட்ட இயல்பினையுடையர். கந்தருவர் மெல்லிய வார்த்தையும் முறுக்கவிழ்ந்த மலர் மாலை சூடிய மார்பும், புகையைக் கையினாலள்ளினாற் போன்ற மாசேறாத உடையும் யாழ்வன்மையுமுடையர். காந்தருவ மகளிர் மக்கட்குரிய நோயில்லாத உடம்பும், பொன்னுரை விளங்கினாற்போன்ற அழகிய தேமலும், மாந்தளிர் போன்று விளங்கும் நிறமும் உடையர்.

முருகக் கடவுள் அயனைச் சிறையிட்டனராக உலகிற் படைப்புத் தொழில் இல்லையாயிற்று. அதனால் திருமால் உருத்திரன் முதலானோர்க்குரிய காத்தல் அழித்தற் றொழில்களும் இல்லை ஆயின. தமக்குரிய காத்தல் அழித்தற்

---

* ஆதித்தர் பன்னிருவர், உருத்திரர் பதினொருவர், வசுக்கள் எண்மர், மருத்துவர் இருவர்.

றொழில்களைப் பழமைபோற் பெறவிழைந்த திருமாலும் உருத்திரனும் முருகக் கடவுளின் முனிவை நீக்கி அயனைச் சிறையினின்றும் விடுவித்தல் காரணமாக, இந்திரன் பதினெண் கணங்கள் முப்பத்து மூவர் முதலிய தேவர் களுடன், நட்சத்திரங்கள் போன்ற தோற்றமும், காற்றில் நெருப்புத் தோன்றினு லொத்த வலியும் இடி ஒத்த குரலும் உடையராய் அந்தரத்தே சுழன்று வலஞ்செய்யா நிற்பர். கந்தருவர் தமது மகளிரொடு யாழ்வாசித்துப் பின்னே செல்ல முனிவர்கள் முன்னே செல்லா நிற்பர். இவ் வகைத் தோற்றத்துடன் முருகக்கடவுள் தெய்வ யானை யாருடன் ஆவினன்குடியில் எழுந்தருளுவர்.

## 4. திருவேரகம்

அந்தணர் ஓதல் ஓதுவித்தல், வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் என்னும் ஆறு தொழில்களுடையோர்; தூயமரபில் உதித்தோர்; நாற்பத்தெட்டியாண்டு பிரமசாரி யங் காக்கு மியல்பினர்; தருமத்தையே எந்நாளும் கூறும் கொள்கையர்; நாற் சதுரம், முச்சதுரம், வில்வடிவமாகிய ஆகவனீயம், தக்கணுக்கினி காருகபத்தியம் என்னும் முத்தீ ஓம்புஞ் செல்வமுடையோர்; உபநயனத்தின் முன் ஒன்றும் அதன் பின் ஒன்றுமாகிய இருபிறப்புடையோர்; முந்நூல் கொண்டு முப்புரியாக்கின பூணூலுடையோர்; நீராடுங்கால் தோய்த்த ஆடையைப்புலரும்படி உடுக்கும் இயல்பினர். இவ்வகைப் புனிதர்களாகிய அந்தணர் நறிய பூவைக் கையில் ஏந்தி “நமோ குமராயா” என்னும் மந்தி ரத்தை நாப்புடைபெயரும்படி உச்சரித்துக் குமரக்கடவுளை வழிபட அதற்கு மகிழ்ந்து அவர் திருவேரகத்தில் எழுந் தருளுவார்.

## 5. குன்றுதோறாடல்

வேடர் கொடிய வில்லாற் கொலைத்தொழில் புரியும் இயல்பினர். அவர் மூங்கிற் குழாயிலிருந்து முற்றின தேனாற் செய்த கட்டெளிவை மலை உச்சியிலுள்ள சிறு குடிச் சுற்றத்துடன் உண்டு களிப்பர். தொண்டகப்பறை கொட்ட அவர் குரவையாடுதலைக் கண்ட மான்பிணைபோலுஞ் சாயலுடையமகளிர் தாமும் குரவையாடாநிற்பர். அதனைக் கண்ணுற்ற, கச்சினையும் கழலினையும், சிறு வாத்தியங்களையும்,கிடாயையும்,மயிலையும், கோழிக்கொடியையும், நெடுமையையும், தோள்வளையினையும், துகிலினையுமுடைய முருகக் கடவுள் பொருநராவர் ; பொருநராய், மார்பிலே சந்தனம் பூசிய*வேலன் பச்சிலைக்கொடியும் சாதிக்காயும் இடையிட்டு தக்கோலக் காய், காட்டுமல்லிகை, வெண்டாளி முதலியவற்றைக் கலந்து கட்டிய மாலையை அணிந்து, சிவந்த ஆடையை உடுத்து, அசோகந் தளிரைக் காதிற் செருகி யாழோசைபோலுங் குரலுடைய பாடுமகளிரோடே குன்று தோறுஞ் சென்று (குரவை ஆடும்) குறத்தியர் கையினைத் தழுவி, ஏந்தி, முன்கை கொடுத்து விளையாடுதலும் அவர்க்கு நிலைபெற்ற குணமாகும்.

## 6. பழமுதிர் சோலை

சிறு தினை யரிசியைப் பூவுடனே கலந்து வைத்து ஆட்டு மறி யறுத்து, கோழிக் கொடியை நிறுத்தி ஊர் ஊர் தோறுங் கொண்டாடப் பெறுகின்ற திருவிழாக்களிலும், அன்பர்கள் துதித்து மனம் பொருந்தி இருக்கின்ற இடத்தும், வேலன் வெறியாடு களத்தும் காட்டிலும் சோலையிலும், ஆற்றிடைக்குறையிலும், பல ஊர்களிலும், நாற்சந்

* படிமத்தான், படிமாத்தானெனவும் வழங்கும்.

தியிலும், முச்சந்தியிலும், புதுப்பூவினையுடைய கடம்பி லும், ஊருக்கு நடுவே இருக்கும் மரத்தடியிலும் ஆதீண்டு குற்றியிலும் முருகக் கடவுள் தங்கியிருப்பார்.

குறமகள் அகன்ற நகரிடத்து கோழிக்கொடியை நிறுத்தி, நெய்யும் வெண்கடுகும் அப்பி வழிபடற்குரிய மந் திரத்தை உச்சரித்து அழகிய மலர்களைத் தூவுவாள். மாறு பட்ட நிறத்தையுடைய இரண்டு பட்டாடைகளை உள்ளொன் றும் புறம் பொன்றுமாக உடுத்து சிவந்த நூலைக் கையிற் காப்பாகக் கட்டி வெண் பொரியைத் தூவி இரத்தத்தோடு பிசைந்த வெள்ளரிசியைச் சிறு பலியாக இட்டுப் பிரப்பங் கூடைகளை வைப்பாள். பின்னர் பச்சை மஞ்சளோடு வாசனை மிகுந்த சந்தனம் முதலியவற்றைத் தெளித்து, செவ்வலரி மாலைகளையும் பிறமாலைகளையும் ஒரு மட்டமாக அறுத்து அசையும்படி தூக்கி "மலைப்பக்கத்துள்ள ஊர்களைப் பசியும் பிணியும் பகையும் வருத்தா தொழிக" என்று வாழ்த்து வாள். வாழ்த்தி நறிய தூபங் கொடுத்து குறிஞ்சிப் பண் பாடி மலை அருவியோடு பல வாத்தியங்கள் ஒலிக்க சிவந்த மலர்களைத் தூவி, உதிரமளைந்த தினையினைப் பரப்பி முருகக் கடவுள் மகிழும்படி வாத்தியங்கள் ஒலிப்பித்து வழிபாடு செய்வாள். இவ்வகையான அச்சந்தரும் முருக பூசை செய்யப்படுகின்ற அகன்ற நகரின் கண்ணும் முருகக் கடவுள் உறைவார்.

வெறியாட்டாளர்கள் வெறியாடு களம் ஒலிக்கும்படி பாடி, பல கொம்புகளை ஊதி கொடிய மணியை ஒலிப்பித்து, பிணிமுக மென்னும் யானையை வாழ்த்தி வேண்டினோர் வேண்டிய வரங்களைப் பெறவேண்டுமென்று வழிபட முருகக் கடவுள் அவ்விடத்தில் எழுந்தருளுவார்.

மலையிடத்தினின்றும் கொடிச் சீலைகளைப் போன்று ஆரவாரத்துடன் குதிக்கின்ற அருவிகள் அகில் மரத்தைக்

கொண்டு சந்தனமரத்தைத் தள்ளி, மூங்கிற் கிளைகள் அந்தரிக்கும்படி வேரைக்கிளறும்; தேன் கூடுகளைக் கெடுத்து, பலாச் சுளைகளை வாரி, சுரபுன்னை மலரை உதிர்த்து கருங்குரங்கையும் ஆண்முசுக்களையும் நடுங்கச் செய்யும்; பெண் யானைகள் குளிரால் வருந்தும் படி நீரை வீசி, பொன்னும் இரத்தினமும் நிறம் விளங்கும்படி குதித்து (பொடியாகிய) பொன்னை கரையில் வீசி வாழை துணியவும் தென்னமரத்தின் இளநீர்க் குலை கள் உதிரவும் மோதும்; மிளகு கொடியின் கரிய பூங் கொத்துகளைச் சாய்த்து, மயில்களும் பேட்டுக் கோழிகளும் பயந்தோடச் செய்து ஆண் பன்றிகளும் கரடிகளும் கல் முழைஞ்சில் நுழையவும், கொம்புடைய காட்டுமோடு முழங் கவுஞ் செய்து ஆரவாரிக்கும். இவ்வகையான அருவிகளை யுடைய பழமுதிர் சோலையில் முருகக் கடவுள் அமர்ந்திருப் பார்.

யான் கூறிய அவ்வவ் விடங்களிலே யாயினும் பிற விடங்களிலே யாயினும் முருகக் கடவுள் வீற்றிருப்பார். நீ கண்டவிடத்துக் கை கூப்பித் துதித்து தலை திருவடி யிற்றோயும்படி வணங்குவாயாக. பின்னர் உயர்ந்த இமையமலையினுச்சியில் தருப்பை வளர்ந்த சுனையில் அங்கியங் கடவுள் தன் உள்ளங்கையில் வாங்கி அருந் ததி அல்லாத அறுவரால் பெறப்பட்ட ஆறு வடிவு பொருந்திய செல்வனே! கல்லாலின் கீழிருந்த கடவுளின் புதல்வனே! பெரிய மலை அரையன் மகனே! பகைவர் கூற்றே! வெற்றி அளிப்பவளும் ஆபரணங்களணிந்தவளு மாகிய காடுகிழாள் குழவியே! வளைந்த வில்லையுடைய தேவர்கள் படைத்தலைவனே! எல்லா நூல்களையும் அறிந்த அறிவுடையோனே! போர்த்தொழிலில் நிகரில்லாதவனே! வெற்றியுடைய இளமைப் பருவத்தோனே! அருமறையை

யுணர்ந்த அந்தணர் செல்வனே! சான்றோர் புகழ்ந்து சொல்லும் சொற்களின் பொருளா யிருப்பவனே! தெய்வயானையாருக்கும் வள்ளி அம்மையாருக்கும் கணவனே! வீரர்க்கு இடபமே! வேல் தாங்கிய கையையுடைய செல்வனே! கிரௌஞ்சமலையைப் பிளந்த வெற்றியுடையவனே! அமரருலகைத் தீண்டும் உயர்ந்த மலைகளையுடைய குறிஞ்சி நிலத்துக்குரிமையுடையவனே! கல்வியில் மதயானைபோல்வார்க்குச் சிங்கேறுபோன்றவனே! பிறர்க்குப் பெறற்கரிய வீட்டினையுடைய முருகனே! வீடுபேற்றினைப் பெற விரும்பி வந்தவர்க்கு அதனை நுகர்வித்தலால் பெரிய புகழை ஆளுதலுடையவனே! பிறரால் வருத்தமுற்று வந்தோர்க்கு அருள்செய்யும் சேயே! பெரிய போர்களை முடித்து வென்று கொல்கின்ற நின் மார்பிடத்து பொன்னாபரணங்களை அணிந்த சேயோனே! இரந்து வந்தோரை வேண்டுவன கொடுத்துப் பாதுகாக்கும் நெடியவேளே! தேவரும் முனிவரும் ஏத்தும் பெரிய திருநாமத்தையுடைய தலைவனே! போர்வலியால் சூரபன்மாவின் குலத்தை அழித்த மதவலி என்னும் பெயருடையவனே! என்று நீ அறிந்த துதிகளைக் கூறிப் புகழ்ந்து, "நும்மோடு ஒப்பாரில்லாத மெய்ஞ்ஞானத்தை யுடையவனே! உமது தன்மைகளெல்லாவற்றையும் முற்ற அளவிடுதல் பல்லுயிர்களுக்கெல்லாம் அரிய ஆதலின், நின் பாதாரவிந்தங்களைப் பெறவேண்டு மென்று வந்தேன்" என்று நீ கருதிய வீடுபேற்றை விண்ணப்பஞ் செய்வாயாக. உடனே சேவித்து நிற்கின்ற வேறு வேறு வடிவினையுடைய குறுகிய பல பூதங்கள் தோன்றி, "பெருமானே! நீ அனுக்கிரகிக்கத்தக்கவனாகிய அறிவு முதிர்ந்த புலவன் ஒருவன், நினது புகழினை விரும்பிக் கேட்போர்க்கு உறுதி பயக்கும் இனிய பல வாழ்த்துரைகளைக் கூறி வந்தான்" என்று கூறா நிற்கும்.

அஞ்ஞான்று பழமுதிர் சோலையில் எழுந்தருளியிருக்கும் முருகக் கடவுள் அச்சந்தரும் தெய்வத்தன்மையை உள்ளடக்கிக் கொண்டு தமது இளைய வடிவத்தைக் காட்டி, "நீ வீடு பெற நினைந்து வந்தவரவை நான் முன்னே அறிவேன்; அது நினக்கு எய்துதல் அரிது என்று அஞ்சாதொழிக" என்று உன்மேல் அன்புடைய நல்வார்த்தை களைப் பலகாலும் அருளிச் செய்வார். பின் இவ்வுலகத்தில் நீ ஒருவனுமே பிறர்க்கு வீடளித்தற்கு உரியவனாகத் தோன்றும்படி திருவருளாகிய பரிசிலைத் தந்தருளுவார்.

---

## II. பொருநராற்றுப்படை.*

தனது மனைவியாகிய விறலியுடனும், கரிய பெரிய சுற்றத்துடனும் பரிசில் வழங்கும் வள்ளியோரைப் பெறுமல் அலைந்து திரியும் பாணனொருவன் காட்டு வழியே செல்வானாயினன்.

பாடினி அழகாற் சிறந்தவள். அவள் கூந்தல் ஆற்றின் கருமணல் போன்றது; நெற்றி பிறைபோன்றது; புருவம் கொலைத்தொழிலையுடைய வில்லை ஒத்தது; அழகிய கடைகளோடு கூடிய கண்கள் குளிர்ச்சியைப் பெற்றன; இனிய சொல்லையுடைய சிவந்த வாய் இலவிதழ் போன்றது; பற்கள் முத்தை நிரல்பட வைத்தாற்போன்றன; மகரக்குழைகள் ஊசலாடும் காதுகள் கத்திரிகையின் குழைச்சுப் போல் வடிவமைந்தன; கழுத்து நாணம் வருத்துதலால் பிறரை நோக்காது முன் வளைந்திருக்கும் இயல்பினது.

---

*இது கரிகாற்பெருவளத்தானை முடத்தாமக் கண்ணியார் பாடியது. இவர் காலம் கி. பி. 60—90 பொருநர்—போர்க்களம் பாடுவோர்.

தோள்கள் அசைகின்ற மூங்கில்போற் பருத்துத் திரண்டன ; முன்கை ஐதமயிருடையது ; விரல்கள் நெடிய மலையில் வளரும் காந்தளின் பூப்போன்றன ; நகங்கள் கிளியின் சொண்டுபோல் ஒளியுடையன ; தனங்கள் சுணங்கணியப்பெற்று ஈர்க்கிடை போகாத எழுச்சியையும் அழகினையும் பெற்றிருந்தன ; கொப்பூழ் நீர்ச்சுழிபோன்றது ; இடை உண்டென்று பிறரால் அறியமுடியாது வருந்தும் இயல்புடையது ; அரை பல மணிகள் கோத்த மேகலாபரணங்கள் அணியப்பெற்றது ; துடைகள் பெரிய பெண்யானையின் தும்பிக்கை போன்று திரண்டன ; அடிகள், ஓடியிளைத்த நாயின் நாக்குப்போன்றனவாய், மயிர் ஒழுங்குபெற்ற கணைக்காலுக்குப் பொருத்தமாயிருந்தன.

சாதிலிங்கம் உருக்கிவார்த்தாற் போன்ற சிவந்த நிலத்திலே நண்பகல் வெயிலில் நடந்து செல்லும் பாடினியின் கால்கள் சுக்கான்கற்கள் உறுத்தினமையால் செடி பழுத்தாற்போன்று கொப்புளங்கொண்டன. அதனால் அவள் மேலும் நடத்தற்கு ஆற்றாளாய் யானைகள் உலாவுகின்ற காட்டிடத்தே இலைகள் உதிர்ந்த மராமரத்தின் வலைவிரித்தாலொத்த ஐதநிழலிற் றங்கி இளைப்பாறுவாளாயினள். பின்னர் ஆண்டுறையும் தெய்வம் உவக்குமாறு தனது பாலையாழைக் கையிலெடுத்து வாரியும், வடித்தும், உந்தியும், உறழ்ந்தும் தெய்வங்களைத் துதிக்கும் பாடல்களைப் பாடினாள்.

அப்பாலையாழின் பத்தல், மானினது குளம்பழுந்தின இடம்போன்று இரண்டருகுந்தாழ்ந்து நடு உயர்ந்துள்ளது. இரண்டு தலையுங் கூட்டித் தைக்கப்பெற்ற போர்வை பொன்னிறத் தோலினாலாயது. இரண்டு பத்தருஞ் சேர்வதற்குக் கடாவிய ஆணி நண்டின் கண்போன்றது ; வாய்

எட்டாநாட் சந்திரன் போன்று உண்ணுக்கில்லாதது. கரியதண்டு பாம்பு தலையை நீட்டினாற் போன்ற தோற்றத் தினையுடையது. வார்க்கட்டு பெண்கள் கையிலணியும் வளையல்கள் போன்றது. விரலாலசைக்கும் நரம்புகள் தினையின் குற்றலரிசி போன்றன.

இவ்வாறு பாணன் விறலியுடனும் தனது சுற்றத் துடனும் இளைப்பாறு நிற்க, கொடையாற் சிறந்த சோழன் கரிகாற் பெருவளத்தானைப் பாடிப் பரிசில் பெற்றுவருவா னொருவன் அவ்வழிப் போந்தான். அவன் மிடியால் மெலிவுற்ற பாணனை நோக்கிக் கூறுவான்: விழாக் கொண் டாடுங் காலத்துச் சுற்றத்துடன் மிகுந்த சோற்றை உண்டு மகிழ்ந்து அது கழிந்த பின்னர் பிறிதோர் விழாக் கொண் டாடும் ஊரை அடையும் பொருநனே! யாழையுடைய கூத்தர்க்குத் தலைவனே! மற்றவர் புகழை அரசர் அவை களில் மேம்படுத்த வல்லவனே! யான் கூறுகின்றவற்றை விரும்பிக் கேட்பாயாக. வழியறியாமையால் இவ்வழியைத் தப்பி வேறொரு வழியிற் செல்லற்க. இவ்வழியிடத்து நீ என்னைக் காணப்பெற்றது நீ முற்பிறப்பிற் செய்த நல்வினையின் விளைவாகும். உன்னுடைய கரிய சுற்றத் துடன் தொன்றுதொட்டு வரும் பசி வருத்தம் உன்னை வருத்துதலை விரும்பாயாயின் விரைவில் எழுந்திருப்பாயாக. யானும் பழுமரத்தைத் தேடித்திரியும் பறவைபோலப் பரிசில் தருவாரைத் தேடி அலைந்தேன். ஒருநாள் கரிகாற் சோழனது ஆரவாரமிக்க கோபுரவாயிலை அடைந்து வாயில் காப்போனுக்குங் கூறாது உள்ளே சென்றேன். செல்லும் மகிழ்ச்சியால் எனது இளைப்பு நீங்கியது. எனது உடுக் கையின் கண்கள் கைபடுதலினால் பாம்பின் படத்தி லுள்ள பொறி போன்ற தழும்புகள் பெற்றிருந்தன. அதனிடத்து இரட்டைத் தாளத்தைப் பிறப்பித்து

எனது வறுமை தீரும்படி ஒரு பாட்டுப் பாடினேன். அப்போது (விடி) வெள்ளியின் வெளிச்சம் தோன்றுகின்ற விடியற்காலமா யிருந்தது. உடனே அரசன் உறவினரைப்போல் நான் தன்னிடத்தில் உறவு கொள்ளும்படி பல உபசார வார்த்தைகள் கூறித் தான் எப்பொழுதும் பார்க்கக்கூடிய சமீபத்தில் என்னை இருக்கும்படி செய்தான். அவன் என்னை அன்புடன் நோக்கினான்; அதனால் எனது எலும்புகள் உருகும்படி குளிர்ந்தன. ஈரும் பேனும் அரசாட்சி செய்ததும்,வியர்வையால் நனைந்ததும்,பலதையல்கள் உடையதுமாகிய எமது பழைய சீலையைக் களையும்படி செய்தான். அதற்குப் பதிலாக நூல் போனவிடம் இது என்று அறிய முடியாத நுண்மையுடையதும், பல பூவேலையுடையதுமாகிய பட்டாடைகளை உடுக்கும்படி தந்தான். அரண்மனையிலே இருந்த அழகிய ஆபரணங்களை அணிந்தவர்களும், பாட்டாலும் கூத்தாலும் அரசனை மகிழ்விப்பவர்களுமாகிய மகளிர் பொன் வள்ளத்திற் கள்ளை வார்த்துத் தரத் தர வழி நடந்த வருத்தந் தீரும்படி நிறைய உண்டு இதுகாறும் கள்ளுண்ணப் பெறுகிலேன் என்னும் வருத்தத்தைப் போக்கினேன். மாலைக் காலத்தில் களிப்பு மிகுந்தவனாய் அரண்மனையின் ஒரு புறத்தில் தங்கினேன். தவஞ் செய்வோர் தம்முடைய தவஞ்செய்யும் உடம்பை அழிய விடாது அத்தவத்தாற் பெறும் பயனைப் பெறுவதுபோல் வழி நடந்த வருத்தஞ் சிறிது மில்லாமற் போக்கினேன்.

கள்ளுண்டதினாலுண்டான மெய்வருத்த மல்லாது வேறு வருத்தம் யாதுமின்றி நித்திரை விட்டெழுந்தேன். அரசனைக் காண்பதற்கு முதனாள் சொல்லுக் கடங்காத வறுமையுடையனா யிருந்தேன். அரசனைக் கண்ட மற்ற நாட் காலையில் என்னைக் கண்டோர் நேற்று வந்தவன் இவனல்ல

வென்று சந்தேகித்தனர். யான் பலவகை வாசனைத் திரவி யங்களை உடம்பிற் பூசியிருந்தேன்; அதனால் வண்டுகள் இடையறாது என்னை மொய்த்தன. இது கனவாயிருக்கலா மென்று நினைத்தேன். அது நனவென்று எனது நெஞ்சு துணிந்து சொல்லிற்று. கொடிய வறுமையால் வருந்திய எனது சுற்றத்தார் மகிழ்ச்சி அடைந்தனர். நான் இப்போ மாறுதல் அடைந்திருந்தாலும் 'நேற்று வந்த இரவல னிவனே' என்று இளைஞர் சொல்லிக் காட்டினர். அதனைக் கேட்ட அரசன் அவர்களை காவலாளர்களால் அழைத்து செய்யும் முறைமைகளைச் செய்தனுப்பினான். யானும் எனது சுற்றமும் அறுகம் புல்லாற்றிரித்த பழுதையைத் தின்ற செம்மறிக்கிடாயின் புழுக்கிய இறைச்சியைத் தின்றேம். இரும்புக் கம்பியில் கோத்துப் பொரித்த கொழுத்த இறைச்சிப் பொரியலை வாயின் இடப்புறத்தும் வலப்புறத்தும் சேர்த்தி ஆற்றி உண்டு களித்தேம். இவ்வாறு இறைச்சிப் பொரியலையும் புழுக்கினையும் உண்டு அலுத் தேம். இன்னும் பல வேறு வடிவினையுடைய பலகாரங் களையும் உண்டேம். கள்ளுண்டு பல நாட்களைப் போக் கினேம். சோறு உண்ணுதல் வேண்டும் என்று கூறி அரசன் முல்லை முகை போன்ற சோற்றையும் பொரிக்கறி யையும் கழுத்துவரையும் நிரம்பும்படி புசிக்கத்தந்தான். பகலு மிரவும் இறைச்சியைத் தின்றதனால் எம்முடைய பற்கள் கொல்லை நிலத்தை உழுத கொழுப்போல முனை மழுங்கின. இளைப்பாற நேரமின்றி உணவுகளை உண்டு வெறுத்தேம். நாங்கள் எமது ஊருக்குச் செல்லுதல் வேண்டுமென்று ஒருநாள் அவனிடத்தில் மெதுவாகக் கூறி னேம். அதைக்கேட்டுக் கோபித்தவன் போல யாம் வருந் தும்படி பார்த்து "எமது கூட்டத்தை விட்டுப் போகின் றீரோ" என்று கூறினான். அவன் யானைகளைக் கன்று

களுடன் கொடுத்தான். இன்னும் பல வாகனங்கள், ஆடைகள், ஆபரணங்கள் முதலியவற்றைத் தந்தான். அவற்றை வாரிக்கொண்டு இனி எக்காலமும் வறுமை இல்லையாகும் படி வருகின்றேம்.

இரவலனே! தலைவனாகிய கரிகாற்பெருவளத்தான் முருகனது சீற்றம்போன்ற கோபமுடையன். அவன் தாய் வயிற்றிலிருந்தே அரசுரிமையைப் பெற்றுப் பிறந்தான். தவழுங்காலந் தொட்டே அவன் மிகுந்த வலிமை பெற்றிருந்தான். அவன் ஆத்திமாலையைத் தரித்துள்ளான். பனங் குருத்தினாற் கட்டிய மாலையணிந்த சேரனையும் அரத்தின் வாய்போன்ற வேப்பிலையாற் றொடுத்த மாலையைத் தலையிலணிந்த பாண்டியனையும் அவன் வெண்ணி என்னும் இடத்திற் பொருது வென்றான். வெற்றிவேந்தனாகிய அவன்முன் உங்கள் வறுமை புலப்படும்படி நிற்பீர்களாயின், கற்றா தனது கன்றுக்குப் பால் சுரந்து கொடுக்க விரும்புவதுபோல அவன் உங்கள் வறுமை நீங்கத்தக்க பரிசில் தருவான்; உங்கள் பாடல்களைக் கேட்பதற்குமுன் கொட்டைப்பாசியின் வேர்போல அழுக்கடைந்த தையலையுடைய துணிகளைப் போக்கும்படி செய்து சிறு துஞ்சங்களைக் கரையிலேயுடைய பட்டாடைகளைத் தரிக்கும்படி தருவான். பூநாறுங் காரமுள்ள கள்ளைப் போதும் போதும் என்னும்படி பொன் வள்ளத்தில் வார்த்து நாடோறும் நல்குவான்; பாடினியின் சுருண்ட மயிரிலே பொற்றாமரை மலரைச் சூட்டி அணிவதற்கு பொன்னரிமாலையும் முத்து மாலையும் கொடுப்பான். யானைத் தந்தத்தாற் செய்த மூகையினையுடைய தேரில் நாலு குதிரைகளைப் பூட்டி அதில் உன்னை ஏற்றி ஏழடி பின் சென்று விடுவான். பின் நிலையில்லா உலகத்துப் புகழைச் சீர்தூக்கி நீ பெற்ற பரிசிலைப்

பிறர்க்குங் கொடுத்துச் செல்லுதி எனக் கூறிப் பல மருத நிலத்து ஊர்களையும், பல யானைகளையுந் தருவான்.

சோழநாடு மிகுந்த வளப்பமுடையது. திடர் கடோறும் நெற்கூடுகள் (குதிர்) கிடக்கும். குடியானோர் தென்னஞ் சோலைகளின் நடுவே குடியிருப்பார்கள். காக்கைகள் உதிரமளைந்த சோற்றை உண்டு வீட்டைச் சூழ்ந்த நொச்சியின் நிழலில் பொரித்த ஆமையின் பார்ப்புகளைப் பசிக்காலத்து உண்பதற்கு மறைத்துவைக்கும். நெய்தல் நிலத்து மணற் குன்றிலே உழத்தியர் வண்டலிழைத்து விளையாடுவர். பாகற் பழத்தையும் பலாப் பழத்தையும் தின்ற மயில்கள் வளைந்த காஞ்சி மரத்திலும் மருதிலுமிருந்து பெடை யழைக்கும்போது செல்லும்; சென்று யாழின் ஓசைபோன்ற வண்டின் பாடலைக் கேட்டு அதற்குப் பொருந்த நிலவுபோலும் மணலில் நின்று ஆடும். நாட்டின்கண் கரும்பும், நெல்லும், அடும்பும், பகன்றையும். புன்கும், ஞாழலும் ஏனைய மரங்களும் செறிந்து நிற்கும், அவ்விடத்துறைவோர் நாட்டு வாழ்க்கையை வெறுத்தாராயின் நீல நிறமுடைய முல்லைக் கொடி படர்ந்த காட்டு நிலத்தே சென்று வாழ்வர். அங்கு தளவும், முல்லையும், தேற்றாவும், கொன்றையும், காயாவுமாகிய மரஞ் செடிகள் உண்டு. முல்லை நிலத்தில் வாழ்வோர் அதனை வெறுத்தாராயின் மருத நிலத்தே சென்று வாழ்வர். சுறு உலாவுகின்ற கடலிடத்து இருலைத்தின்ற நாரை புன்னைக் கொம்பில் வந்து தங்கும்; புன்னை மரத்தின்மீது கடல் எறிகின்ற நீரின் ஆரவாரத்துக்குப் பயந்து எழுந்து பனை மரத்திற் றங்கும். பாக்கம் குலைத் தெங்கினையும், குலை வாழையினையும், காந்தளையும், மலர்ந்த சுரபுன்னையையும், பேராந்தையையு முடையது. அவ்விடத்து வாழும் பரதவர் நெய்தல் நிலத்தை வெறுப்பின் குறிஞ்சி நிலத்தே

சென்று வாழ்வர். தேனும் கிழங்கும் விற்றோர் மீனின் நெய்யொடு மதுவையும் பண்டமாற்றுச் செய்து செல்வர். மருதநிலத்து வீடுகளில் வளர்க்கப்படும் கோழிகள் தினையை உண்ணும். மலையிடத்துத் திரிகின்ற மந்திகள் கழியில் மூழ்கும். கழியிலிருந்து எழும்பிய நாரைகள் மலையிடத்துத் தங்கும். இவ்வகையாக நான்கு நிலங்களும் மயங்கி இருக்கும் உலகத்துக்குத் தண்ணளி செய்தற்கு எடுத்த செங்கோலையுடைய தலைவன் வாழ்க! வெயிலின் வெப்பமிகுதியால் தாமரையும் குவளையும் தீயும். மரக்கொம்பர்கள் கரியும். மலைகளிடத்து அருவிகள் வறளும். மேகங்கள் கடல் நீரை முகத்தலைத் தவிரும். இவ்வகையான வற்கட காலத்தும் நுரையைத் தலையிலுடைய காவிரிநீர் நறைக்கொடியையும், நரந்தப் புல்லையும், அகிலையும், சந்தனத்தையும் துறைதோறும் தள்ளி குளத்திலும் கோட்டத்திலும் புகும். நீராடு மகளிர் நீர் விளையாடுவர். நெல்லறுப்போர் அரிவாளால் அரிந்த நெற்போரினை மலைபோல் உயரும்படி அடுக்குவர். உழவர் நாடோறுங் கடா விட்டு நெல்லைத் திரட்டுவர்; அதனை குதிர் நிறையும்படி இடுவர். வரப்புகளுடைய வேலி நிலம் ஆயிரம் கலம் நெல் விளையும். கரிகாற் பெருவளத்தான் இவ்வாறு வளம் பொருந்திய காவிரி நாட்டுக்குத் தலைவன்.

## III. சிறுபாணாற்றுப்படை*

மூங்கிலாகிய தோளையுடைய நிலமகளுக்கு மலைகள் மார்பிற் பொருந்திய பெரிய தனங்களாகும். மலையின் உச்சியினின்றும் இழிந்து ஆற்றிடைக் குறையில் பிளவு பட்டு பின் ஒன்று சேர்ந்து செல்லும் காட்டாறு அவ் வழகிய தனங்களில் அணியப்படும் முத்து வடமாகும். காட்டாற்றினால் குளிர்ச்சியைப் பெற்ற மரங்கள் மலர்களை நிறையப் பூக்கும். குயில்கள் அலகினாற் கோதி உதிர்த்த மலர்கள் உலர்ந்து கருமை எய்திய தோற்றம் இளவேனில் தனது மயிரை விரித்தாற்போன்றது. முதுவேனிற் காலத்து வெயிலால் வெம்மை பெற்றவேல் போற்கூரிய பருக்கைக் கற்கள் அரிய காட்டிடத்து வழி நடப்போரின் கால்களைக் கிழிக்கையினால் அவர்கள் மென்மையாக நடந்து கடப்ப நிழலில் இருந்து இளைப்பாறிப் போவார்கள். முதுவேனிற் காலம் ஞாயிறின் வெப்பத்தால் பாலைத் தன்மையுடையதா யிருக்கும். பாலைத் தன்மையாவது காலையும் மாலையும் நண்பகலன்ன கடுமை கூரச் சோலை தேம்பிக் கூவல் மாறி நீரும் நிழலுமின்றி நிலம் பயந்துறந்து புள்ளும் மாவும் புலம் புற்று இன்பமின்றித் துன்பம் பெறுவதொரு காலம்.

இவ்வகையான பாலைத்தன்மையுடைய காட்டுவழி யிலே, மான்போன்ற நோக்கும், கரியகூந்தலும், ஓடி இளைத்த நாயின் நாக்குப்போன்ற அடிகளும், யானையின் துதிக்கை போற் பருத்து வாழைத்தண்டைப்போற் றிரண்டு ஒன்றோ டொன்று நெருங்கிய தொடைகளும், வாழைப்பொத்தி போன்ற கொண்டையும், கோங்கின் முகைபோன்ற

---

* எறுமாநாட்டு நல்லியக்கோடனை இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியது. காலம் கி. பி. 70—90.

சுணங்குடைய தனங்களும், அழகிய பற்களும், முல்லை சூடுதற்கமைந்த கற்பும் உடையளாகிய விறலி நடக்கையினாலே இளைப்புற்று கடம்பின் நிழலிலே தங்கினாள். அவளது இளைத்து ஓய்ந்த அடிகளைச் சிறுவர் கையினாற் றடவினர். பாணன் பொற்கம்பிபோன்று முறுகிய நரம்புடைய பாலையாழை இடப்பக்கத்தே தழுவி நட்டபாடை என்னும் பண் வாசித்தான். பரிசிலளிக்கும் வள்ளியோரைப் பெறாமல் காட்டிடத்தே இருந்து வருந்திய சிறுபாணனை, நல்லியக்கோடனைப் பாடிப் பரிசில் பெற்று வருகின்றாேனொருவன் எதிர்ப்பட்டுக் கூறுவான்: பாணர் தலைவனே!

மேற்கே உள்ள சேரநாட்டிலே எருமைகள் கொழுத்த மீன்கள் நொறுங்கும்படி நடந்து சென்று செங்கழுநீர்ப் பூவை உண்ணும்; உண்டு மிளகு கொடி படர்ந்த பலாவின் நிழலில் மஞ்சளின் மெல்லிய இலை தனது முதுகைத் தடவும் படியாக காட்டுமல்லிகையாகிய படுக்கையிலே கிடந்து, தேன் நாறும்படி மென்று அசையிட்டுத் துயில்கொள்ளும். இவ்வாறு செழுமை மிகுந்த நாடுகளையும், வலிய தோளினையும், ஓடுகின்ற தேரினையுமுடைய சேரனது வஞ்சி என்னும் ஊரில் கிடைக்கும் பரிசில நல்லியக்கோடன் கொடுக்கும் பரிசிலினும் சிறிதாயிருக்கும். தெற்கே உள்ள கொற்கை என்னும் நாட்டிற்குத் தலைவன் பாண்டியன். அந்நாடு திரையையுடைய கடலை எல்லையாகவுடையது. *தேன் பனிக்கின்ற பூக்களுடைய முதிர்ந்த நுணைத்தடியை உளியினாற் கடைந்து செய்யப்பட்டு செவ்வரக்குப் பூசிய அச்

* "நுணைத் தடியைச் சீவிச் சிவப்புப் பூசிக் கட்டப்பட்ட மார்பையுடைய மந்தி முத்தைக் கிளிஞ்சிலில் பொதிந்து கிலுகிலுப்பையாகக் கொண்டு உமணச் சிறாரோடு விளையாடும்" எனவும் பொருள் அமையும்.

சுத் தங்குகின்ற குடங்கள் உடைய உப்புவாணிகர் வண்டிகளை, செவியடியில் கிடேச்சையாற் செய்த பூமாலையை நெற்றிமாலையாக அணியப்பெற்ற வலிய எருதுகள் இழுத்துச் செல்லும். உப்பு வாணிகரால் பிள்ளைபோல் வளர்க்கப்பட்ட குரங்குகள் வண்டிகளோடு வரும். பெண்களின் பற்கள் போன்ற வெள்ளிய முத்துவடத்தையும்,வாள்போன்ற கிளிஞ்சிலையும் அரையிலே அணிந்துள்ள உப்புவாணிகரின் மனைவியரீன்ற ஆபரணங்களணிந்த பிள்ளைகளுடன் மந்திகள் கிலுகிலுப்பையைக் கையிற் கொண்டு விளையாடும். தமது நாயகரைத் தழுவுகின்ற உமட்டியர் ஐம்பாலாக முடிந்த மயிரினையுடையர். இவ்வகையான சிறப்பமைந்த கொற்கை என்னும் நாட்டையும், வெண்கொற்றக் குடையையும், தேரையும், முத்துமாலையையுமுடைய பாண்டியனிடத்திற் சென்று பெறும் பரிசினும் நல்லியக்கோடனிடத்திற் பெறும் பரிசில் பெரிதாகும்.

மருத நிலத்தே கடப்ப மரங்கள் மாலைபோல நெருங்கிப் பூத்திருக்கும். அம்மலர்கள் உதிர்க்கும் இந்திரகோபத்தை ஒத்ததாது பரத்தலினாலே நீர் உண்ணும் கரை சித்திரம் போல் விளங்கும். அத்துறையினிடத்தே மலர்ந்திருக்கும் தாமரை மலராகிய பீடத்தில் தும்பி தனது பெடையைத் தழுவி மகிழ்ந்திருந்து 'சீகாமர' மென்னும் பண்ணைப் பாடும். கிழக்குத் திசையின்கண் இவ்வகையாகச் செழிப்பு மிகுந்துள்ள நாட்டுக்குத் தலைவனாகிய சோழன் தூங்கெயி லெறிந்த வீரவளை விளங்கும் கையுடையன். அவ்வரசனது உறந்தை என்னும் நகரிற் சென்று பெறும் பரிசில் நல்லியக் கோடன் நல்கும் பரிசினும் சிறிதாகும்.

பருவம் பொய்யாது மழை பெய்தலால் செல்வமிகுந்த மலைப்பக்கத்தே திரியும் மயில் கூவா நின்றது. அதனைச் செவிக் கொண்ட பேகனென்னும் வள்ளல் அது குளிர் மிகுதியாற்

கூவிற்றென்று கருதி தனது போர்வையை அதற்கு அளித்தான். சுர புன்னையின் நறிய பூ தேன் துளிக்கின்ற வழியிடத்தே கொழுகொம்பின்றி கொழுந்தெறிந்த சிறிய பூக்களையுடைய முல்லைக்கொடி படர்தற்கு பறம்பு மலைக்குத் தலைவனாகிய பாரி தனது தேரைக் கொடுத்தான்.

காரி என்னும் வள்ளல் மணியையும் தலையாட்டத்தையுமுடைய குதிரையோடு தனது நாட்டையும் இரவலர்க்குக் கொடுத்தான்.

ஆய் என்னும் வள்ளல் பாம்பு ஈன்று கொடுத்த ஒளியுடைய நீலப் பட்டாடையை ஆலின் கீழமர்ந்த கடவுளுக்கு அன்பு மிகுந்து அளித்தான்.

கமுகம் பூக்களையுடைய பக்க மலையினின்று (இளமையைக் கொடுத்தலின்) அமிழ்தின் தன்மையுடைய நெல்லிக் கனியைப் பெற்ற அதிகன் அதனை ஔவையாருக்கு அளித்தான். நள்ளி என்னும் வள்ளல், தன்னை நட்புச் செய்தோர் மகிழ்ந்து இல்லறம் நடத்தற்கு வேண்டும் பொருள்களை நாடோறும் நல்கினன்.

காரி என்னும் குதிரையைப் பெற்ற காரி என்னும் வள்ளலுடன் போர் செய்த ஓரி என்னும் வள்ளல் முதிர்ந்த சுர புன்னையும், குறிய மலைகளுமுடைய நல்ல நாடுகளை கூத்தாடுவோர்க்குக் கொடுத்தான். இவ்வெழுவரது கொடையையும் தாங்கி நிற்கும் ஒருவனாகிய நல்லியக்கோடனிடத்துச் செல்வீர்களாக. அவன் பகைவரது மார்பிலும் முகத்திலும் வெட்டின வீரவாளையும் புலிபோன்ற வலிமையுமுடையன் ; ஓவியர் குடியில் உதித்தோன் ; நறும் பூக்களையுடைய சுரபுன்னையையும், அகிலையும், சந்தனத்தையும், நீராடுந் துறையில் புனலாடும் மகளிர்க்குத் தெப்பமாக

தருகின்ற நீர் மோதுகின்ற இலங்கையின் அரசர் தோன்று தற் கிடனுயுள்ள ஒவியர் குடியிற் பிறந்தோன். அவனது பிறங்கிடாத அடிகளில் வீரக்கழல் கிடந்தசையும்; மழைபோன்ற கைகள் வாச்சியங்களுடைய கூத்தரைப் புரந்து பிடிகளை அளிக்கும். இரவலனே! நாங்கள் நல்லியக் கோடனையும் அவன் றந்தையின் மலையிடத்தேயுள்ள செல் வத்தையும் பாடிச் சென்றேம். அக்காலத்து எமது வறுமை சொல்லுக்கடங்காது. எமது இல்லில் தாயின் முலை உண்ணுதலைப் பொறுத்தல் ஆற்றாத நாய்க்குட்டிகள் பசி மிகுதியாற் சத்தமிட்டன. அடுக்களையின் கண் தடிகள் கட்டறுந்து கீழே விழுந்தன. வரிச்சுகள் சுவரின்கண் எழும்பிய கறையானல் உண்ணப்பட்டன. பசியால் வருந்திய ஒடுங்கிய நுண்ணிய இடையும் வளையலணிந்த கையுமுடைய கிணையனுடைய மகள் குப்பையினின்றும் நகத்தினுற் கிள்ளிய கீரையை உப்பில்லாமற் சமைத்து கரிய சுற்றத்துடன் பசி நீங்கும்படி உண்டாள். இவ்வகையான கொடிய வறுமையும் பசிப்பிணியும் இனி இல்லையாகும்படி மதஞ் சொரியும் யானைகளையும் பெரிய தேரையும் பெற்று அவ்விடத்தினின்றும் வருகின்றேம்.

இரவலனே! கடற்கரையிடத்துள்ள தாழை அன்னம் போற் பூவை ஈனும். செருந்தி பொன் போற் பூவை மலரும். கழிமுள்ளி நீலம் போற் பூவைப் பூக்கும். புன்னை முத்துப் போல அரும்புகளை முகிழ்க்கும். இவ்வகை யான கழி சூழ்ந்த ஊர்களையும் குளிர்ச்சி பொருந்திய குளங்களையு முடைய எயிற்பட்டினத்தே செல்வாயாக. அங்கு அரும்பவிழ்ந்த மாலை யணிந்தவனும் பல தோட்டங் களுடையவனுமாகிய கிடங்கில் என்னும் ஊர்க்கரசனைக் கண்டு பாடுவையாயின் அவன் அதற்கு மகிழ்ந்து விறலியும் உனது சுற்றமும் மகிழ்ந்து உண்ணும்படி சுட்ட குழல்

மீனைத் தருவான். பாதவர் உண்ணும்படி கள்ளினைத் தருவர்.

அக்கள் திரை கொண்டுவந்ததும், உறங்குகின்ற ஒட்டகம் போற் குவிக்கப்பட்டதுமாகிய அகில் விறகை மூட்டி எரித்து பெரிய தோளும் மதிபோல் மறுவில்லாத முகமும் வேல்போல் நோக்குமுடைய நுளைச்சியரால் அரிக்கப்பட்டது.

நெய்தல் நிலத்தைக் கடந்து காட்டு வழியே செல்வை யேல் பவழம் போற் பூத்த அவரையையும், மயிலின் கழுத்துப்போற் பூத்த கரிய அரும்பினையுடைய காயாவையும், கைவிரல்போல் மலர்ந்திருக்கும் காந்தளையும் காண்பாய். வழியிடத்தே வானவில் தோன்றும். முல்லைக் கொடிகள் படர்ந்திருக்கும். முழைஞ்சுகளில் குதிக்கும் அருவியினை யுடைய அத்த கிரியில் ஞாயிறு மறையும். அந்திக் காலத்து வேலூரை அடைவையாயின் நீ உனது சுற்றத் துடனே உண்டு பசி நீங்கும்படி எயிற்றியர் சமைத்த புளிங்கறியி டப்பட்ட சோற்றை ஆமானின் சூட்டிறைச்சியுடன் பெறுகுவை.

மாலை தொடுத்தாற் போன்று மலர்ந்த பூக்களுடைய கிளைத்த காஞ்சி மரத்தின் கிளைகளில் ஏறி இருக்கும் பொன்னிற வாயினையும் நீலமணி நிறத்தினையுமுடைய சிச்சிலிப் பறவை நீரிலே மூழ்கி மீன்களை எடுக்கும். சிச்சிலிப் பறவையின் காலாற் கிழிக்கப்பட்ட இலைகளையுடைய தாமரை மலரில் தேனுகர்க்கின்ற நீலநிறத்தினையும் சிவந்த கண்ணினையுமுடைய வண்டுகள் சந்திரனைச் சேர்ந்த கரும் பாம்பு போலத் தோன்றும்.

அழகிய வயல்களையுடைய ஆமூர் அழகையும், அரிய காவலையும், அகன்ற வீடுகளையும், அந்தணர் குடியிருப்

பினையுமுடையது. வீட்டின் உள்ளே இருக்கும் உழவருடைய மனைவியர் யானையின் துதிக்கைபோன்று பின்னே தூங்கும் பின்னிய மயிரினையும், வளையலணிந்த கையினையுமுடைய தன் பிள்ளைகளைக் கொண்டு நும் எல்லோரையும் போகாதபடி தடுப்பர்; தடுத்து பூணுலக்கையால் குற்றின அரிசியை அட்ட சோற்றை ஞெண்டும் பீர்க்கங்காயும் கலந்த புழுக்குடன் உண்ணும்படி தருவர்.

மேல்நோக்கி எரிகின்ற நெருப்புச் சாய்ந்தாலொத்த நாக்கும், வெள்ளாட்டு மறிகள் தூங்குகின்ற காதும், கவைத்த காலும் உள்ள பேய்மகள் பிணத்தைத் தின்று சிரிக்கும்போது விளங்குகின்ற பற்கள் போன்று, போர்க்களத்தே பிணத்தலைகளைப் பெரிய கால்களாற் றள்ளுதலாற் சிவப்பேறிய நகங்களுடைய யானையின் மத அருவி தெருவில் எழுந்த தூசியை அவிக்கும்.

அரசனது விழாக்கொண்டாடும் மூதூர் சேய்மையிலன்று. அவனது கோபுரவாயில்மேரு ஒரு கண் விழித்துப் பார்த்தாற் போன்றது. அதன் வாயில் கிணைப்பொருநர்க்கும், அறிவுடையோர்க்கும், அந்தணர்க்கும் ஒருபோதும் அடைக்கப்படாது. ஏனையவர்களுக்கு அடைக்கப்பட்டிருக்கும் அவன் பிறர் தனக்குச் செய்த நன்றியை அறிந்து அவர்க்குத் தானும் நன்றியைச் செய்வான்; அறிவும் ஒழுக்கமும் இல்லார் அவனிடத்தில் இடம் பெறார். தன்னை நோக்கினார்க்கு எக்காலமும் இனிய முகமுடையன். தம்மோடு உடனிருப்போர் புகழும்படி தமது வீரத்தைக் கண்டு அஞ்சி அடிபணிந்தார்க்கு அருளுவன். தனது கெட்ட படையைத் தாங்கி வாள்வலியிற் சிறந்த வீரர் புகழும்படி தான் விரும்பியவற்றை முடிப்பன். பெண்கள் வசத்தனாகாத் தன்மையுடையன். பரிசிலர் தரமறிந்து அவர் பெறத்தக்க

வற்றைக் கொடுக்கு மியல்பினன். கல்வியில்லாத பரிசிலர்க்கும் கொடாதிருத்தலை மேற்கொள்ளாது அவர்களளவிற்குத் தக்கவற்றைக் கொடுப்பன். இயலிசை நாடகத்தாலும் இனிய மொழிகளாலும் மகிழ்ச்சியைத் தரும் தனது திரளோடே பல மீன்களுக்கு நடுவிருக்கும் மதிபோல விளங்குவான்.

குரங்கு பாம்பின் றலையைப் பிடித்தால் அப் பாம்பு ஒரு கால் இறுகவும் ஒரு கால் நெகிழவும் அதன் கையை எப்படிச் சுற்றுமோ அப்படியே யாழ்த்தண்டினிடத்தே நெகிழவேண்டிய இடத்து நெகிழ்ந்தும், இறுகவேண்டிய இடத்து இறுகியும் சுற்றின நரம்பு துவக்கும் வார்க்கட்டும், காவிநிறம் ஊட்டப்பட்ட போர்வையும், அமிழ்தத்தைத் தம்மிடத்தே பொதிந்த தன்மையுடைய நரம்புகளுமுடைய யாழைக் கையில் எடுப்பாயாக. எடுத்து அரசன், உவாத்தியாயன், தாய், தந்தை, தமையன் முதலியோர்க்குப் பல காலும் குவித்தகையை யுடையவனே! வீரர் எறிதற்கு மகிழ்ந்து கொடுத்த மார்புடையவனே! ஏரினையுடைய குடிமக்களுக்கு நிழல் செய்யும் செங்கோலுடையவனே! என்று அவனது சில புகழினைக் கூறுவாயாக. அங்ஙனங் கூறுவதன் முன் மூங்கில் ஆடையை உரித்தாற் போன்ற குற்றமில்லாத உடையை உடுக்கும்படி செய்வான். பாம்பின் விஷம்ஏறி மயங்கினாற்போல மயக்கந்தரும் கட்டெளிவைத் தருவான். வீமசேனனது மடைநூலிற் கூறியபடி சமைத்த சாதத்தைப் பொற்கலத்திலிட்டுத் தானுடனின்று உண்ணும்படி செய்வான். முடிவேந்தர்க்குரிய அரண்களை அழித்து பகை அரசர் நாட்டிற் பெற்ற பொருளால் தம்மைவிரும்பி வந்தார்களதும், பாணரதும் வறுமையைப் போக்குவான். உளிகளால் வேலைப்பாடு செய்யப்பட்ட தேரோடு யானை, குதிரை, அணிகலன் முதலியவற்றைத் தந்து உன்னை

அனுப்புவான். ஆதலால் குறிஞ்சி நிலத்தையுடையவனும் தழைவிரவினமாலை யணிந்தவனும் பெரும் புகழுடையனுமாகிய நல்லியக்கோடனிடத்துச் செல்வாயாக.

---

## IV. பெரும்பாணாற்றுப்படை*

முதுவேனிற் காலத்து பல கிரணங்களையுடைய ஞாயிறு பரந்த ஆகாயத்தின்கண் நிறைந்த இருளைப் போக்கா நின்றது. யாழை இடப்பக்கத்தே அணைத்த பெரும்பாணன் ஒருவன் தனது கரிய பெரிய சுற்றத்துடன் ஞாயிறும் திங்களும் மேருவை வலஞ்செய்கின்ற கடல் சூழ்ந்த உலகில் தன்னைப் புரப்பாரைப் பெருமையால் அலைந்து திரிவானாயினன். அவனது தோட்புறத்தே அணைத்திருந்தயாழ் இருண்ட உண்ணாக்கில்லாத வாயுடையது. அதன் கவைத்தகடை பிறை ஏந்தினாலொத்தது. வார்க்கட்டு பெண்கள் கையிலணியும் வளையலொப்ப நெகிழ வேண்டிய இடம் நெகிழ்ந்து இறுகவேண்டிய இடம் இறுகப்பிணிக்கப் பெற்றது; கரிய பெரிய தண்டு நீலமணி ஒழுகினாற் போன்றது; நரம்புகள் இழுக்கப்பட்ட பொற் கம்பி போன்றன; போர்வை விரியாத கமுகம் பூவைப் போலத் தையலழுந்தும்படி தோலை மூட்டிச் செய்யப் பட்டது.

மழையின்மையால் ஆவிசூழ்ந்த மலையிடத்தில் பழுத்த மரத்தைத் தேடித் திரியும் பறவைபோல ஓரிடத்தில் இராமல் பயனின்றி ஓடித்திரியும் பாணனை, தொண்டைமான் இளந் திரையன்பாற் சென்று பரிசில் பெற்று வரும் ஒருவன் எதிர்ப்பட்டுக் கூறுவான்: (மிடியால்) பொலிவழிந்த வடி

---

*தொண்டைமானிளந்திரையனை கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடியது. காலம் கி. பி. 50—95.

வினையும் கல்வியை வெறுத்துக் கூறுகின்ற நாவினையு முடைய இரவலனே! யான் இளந்திரையனது இராசதானி யாகிய காஞ்சிபுரத்தினின்றும் பிறர்க்குக் கொடுக்கக் குறை யாத செல்வத்தையும், வெள்ளிய தலையாட்டத்தையுடைய குதிரைகளையும் யானைகளையும் வாரிக்கொண்டு வருகின் றேன். நீவிரும் சேர சோழ பாண்டியரினும் மிக்க தலைமை பெற்றவனும், சோழர் குடியிற் பிறந்தவனுமாகிய இளந்திரை யனை நினைப்பீர்களாயின் நும் வறுமை இல்லையாகும். நீவிர் நாடிச் செல்லும் அவன் தன்மையைக்கேட்பீராக.

இரவலனே! அவனுடைய நகரில் வழிப்போக்கரை அலறும்படி வெட்டி அவர் பொருளைக் கொள்ளை கொள்ளும் தீயோரில்லை. அவனுடைய காட்டில் இடியே றும் இடியாது; பாம்புகளுந் தீண்டா; புலி முதலிய விலங் குகளும் தீங்கிழையா. அவ்வகையான காட்டிடத்தே நீவிர் இளைப்பாறிச் செல்வீராக.

காட்டிடத்துள்ள கவர்பட்ட வழிகளால் உமணர்களின் உப்பேற்றிய வண்டிகள் செல்லா நிற்கும். அவ்வண்டிகளின் அச்சுமரந் தங்கும் குடங்கள் மத்தளம் போன்றன. அக் குடங்களில் மாட்டப் பெற்ற அச்சு மரங்களினூடே கடாவப் பெற்ற ஏணிக் கால்கள் போன்ற திரண்ட மரங்கள் நான்றிருக்கும். அந்நான்ற மரங்களின்மீது நாட்டப்பெற்ற தடிகளின் முன்புறம் தொத்துளிப் பாயினால் வேயப்பட்டது. தினைப்புனத்தை யானை தின்னாது இருந்து காவல் செய்வதற்கு அமைத்த பறன்மீது கட்டின குடிலைப் போன்ற அதன் முகப்பில் கோழிக் கூடுகள் கிடக்கும். அதன் முன்புறத்தே தூளை யிட்டு அசையும்படி தூக்கப்பட்டுள்ள, யானையின் முழந் தாள்போன்ற உரலாகிய உறியில், நாடக மகளிர் ஆடுகளத் திற் கொட்டப்படும் மத்தளத்தை ஒப்பக் கயிற்றினால்

வரிந்து கட்டப்பட்ட காடிப்பானைகள் வைக்கப்பட்டுள்ளன. கையிடத்துள்ள பிள்ளைக்குக் காவலாக பூவோடு கூடிய வேப்பிலையை வைத்திருக்கும் உமணப்பெண் வண்டியின் முன்புறத்தே இருந்து எருதுகளை அடித்து ஓட்டுவாள். உமணர் வலிய உடலினர். தழையினாற் கட்டப்பட்ட மாலை அணிந்த மார்பினர். இளைத்த எருதுகளுக்குப் பதில் பூட்டுவதற்குப் பல எருதுகளை அடித்தோட்டிச் செல்லும் செலவினர். அன்னவர், பல துளைகளையுடைய நுகத்தில் ஒருமுகப்படக் கயிற்றினால் கட்டப்பட்ட பல எருதுகளை யுடைய வண்டிகளின் அச்சு முறியாதபடி பக்கத்தே காத்துச் சென்று உப்பின் விலையைக் கூறுவர். இவ்வகையான சகடங்கள் பல கவர்பட்ட வழிகளாற் செல்லும்.

பிறநாடுகளினின்றும் வந்த வியாபாரிகள் மாணிக்கம், முத்து சந்தனம் முதலியவற்றை எவ்விடங்களிலுங் கொண்டு சென்று விற்பார்கள். அவர்கள் அம்புகள் கிழித்த புண்களாறின தழும்புகளுடைய மார்பினர். உடைவாள் செருகிய உடையினர்; யானைத் தந்தத்தாற் கடைந்த பாம்புபோன்ற வாள் இட்ட உறையினை வரியுடைய சீலையிலே கோத்துத் தூங்க விட்ட தோளினர்; சட்டையிட்ட உடம்பினர்; செருப்புத் தொட்ட காலினர். இவ்வகையினராகிய வணிகர், பலாப்பழத்தைப் போன்று ஒத்தகனமாகச் சேர்க்கப்பட்ட மிளகுபொதிகளைச் சுமந்து செல்லும் கழுதைகளின பின்னே கவர்பட்ட வழிகளாற் செல்வர். கழுதைகள் நீண்ட செவிகளும் முதுகிலே தழும்புகளுமுடையன.

இவ்வாறு சகடங்களும் கழுதைகளும் செல்கின்ற கவர்பட்டவழிகள் சந்திக்கின்ற இடத்தில் அரசனால் நியமிக்கப்பட்ட சுங்கங் கொள்வோர் விற்படையுடன் காத்து நிற்பர். அக்காட்டிடம் எயினர் குடியிருப்பையுடையது. அவர்

களின் சிறிய வீடுகள் அணிலும் எலியும் நுழையாதபடி ஈந்தின் ஓலையினால் வேயப்பட்டு முட்பன்றியின் முதுகு போன்றதோற்றமுடையன. பிள்ளைகளைப் பெற்ற எயிற்றியர் அக் குடிசைகளின் ஒரு புறத்தே, மான்றோல்களில் முடங்கிக்கிடக்க, மற்றவர்கள் பாரையினால் கரம்பை நிலத்தைக் கிளறி எறும்பு சேர்த்துவைத்த புல்லரிசியை எடுத்து வந்து* பார்வைமான் கட்டப்பட்ட விளவின் நிழலையுடைய முற்றத்திலே தோண்டப்பட்ட நில உரலிலே பெய்து, வயிர உலக்கையினால் குற்றி, ஆழ்ந்த கிணற்றில் உவர் நீரை மொண்டு வந்து, பழைய ஓறுவாய் போன பானையிலே உலைவார்த்து, முரிந்த அடுப்பிலேவைத்து ஆக்குவார்கள். அவர்கள் குடிசைகளை அடைவீர்களாயின் இவ்வாறு சமைக்கப்பட்ட சோற்றை உப்புக் கண்டத்துடன் தேக்கிலையில் உண்ணும்படி தருவர்.

பாலைநிலத்தே நீரின்மையால் அலைந்து திரிகின்ற மான்களின் அடிச் சுவடுடைய வழியிடத்தில் மழை வறண்ட காலத்து நீர் நிற்றற்குத் தோண்டிய குழிகள் உண்டு. கானவர் அவற்றிற் பதுங்கியிருந்து நீருண்ணும்பொருட்டு வருகின்ற அகத்திப் பூவைப்போன்று வளைந்த கொம்புடைய பன்றிகளை நடு யாமத்தே வேட்டையாடுவர். பகற்காலத்தே வளைவாகிய வேலியிடத்தே வலைகளை மாட்டி, அங்காந்த வாயையுடைய நாயுடனே சென்று பற்றைகளை அடித்து தாமரைப் பூவின் புறவிதழ் போன்ற செவியுடைய முயல்

---

* வேட்டையாடுவோர் மிருகங்களையோ பட்சிகளையோ தங்கள் தொழிற் கிசைந்து நடக்குமாறு பழக்கி வலை முதலியன கட்டுமிடத்தில் விடுவார்கள். இவற்றால் நம்பிக்கை கொண்டு இவற்றின் இனங்கள் வந்து கண்ணியில் மாட்டிக் கொள்ளும். இவற்றுள் பட்சியைப் பார்வைப் பட்சி யென்றும், மிருகத்தைப் பார்வை மிருக மென்றுங் கூறுதல் மரபு.

களை அவற்றிற் கிடவாமல் வலையிடத்தே செல்லும்படி ஓட்டி வேட்டையாடுவர். இவ்விடத்தை விட்டு அப்பாற் சென்றால் எயினர்கள் அரண் தோன்றும். அதன் உயர்ந்த மதில் ஊகம்புல்லால் வேயப்பட்டுள்ளது. அகன்ற வீடுகள் காவற்காடு சூழ்ந்த முள்வேலியும், சங்கிலியாற் கட்டிய நாய் களின் காவலும், திரண்ட மரங்களினால் இடப்பட்ட தாழி னையுடைய உட்கதவுகளும், கழுகுகள் நிரைத்த வாயில்களு முடையன. அவற்றின் உட்புறத்தே பகைவரைக் குத்து தலால் கூர் மழுங்கின வேல்களும், மணிகட்டிய பரிசைகளும், விற்களும் அம்புகளும் சாத்தப்பெற்றிருக்கும். தலைவாயில் களிடத்து மலையிடத்துள்ள தேன்கூட்டைப் போன்ற அடி யினையுடைய அம்புக்கட்டுகளும் மிகுந்த ஓசையுடைய (பாலைப்) பறையும் தூங்கும். இவ்வகையான பாலை நிலத்து ஊரிடத்தேசெல்வீராயின் ஈந்தின் விதைபோன்ற சோற்றை நாய் வேட்டையாடிக் கொண்டு வந்த சங்குமணி போன்ற முட்டைகளையுடைய உடும்பின் பொரியலாலே மறைத்து மனைகடோறும் பெறுகுவிர்.

அப்பாற் செல்வீராயின் குறிஞ்சி நிலத்தை அடை வீர்கள். அந்நிலத்துத் தலைவன் தோன்றுதற்கிடனாயுள்ள குடியிலுள்ளோர் வலிமையினால் கொள்ளையடித்துண்ணும் உணவினையும், வாட்போர் செய்யுந் தொழிலையு முடையர். அக்குடியிலுள்ள சூற்கொண்டமகளிர் யானை எதிர்ப்படினும், பாம்பு தம் மேற்செல்லினும், மேகம் இடிப் பினும் அஞ்சார். இவ்வகையான மறக்குடியிற பிறந்த அந்நாட்டுத் தலைவன் தனது சொற் கேளாதபகைவருடைய நாட்டகத்தே துணைவர்களுடன், குறிவைத்த மிருகத்தைத் தப்பாமற் பிடிக்கின்ற வேட்டை நாயைப் போற் சென்று, அவரது பசுக்கூட்டங்களைக் கவர்ந்து கள்ளுக்கு விலையாகக் கொடுப்பான். பின் தனது வீட்டிலே வடிக்கப்பட்ட

இனிய கள்ளை உண்டு பலரும் கூடும் மரத்தடியிலே கிடாயை அறுத்துத் தின்று மத்தளங் கொட்ட இடத்தோளை வலப்பக்கத்தே வளைத்து மகிழ்ச்சியுண்டாகும்படி ஆடுவான். இவ்வகையான குடியிருப்பைக் கடந்து சென்றால் முல்லை நிலத்து ஊர்களை அடைவீர்கள். அங்கு வீடுகள் குறகிய தடிகளின் மேல் கட்டப்பட்டுள்ளன. அக்குறுகிய கால்களில் ஆட்டுமந்தைகள் நின்று தின்னும் தழைகள் கட்டப்பட்டிருக்கும். வீட்டின் வாயில்களில் சிறு பற்றைகள் உண்டு. கதவுகள் கயிற்றால் வரியப்பட்டன. கயிற்றினால் வரியப்பட்டு வரகு வைக்கோல் பரப்பப்பட்ட படுக்கையில் கிடாயின் தோலைப் பாயாகவுடைய முதியோன் காவலாகத்துயில்வான்; முற்றத்திலே அறையப் பட்டுள்ள முளைகளில் பசுக்களைக் கட்டும் கயிறு கிடக்கும் ஊரைச் சூழ்ந்து வெள்ளாடும் செம்மறிஆடும் கிடக்கின்ற முள் வேலி உண்டு. இவ்வகையான ஊரிடத்தே பறவைகள் துயிலெழுகின்ற விடியற்காலத்து ஆய்ச்சியர் மத்து ஆரவாரிக்கும்படி தயிரைக் கடைந்து வெண்ணெய் எடுப்பார்கள்; தாளுருவி அசைகின்ற காதும் பொன்னிறமுமுடைய ஆய்மகள் புள்ளியாகத் தயிர் தெறித்த பானையிடத்தேயுள்ள மோரைப் பூவாற் செய்த சும்மாட்டின் மேல் வைத்து குறிஞ்சி நிலத்தே சென்று விற்பாள்; விற்றதனால் கிடைத்த நெல் முதலியவற்றைக் கொண்டு தனது சுற்றத்தாரை உண்ணும்படி செய்வாள். குறிய கரிய மயிரினையுடைய ஆய்மகள் தான் நெய்யை விற்ற விலைக்குக் கட்டியாகிய பசும் பொன்னை வாங்காளாய், பாலெருமையையும், நல்ல பசுவினையும் எருமை நாகினையும் கொள்வாள். சீழ்க்கை அடித்தலினாலே மடித்த வாயையுடைய இடையர் குடியிருப்பில் தங்குவீராயின் தினையரிசியாலட்ட சிலுத்த சோற்றைப் பாலுடனே பெறுகுவீர்.

இடையன், செருப்புத் தரித்தலால் தழும்பேறின அடிகளும், கோடாரியைப் பிடித்தலால் காய்த்த கையில் பிடித்திருக்கும் பசுக்களை வருத்துகின்ற கோலும், காவின் இரண்டு தலைகளிலும் உறிகளைத் தூக்கிச் செல்லுதலால் காய்த்ததும் மயிருடையதுமாகிய தோளும், பாற்கறையைத் தடவின மயிரும், மரக்கொம்புகளினுச்சியிலும், கொடிகளிலுமுள்ள பூக்களாற் கட்டிய மாலையும், ஒற்றை உடையும், பாற்சோறாகிய உணவுமுடையன்.

அவன் கன்றுகளுடைய பசுத்திரளைக் காட்டில் மேய்த்து, கடைக்கொள்ளியால் இட்ட கரிய துளைகளுடைய குழலில் பாலை என்னும் பண்ணை வாசிப்பான். குழல் வாசித்தலை வெறுத்தானாயின் குமிழின் கொம்பைவளைத்துக் கட்டிய அரலையின் தும்பாகிய நரம்பைக் கையினால் தெறித்து, வண்டினங்கள் தம் மினத்தின் ஓசையென்று காது கொடுத்துக் கேட்கும்படி குறிஞ்சிப் பண்ணை வாசிப்பான். இவ்வகையானபுல்லடர்ந்தஇடத்தைக்கடந்து முள்ளுடைய விடர்த்தல் சூழ்ந்த மாடுகள் தங்கு மிடத்தையுடைய ஊர்களிற் செல்வீராயின் வீடுகளின் முற்றத்தே யானைக் கூட்டம் நின்றாற் போல வரகு முதலிய தானியங்கள் நிறைக்கப்பட்ட குதிர்கள் தோன்றும். தலைவாயில்களில் யானையின் கால்கள் போன்ற வரகுதிரிகைகள் நடப் பெற்றிருக்கும். புகை பிடித்த கொட்டில்களின் சுவரில் வண்டிச் சில்லுகளும் கலப்பைகளும் சார்த்தி வைக்கப்பட்டிருக்கும். வீடுகள் மாரிகாலத்து மேகம்போலக் கரிய வரகு வைக்கோலினால் வேயப்பெற்றன. இவ்வாறமைந்த குடியிருப்புகளை அடைவீராயின் வரகுடன் அவரை விதையை யிட்டுச் சமைத்த சோற்றினை உண்ணும்படி பெறுகுவிர்.

அக்குடியிருப்புகளைக் கடந்து செல்வீராயின் வீடு நிறைந்த உணவுப் பொருள்களுடைய உழவர்களின் மனை

கள் தோன்றும். உழவர் எருதுகளை நுகத்திற் பூட்டிப் பெண் யானையின் வளைந்த வாய்போன்ற கலப்பையின் உடும்பின் முகம்போன்ற பெரிய கொழுக்கள் மறையும்படி அமுக்கி உழுது விதைத்த பயிர்கள் தோட்டங்களில் விளைந்து தோன்றும். அறுப்புக்காலத்து கமளரின் ஆரவாரத்துக்கஞ்சி அவைகளிடத்துத் தங்கியிருந்த காடை தனது பறக்கலாற் ருத கடம்பின் பூவைப்போன்று வெள்ளிய குஞ்சுகளைக் கூட்டிக் கொண்டு முல்லை நிலத்தே தங்கும்.

துருத்தியை அமுக்கி ஊதுகின்ற உலையிற் ருெழில் செய்கின்ற கொல்லனது முறிந்த குறட்டைப் போன்ற கவர்பட்ட காலையுடைய நண்டுகளின் புற்று அழியும்படி, கோரைப்புற்களை வேருடன் குத்தியெடுத்த மண்கிடக்கின்ற கொம்புகளுடைய எருதுகள் சண்டையிட்ட வயல்களை உழவர் ஒப்பரவு செய்து நாற்றுமுடிகளை நடுவர். சண்பகக் காயிடத்துள்ள தாதை மார்பிடத்துப் பூசியவர்களும், இரும்புத் தகடு போன்று திரையாத மெல்லிய தோலு டையவர்களுமாகிய வேலை செய்வோரின் பிள்ளை கள், களை பறிப்பார் பிடுங்கிப் போட்ட நெய்தற் பூவணிதலை வெறுத்தார்களாயின் முள்ளியின் பூவைப் பறித்து பல்லினுல் மென்று கிழித்து முடிந்த கோரை நாரால் மாலையாகக் கட்டி ஈருடைய கரிய தலை நிறையும்படி சூடுவார்கள். அவர்கள் பழஞ் சோற்றை வெறுத்து வரம் பிலே கட்டப்பட்டுள்ள சிறிய குடிலின் முற்றத்தில் அவ லிடிக்கு மோசைக்கு வெருவிக் கிளிகள் பறக்கும். வளைந்த கதிரையுடைய வயலிடத்து நெல்லறுப்போர் முற்றிய நெல் லுடைய தாளை அறுத்து களங்களிலுறையுந் தெய்வங்கள் பலிகொள்ளும்படி பாம்புறையும் மருதின்நிழலில் போரடுக் குவார்கள். துணங்கையாடும் பூதங்களின் வெள்ளாடை களைப்போலும் சிலந்தி நூல்கள் சூழ்ந்த பக்கத்தினையுடைய

போர்களின் அடியைப் பிடித்து விரித்து கடாக்களால் மிதித்து, வைக்கோலையும் கூளத்தையும் மணியினின்றும் பிரித்து ஈரம் புலரும்படி மேல்காற்றில் கையினாற் றாவித் தூற்றின பொலி மேருவைப்போல உயர்ந்து தோன்றும். இவ்வகைச் சிறப்பு மிகுந்த மருதநிலஞ் சூழ்ந்த குடியிருப்பு களில், வீடுகளின் பக்கத்தே தடிகளில் ஆன்கன்றுகளைக் கட்டும் கயிறுகள் கிடக்கும்; தலையைத் திறந்து தானியங்கள் உள்ளே சொரியப்பெற்ற குதிர்கள் தோன்றும். தச்சச் சிறுர் செய்த சிறு தேர்களைப் பிள்ளைகள் உருட்டிச் சென்ற களைப்பாலே செவிலித்தாயருடைய பாலை நிறையவுண்டு படுக்கையிலே கண்வளர்வார்கள். இவ்வகையான வறுமை தெரியாத குடியிருப்பினையுடைய ஊரிலே தங்குவீராயின் நெற் சோற்றினைக் கோழிப்பேட்டின் பொரியலோடே பெறு குவிர்.

புகை சூழ்ந்த கொட்டில்களில், மலையிடத்தில் யாளி பாய்கையினாலே யானைகள் பயந்து சத்தமிட்டாற்போன்று ஆரவாரிக்கும்படி ஆலைகளில் கருப்பஞ்சாற்றை இறக்கி கட்டியாகக் காய்ச்சுவார்கள். அக்கொட்டில்களிற் செல்வீ ராயின் கருப்பஞ்சாற்றையும் கற்கண்டையும் உண்ணும்படி பெறுகுவிர். அப்பாற் சென்றால் வலைஞர் குடியிருப்பை அடைவீர்கள். அவர்களது வீடுகள் காஞ்சி வஞ்சி முதலிய மரங்களின் கொம்புகளை கைகளுக்கு நடுவே தூணாக நட்டு மூங்கிற் றடிகளை வரிச்சாக நிரைத்து தாழை நாராற்கட்டி தருப்பைப் புல்லால் வேய்ந்த இறப்புடையன.

புன்னைக் கொம்புகளினால் கட்டப்பட்ட தலைவாயிலின் கூரையில் படரவிடப்பட்ட சுரைக் கொடிகளில் காய்கள் நாலும். முற்றத்திலேமீன்களைவாரிஎடுக்கும்பறிகள்கிடக்கும். இளையவர்களும் முதியவர்களும் தலைவாயிலிடத்தில் தங்கி

யிருப்பார்கள். பின் இருளும் கயலும் பிறழுகின்ற ஆழ்ந்த குளங்களில் உலாவி மீன்களைப் பிடிப்பார்கள். அவர்கள் குடியிருப்பில் தங்குவீராயின், குற்றாத கொழிய லரிசியை கழியாகத் துழாவி அட்ட கூழை அகன்ற வாயையுடைய தட்டுப்பிழாவிலே ஆற்றி, பாம்பு கிடக்கின்ற புற்றும் பழஞ் சோற்றை ஒத்த புறத்தினையுடைய நெல் முளையை இடித்து சேரும்படி அதிலே கலந்து, விரலாலே கலக்கி அரிக்குந் தன்மையுடையதாய் சாடியின் கண்ணே முற்றின வெவ் விய கள்ளை மீன் சூட்டுடன் பெறுகுவிர்.

தூண்டிலிற் கோக்கும் இரையிட்டு வைக்குந் தோற் பையை யுடையவனும், மீனைத் தப்பாமற்பிடிக்கும் தன்மை யுடையவனுமான பாணன் மூங்கிற் றடியிற் கட்டிய கயிற்றி டத்துள்ள தூண்டிலில் இரையைக் குற்றி நீருள் விட அவ்விரையைக் கவர்ந்து அகப்படாமற் போன வாளைமீன் நீர் நிலையின் பக்கத்தே நின்ற பிரம்பின் நிழலைக் கண்டஞ்சா நிற்கும். அந் நீர் நிலையிற் பூத்த கடவுள் சூடுதற்குரிய தாமரைப் பூவைச் சூட்டுதலைவிட்டு பொய்கைகளில்இந்திர விற்போன்று பூத்துள்ள குவளையையும் நீலத்தையும் பிற பூக்களையும் பறிப்பார் நுங்கட்குத் தர அவற்றைச் சூடிப் போவீர்களாக.

அப்பாற் சென்றால் பார்ப்பார் இல்லங்களைக் காண்பீர் கள். பசுக்கள் பசும் புற்றரைகளைத் தேடி மேயச் செல்ல அவற்றின் செழிய கன்றுகள் பந்தர்க் கால்களிற்கட்டப்பட்டு நிற்கும். கோழி, நாய் முதலியன அவ்வில்லங்களைச் சேர மாட்டா. சாணியால் மெழுகப்பட்டிருக்கும் வீடுகளுள் வழிபடு தெய்வங்களின் உருவங்கள் காணப்படும். கிளி கள் வேதம் படிக்கும். அருந்ததியைப் போன்ற சிறந்த கற் பும் நல்லொழுக்கமும் வளையலணிந்த கைகளுமுடைய பார்ப்பனப் பெண்கள் நல்ல சுவையுள்ள உணவுகளைச்

சமைப்பார்கள். அவ்வில்லங்களை அடைந்தால் இராசான்னம் என்னும சோற்றினையும் மாதுளங்காய்களைப் பில்லைகளாக அரிந்து மிளகு தூள் பெய்து கருவேப்பிலை கூட்டி நெய்யில் வெதுப்பிய பொரியல்களையும், மாங்காய் ஊறுகாய் முதலியவற்றையும் உண்ணும்படி பெறுகுவிர். நீர்த்துறையில் விளையாடி மகளிர் போகவிட்டுப் போன குழையினை நீல நிறமுடைய சிச்சிலிப் பறவை தனக்கு இரையென எடுத்துக்கொண்டு பட்சிகள் நிறைந்திருக்கும் பனையிற் போகாது அந்தணர் யாகசாலையில் நட்ட யூபத்தின் மேலிருக்கும். அது சோனகர் பாய்மரத்தின் மேலேற்றிய அன்ன விளக்கைப் போலவும் விடிவெள்ளி போலவும் ஒளி விட்டுத் தோன்றும்.

கடற்கரை, மேற்றிசைக் கண்ணுள்ள குதிரைகளையும், வடதிசைக் கண்ணுள்ள பொருட்களையும் கொண்டு வந்து தரும் மரக்கலங்கள் சூழப்பெற்றது. மணல் மிகுந்த தெருக்களில் தொழிலாளராற் காக்கப்படும் பண்டசாலைகளும் பரதவர் வாழும் வானளாவிய மாளிகைகளும் உண்டு. வீடுகளில் விளைபொருள்கள் தேக்கிக் கிடக்கும். உழுகின்ற எருதுகளுடன் பசுக்கள் நெருங்காதபடி ஆட்டுக்கிடாய்களும் நாய்களும் சுழன்று திரியும். உயர்ந்த மாடத்துறையும் பேரணிகலன்களையுடைய மகளிர் பசியமணி கோத்த வடங்களையுடைய அரையினிடத்தே கிடக்கின்ற மெல்லிய துகிலசைய மலையிலே ஆரவாரிக்கின்ற மயில்கள்போல் உலாவுவர்; காலிடத்தேயுள்ள பொற்சிலம்புகளொலிக்க நூலினால் வரிந்து செய்யப்பட்ட பந்தினை அடித்து விளையாடாநிற்பர்; முத்தை ஒத்த வார்ந்த மணலில் மெத்தென கையிற்றரித்த வளைகள் அசையும்படி பொற்கழங்கு கொண்டு விளையாடுவர்.

கள்ளுண்பார் பலரும் புகுகின்ற வாயிலில் பசிய கொடிகள் அசையும், முற்றத்திலே தெய்வத்துக்குத் தூவின பூ வாடல்கள் காணப்படும். அவ்விடத்தில் கள்ளைச் சமைக்கின்ற மகளிர் வட்டில் கழுவிய நீர் வடிதலின் நிலஞ்சேறுயிருக்கும். அச்சேற்றிற் புரளுகின்ற பெண் பன்றியுடனே புணர்ச்சிக் கருத்தால் போகாமல் குழியிலே நிறுத்தி நெல்லை இடித்த மாவாகிய உணவால் ஆண் பன்றி வளர்க்கப்படும். பட்டினத்தே தங்குவீராயின் அப்பன்றியின் தசையோடு கள்ளையும் உண்ணும்படி பெறுகுவிர்.

துறைமுகத்தின்கண்ணே ஆகாயத்தை முட்டும்படி உயர்ந்ததும் கற்றை முதலியவற்றால் வேயப்படாததுமாகிய கலங்கரை விளக்கமுண்டு. இது மரக்கலங்கள் தாம் சேரும் இடத்தையறிந்து செல்லும்படி அமைக்கப் பட்டது. இதனைக் கடந்து செல்லின் தென்னங்கீற்றினால் வேய்ந்த கூரைகளையும், மஞ்சட் செடியுடைய முற்றத்தையும் உடைய வீடுகளைக் காண்பீர்கள். அம்மனைகளிற்றங்குவீரேல் இளநீரையும், வாழைப்பழத்தையும், பனையின் நுங்கினையும், வேறு பண்டங்களையும், முற்றின வள்ளி முதலிய கிழங்குகளையும் உண்ணும்படி பெறுகுவிர். செல்வம் பொருந்தின பட்டினத்து, வழிச் செல்வோர் பசி தீரும்படி சோற்றை ஆக்குகின்ற பானை அசைந்து விழும்படி கமுகின் பக்கத்தே நிற்கும் தெங்கின் காய் நிலத்தே விழும். பல மரங்களடர்ந்த இடத்தே விளங்கும் விண்ணைத்தொடும் மாடங்களுடைய ஊர்களிலே வள்ளிக் கூத்தை ஆடுகின்ற புறநாடுகளைக் கடந்தபின், காந்தள் வளர்கின்ற மலையிடத்து யானை கிடந்தாற்போல பாம்பு அணையிலே திருமால் பள்ளிகொள்ளும் திருவெஃகாவை அடைவீர்கள்.

அவ்விடத்தில் வெய்யில் நுழையாதனவும் இலை நெருக்கத்தால் குயில்கள் நுழைந்து செல்கின்றனவுமாகிய இளமாக்காக்களுள் காஞ்சி மரத்திலே படர்ந்திருக்கும் குருக்கத்திக் கொடியின் வரிகளையுடைய பூக்கள் அப்ப வாணிகர் சுட்ட அப்பம் பாலிலே கிடந்தாற்போல் வார்ந்த மணலிடத்துக் குழிகளில் நின்ற நீரிடத்துவிழும். முன்பு நீர் நின்ற பொழில்களிடத்து, இளம்பிறையைக் கரும்பாம்பு பற்றினாற்போல மகரவாயாகிய தலைக்கோல மணிந்த வண்டுகள் சூழும் நெற்றியும் கள்ளுண்ணலாற் குளிர்ச்சி பொருந்திய கண்களுமுடைய மகளிரோடே பகற்காலத்தே விளையாடுவீர்களாக. பின்னர் பெரிய துறையிடத்து இளவேனிற் செவ்விநுகர்பவர்களோடு இளைப்பாறி, சூல் கொண்ட கமுகின் வயிற்றைப்போன்ற பச்சைக் குப்பிகளை (தொன்னைகளை) உண்டு கழித்து நாடோறும் பெரிய மகிழ்ச்சியுடைய இருப்பைப் பொருந்தி யிருப்பீர்களாக. நும்முடைய கரிய தண்டினையுடைய இனிய யாழை வாசித்து திருவெஃகாவிலிருக்கும் கடவுளை வாழ்த்தி அவ்விடத்தினின்றும் போமின்.

காஞ்சீபுரமாகிய மூதூரிடத்து, சோலைகளில் பரிக்கோலைக் கையிலேயுடைய யானைப்பாகர் கவனமில்லாதிருக்கும்போது யானைக்கு நெய்யுடன் கலந்து வைக்கப்பட்ட அரிசியை சூலுடைய மந்தி திருடிக்கொண்டு சென்று உண்ணும். தேரோடுதலால் தெருக்கள் குளியப் பெற்றன. காவல் செய்கின்ற வலிய படையினையும், புகழினையுமுடைய மூதூரிடத்துள்ள மக்கள் கடைகளில் விற்றலும் வாங்கலும் செய்வர். அம் மூதூர் உலகத்தே கொடுப்போரைக் கொடாமற் றடுத்த * பரிசிலர்க்கு அடையாத வாச

* தான் பெரிதும் கொடுத்தலால் இரவலர் பிறரிடத்து இரக்கச் சென்றிலர் என்பது.

லுடையது ; காவற் காடு சூழ்ந்த பக்கத்தை யுடையது. உயர்ந்த கோட்டையின் மதில்கள் செங்கற்களாற் கட்டப் பெற்றன. அந் நகர், புலால் நாற்றமுடைய கடல் சூழ்ந்த உலகத்தே புருக்கள் இருக்கின்ற பூவாமற் காய்க்கும் மரங் களுள் விசேடித்த பலாவைப்போன்று சிறப்புடையது; பல சமயத்தவர்கள் தொழும்படி எடுக்கப்படும் விழாக்களாற் சிறந்தது. ஐவர் தாமரை முகையையுடைய நெடிய தேரையுடையர். தருமன் முதலானோர், பிறையை மேலே சூடி அந்திக்காலத்தே உலாவுகின்ற முகிலைப்போல் வெள் ளிய கொம்பையுடைய யானைப் பிணத்தை இரத்தாறு இழுத்துச் செல்லும்படி பொருது துரியோதனன் முதலிய நூற்றுவரும் மடியும்படி வென்றனர். அத் தருமன் முதலானோரைப்போல் இளந்திரையன், மட்டுக்கடங்காப் படையுடன் வந்த பகைவரை வென்று, பரிசிலை விரும்பி அடைக்கலமாகச் சென்றார்க்குப் பாதுகாவலாக காஞ்சிபுரத் தில் வீற்றிருக்கின்றான்.

தன்னோடு மாறுபட்ட அரசரின் மன்றுகள் மக்களின் றும்படி அழித்தலும், தன்னை விரும்பி வந்தோர் தேயம் திருமடந்தை பொலிவு பெற்றிருக்க வளித்தலும் அவனுக்கு எளிது. மலையிடத்து நின்றும் விழுகின்ற அருவி அம்மலையிலுள்ள பண்டங்களை வாங்கிக்கொண்டு வந்து கடலுக்குக் கொடுத்தாற்போல திறைகளுடன் வந்த பல நாட்டு அரசர் அவன் தலைக்கடையிற் காத்து நின்றனர். அவ்வேந்தர், கங்கையைக் கடக்க விரும்பினோர் தோணி யைக் காத்திருந்து தூங்கினதுபோல யானை முதலிய செல்வங்களோடே நெருங்கா நின்று காலம் பார்த்திருப்பர்.

யானைக்கு வளைந்த பூணைச் செய்கின்ற கொல்லனது கூடத்தில் எழுந்த ஓசைக்கு வெருவி மாடத்திருந்த சேவற் புறா துயிலொழியும். இறைவனிருப்பதற்கும்

இலக்குமி வசித்தற்கும் இடமாயுள்ள தொன்னகரில் வேந்தன் இருக்கின்றான். அவன் கடலின் நடுவே சூரியன் தோன்றி ஒளி செய்தாற்போல மயக்கமில்லாத அறிவால், வறியராய் நலிவெய்தினோர்க்கும் வறுமையுற்றிரந்தோர்க்கும் விரும்பியவற்றைக் கொடுத்தான்; புலவர்க்கு ஆபரணங்களை அளித்தான். இவ்வாறு பரிசிலர்க்கு அளித்துக் கொடுமையில்லாத மந்திரிகளுடன் வீற்றிருக்கின்றான். யானையைக் கண்ட சிங்கக் குட்டி அதன் மத்தகத்தைக் கொள்ள விரும்பினாற்போல பகைவரது மதில்களை அழித்து அரசருடைய முடிக்கலம் முதலியவற்றை வாங்கிக்கொண்டு வீரமுடிபுனையும் வெற்றியினையும்,பகைப் புலத்துக்கொள்ளையாகிய உணவினையும், மாறுபட்ட அரசரோடு சந்து செய்யும் விருப்பமின்மையையும் உடைய தொண்டையைச் சூடினோருடைய வமிசத்தில் உதித்தவனே! வீரர்க்கு வீரத்தைக் கொடுக்கின்றவனே! கொடியோர்க்குக் கொடியவனே! செல்வமுடையோர்க்குக் கொடுத்தலை விரும்புவோனே! போர்த் தொழிலில் மிக்கவனே! கடலிடத்தே சென்று சூரனைக் கொன்ற முருகனைப் பெற்ற பெருமையுடைய வயிற்றையும், பேய்களாடும் துணங்கைக் கூத்தையுமுடைய இறைவிக்கு பேய்மகள் சில நொடி சொன்னாற்போல, குறையாத கொடையினையுடைய நின் புகழிற் சிலவற்றைக் கூறிப் புகழ்ந்து வந்தேன். நெடுங்காலம் வாழ்வாயாக என்று சொல்லி யாழை வாசிக்கும் முறைமையில் வாசிப்பாயாக. மயில்கள் ஆரவாரிக்கின்ற இளமரக் காட்டில் மந்திகள் பாய்ந்து சிந்திக்கிடக்கும் மலர்களையுடைய காடும், தெய்வங்களுறைவதும் கின்னரப் பறவை பாடுவதும், முற்றத்தே மானும் புலியுந் துயில் கொள்ள யானை முறித்துக் கொண்டு வந்த விறகால் முனிவர்கள் ஓமஞ் செய்கின்ற சாரல்களும் பல அருவிகளுமுடைய மலை

களுக்குத் தலைவனாகிய அரசன் செல்வமும் யாக்கையும் நிலையில்லாத உலகத்திற் புகழைப் பெறுதல் நன்றென்று உணர்ந்து உன்னை விரும்பி அழைப்பான். அழைத்து உனது அரையிற் கிடந்த கொட்டைப் பாசியின் வேரைப் போன்ற கிழிந்த உடையைப் போக்கி பாலாவியை ஒத்த விளங்குகின்ற நூலால் நெய்த துகில்களைபெரிய சுற்றத்துடனே உடுக்கும்படி தருவான். வளைந்த அரிவாளைப் பிடித்தலால் கை காய்ப்பேறின மடையன் ஆக்கிய இறைச்சியையும் சோற்றையும் இனிய சுவையுடைய பிற உணவுகளையும் வெள்ளிக் கலங்களிலிட்டு நும்பிள்ளைகளுக்கிடையே இட்டு ஆசையுடன் உண்ணும்படி செய்வான். கார்காலத்து மின்னல் தோன்றினாற் போன்று விறலிமயிரிற் சூடும்படி பொன்னாற் செய்த மாலையையும் பொற்றாமரைப் பூவையும் அளிப்பான். சங்கு போன்ற வெள்ளிய குதிரைகள் நான்கு பூட்டிய பொற்றேரினைத் தருவான். அதோடு அமையாது பகை அரசரிடத்து நின்றும் கவர்ந்த குதிரைகளுடன் சேணத்தையுங் கொடுப்பான். நாவலந்தண் பொழில் குற்றமின்றி விளங்கும்படி இவை ஒழிந்த பரிசில்களையும் தருவான்.

# V. முல்லைப்பாட்டு.*

முல்லைக்குரிய கார்காலம் நேர்ந்தது. இராசமா தேவி போர்வயிற் பிரிந்த தனது தலைவன் வரப்பெருமையால் துய ருழந்து துயில் கொள்ளப் பெருளாயினள். அவள் கண் கள் முத்துப்போற் கண்ணீரை உதிர்த்தன. அவள் தனது நெகிழ்ந்த வளையல்களைத் திருத்தினுள்; மயக்க மடைந்தாள்; அம்பு தைத்த மயில்போல நடுநடுங்கி அணி கலன்கள் நெகிழப்பெற்றுள். அதனைக் கண்டு வருந்திய முது பெண்டிர் பல இனிய மொழிகளைக் கூறினுள்; தலை வனது மானம் புகழ் முதலியவற்றையும் அரசியல் நடப்ப தற்கு அவன் பிரியவேண்டிய இன்றியமையாமையையும் எடுத்துக் காட்டினுள். தலைவி தனது ஆற்றுமை மிகுதியால் முது பெண்டிர் கூறியவற்றைத் தேறும் திறமை இல்லாளா யினுள். அஞ்ஞான்று அம்முது பெண்டிர் இராசமா தேவியை நோக்கி "படைத்தலைவர் ஊர்ப்புறத்துள்ள பாக் கத்திற்கு நற்சொற்கேட்போரை அனுப்பினுர்கள். அவர்கள் தாம் நாழியிற் கொண்டு சென்ற நெல்லையும் முல்லைமலரை யும் தூவி தெய்வத்தை வணங்கி நற்சொற் கேட்க நின்றுர் கள். குளிரால் நடுங்கும் இடைச்சி தோளிற் கட்டின கை யளாய்ப் போந்து தாம்பிற் பிணித்த முலையுண்ணுமையாற் சுழன்று வருந்துகின்ற கன்றுகளை நோக்கி, 'உங்கள் தாய் மார் நிரம்ப மேய்ந்து இப்பொழுதே வருவர்' என்றுள். அந் நற்சொல்லின் பலனுக நின் தலைவர் பகைவரை வென்று அவரி டத்திற் பெற்ற திறைப் பொருள்களுடன் மகிழ்ச்சி பெருக இப்பொழுதே வருவர்" எனக் கூறினள். அதனைச் செவிக்

---

* பாடினுர் காவிரிப்பூம் பட்டினத்துப் பொன்வாணிகனுர் மகனுர் நப்பூதனுர். பாட்டுடைத்தலைவன் நெடுஞ்செழியன் என்பது சிலர் கருத்து. காலம் கி. பி. 90—130.

கொண்ட தலைவி இவ்வாறு பிரிந்தாலன்றி அரசியல் நிகழா தென மனதிற் கொள்வாளாயினள். சக்கரத்தையும் வலம்புரிச் சங்கையும் தாங்கிய பெரிய கைகளையும், இலக்குமியைத் தாங்கும் மார்பினையுமுடைய திருமால் மாவலியிடம் குறள் வடிவுடன் சென்று மூவடி மண்ணிரந்தார். அதனை அளிப்பான் வேண்டி மாவலி அங்கையில் நீர் பெய்த ஞான்று திருமால் கொண்ட நெடிய வடிவினைப்போல கடலிடத்து நீரைக் குடித்த முகில் உயர்ந்து மலையிற் றங்கி மாலைக்காலத்து மழையைப் பெய்தது. அரண்மனையிடத்துப் பள்ளியறையில் பொற்பாவை ஏந்தி நின்றதகளியிலே விளக்கு நின்றெரிந்தது. ஏழு நிலை மாடத்தின் மூட்டுவாய்களினின்றும் சொரிகின்ற நீர்த்தாரையின் ஓசைகள் ஆரவாரித்தன. இவ்வகை எய்தா நிற்க, தலைவன் கூறிச்சென்ற பருவகாலம் வந்த தாதலின் அவன் தவறாது வருவான் என்னும் எண்ணத்துடன் இராசமாதேவி படுக்கையிடத்தே கிடப்பாளயினள். இஃதிவ்வாருக பகை அரசர்மீது படை எடுத்துச் சென்ற அரசனது நிலைமை கூறப்படுகின்றது.

அரசனது படைவீரர் காட்டாறு சூழ்ந்த காட்டிடத்தில் பிடவம் முதலிய பற்றைகளை வெட்டினார்கள்; பகைப் புலத்தே காவலாயிருந்த வேட்டுவரின் அரண்களை அழித்து நாற்புறமும் முள்வேலியாகிய அரணை வளைத்து அதன் நடுவே பரந்த பாடி வீட்டை அமைத்தார்கள். அரசன் ஒரு கையைப் படுக்கையின்மேல் வைத்தும் ஒரு கையை முடியுடன் சேர்த்தியும் இருந்து, யானையை எறிந்து பட்டவீரரை நினைந்தும், அம்புதைத்த வருத்தத்தால் செவிசாய்த்துப் புல்லுண்ணுமல் நிற்கும் குதிரையை நினைத்தும், இப்படை நொந்த அளவுக்கு நாளை எவ்வாறு பொருதும் என்று நினைத்தும் நடுங்குதற்குக் காரணமாயுள்ளது அப்பாசறை.

அதன் கண் உள்ள பல பாஷைகளைப் பேசும்படை வீரருக்கு நடுவில் ஓரிடத்தை அரசனுக்குக் கோயிலாக எல்லோரும் வகுத்து, கால்களைக் கூடமாக நட்டு கயிற்றை வலித்துக் கட்டி வலிய விற்களை ஊன்றி அவற்றின்மீது துணிகளைத் தூக்கினார்கள். அத்தோற்றம் முக்கோலந்தணன் தனது முக்கோலில் காவி உடையை இட்டுவைத்த தன்மையை ஒத்தது. பின் பூத்தொழிலைத் தலையினுடைய எறிகோல் களை ஊன்றி பரிசைகளை நிரையாக வைத்துக் குத்துக் கோலிலே தைக்கப்பட்ட பல நிறத்திரைச் சீலைகளை வளைத்து வைத்தார்கள். வாயிலின் முகப்பில் புலியைச் சங்கிலியிற் கட்டிவைத்த வடிவினை சட்டையிட்ட வலிய யவனர் சித்திரித்தனர். கோயிலிடத்து காலத்தின் அளவை அளந்து சொல்லுவோர் அரசனை வணங்கி வாழ்த்தி நாழிகை வட்டிலிற் சென்ற நாழிகை இத்தனை எனக் கூறினர். அஞ்ஞான்று தூவெண்டுகிலுடுத்த பெண்கள் விளக்கைக் கொளுத்திக் காட்டினார்சள் (ஆலத்தி காட்டினார்கள்). அரசன் திரைச்சீலை தூக்கப்பட்ட உள்ளறையிற் படுக்கச் சென்றான்.

தெருவின் நாற்சந்தி தழையால் வேய்ந்த கூரையுடையது. அதனிடத்து காவலாய் நிறுத்தப்பட்ட யானை கரும்பையும் நெற்கதிரோடு கலந்து கட்டிய இலையையும் அதிமதுரத் தழையையும் உண்ணாது அவற்றால் தனது நெற்றியைத்துடைத்தும் அவற்றைகொம்பின்மேல் போட்ட கையிடத்தே கொண்டும் நின்றது; யானைப்பாகர் யானைப் பேச்சாகிய வடமொழியைச் சொல்லி கவர்பட்ட பரிக் கோலாலே கவளத்தைத் தின்னும்படி குத்தினார்கள். நெய் கொப்பழிக்கின்ற திரிக்குழாயை யுடைய சிற்றாட்கள் நீண்ட திரியை எங்கும் கொளுத்தி ஒழுங்காயமைத்த விளக்குகளவியுந்தோறும் தம் கையிடத்துள்ள பந்தத்தைக்

கொளுத்தினார்கள். தலைப்பாகையும் சட்டையும் தரித்த மெய் காப்பாளர் அரசனைக் காவலாகச் சூழ்ந்து திரிய சட்டையிட்ட ஊமைகளாகிய மிலேச்சர் பள்ளிகொள்ளு மிடத்தைச் சூழ்ந்து திரிந்தனர். இவ்வகையாக மணியோசை அடங்கிய நடுயாமத்தும் மற்றை நாட் செய்கின்ற போரை நினைத்து அரசன் துயில்கொள்ளப்பெற்றிலன். மற்றை நாள் அவன் பகைவரைக் கொல்லக் கருதி வைத்த வாளைப் பிடித்து வெற்றியை நிலைபெறுத்தி பகை அரசர் விரும்பும் நிலங்களைக் கொண்ட வெற்றியாலே வெற்றிக்கொடியை எடுத்தான். காட்டு வழியிலே காயா கருமையான பூக்களைப் பூத்தன. கொன்றை பொன்னிறத்தனவாகிய பூக்களைச் சொரிந்தன. வெண்காந்தள் உள்ளங்கைபோல் விரிந்தது. வளைந்த கதிரினையுடையவரகிடத்து முறுகிய கொம்புடைய ஆண் மானுடன் பெண்மான் துள்ளிற்று. திரண்ட தோன்றி இரத்தம் போற் பூத்தது. வெற்றிக்கறிகுறியாகிய சங்கும் கொம்பும் முழங்கின. திரண்ட சேனையுடன்நிரைத்த பரியை வேகமாகச் செலுத்திவந்த அரசனது தேரிற் பூட்டிய குதிரைகள் இறைவியின் செவி நிரம்பும்மடி ஆரவாரித்தன.

---

## VI. மதுரைக்காஞ்சி*

பெரிய திரைகள் வீசுகின்ற கடலை எல்லையாக உடைய உலகம் தேன்கூடு தூங்கும் உச்சியுடையமலைகளையுடையது. திசைகள் குளிரவும் வித்திய விதைகள் ஆயிரமடங்காக விளையவும், மரங்களும் பல்லுயிரும் தழைக்கவும் வானம் பொய்யாது பெய்தது. சூரியனும் சநதிரனும் களங்கமின்றி விளங்கின. நட்சத்திரங்கள் செல்லு முறைமையிற் சென்றன. மக்கள் பசியும் பிணியுமின்றி வாழ்ந்தனர்

* தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை மாங்குடி மருதனார் பாடியது. காலம் கி. பி. 90—130.

அரசன் உலகைத் தாங்குதலால் திக்கு யானைகள் வருத்தந் தீர்ந்தன. இவ்வகையான உலகை பொய் பேசாத மந்திரி மாருடன் பல ஊழிகளிலும் தமது புகழ் நிலைக்கும்படி ஆட்சி புரிந்த உயர்ச்சி பெற்ற அரசர் மாபில் உதித்தவனே! அச்சந்தரும் போர்க்களத்தே குறைத்தலைப் பிணங்கள் எழுந்து தாளத்துக்கு ஆடும்படி, கொம்புகளுடைய யானை யின் நிணத்தைத் தின்ற பேய்மகள் ஆரவாரம் பொருந்திய துணங்கைக் கூத்தாடுவாள். சோறடுகின்ற பேய் வீரரின் தலையாகிய அடுப்பில் அரசருடைய இரத்தமாகிய உலை சினமாகிய தீயினால் கொதித்துப் பொங்குகையினாலே வீர வளையணிந்த தோளுடைய கைகளை அகப்பையாகக் கொண்டு துழாவிச் சமைத்த ஊன்சோற்றை பிறங்கிடாத வீரர்க்கு வேள்வி செய்யும். இவ்வகைத்தாகிய போரை வெல்லும் படையுடைய இராவணன் தமிழ் நாட்டை ஆளாதபடி போக்கின பொதியின் மலையில் இருக்கும் அகத்தியனுக்குப் பின் சான்றோனா யிருக்கும் சிறப்புடை யவனே!

முகபடாத்தையும், நெற்றிப் பட்டத்தையும், கோபத் தையும், மதத்தையுமுடைய மலைபோலுயர்ந்த போர்க்களிறு கோபித்து வீரரைக் கொன்று திரியவும் பகைவர் மேற் செல்கின்ற குதிரைகளின் வேகத்தால் எழும்புகின்ற தூசி சூரியனை மறைக்கவும், குதிரைகள் பூட்டப்பட்ட தேர்கள் காற்றைப்போல் வேகமாகச் செல்லவும், வாள் வீரர் வாளினால் விரைந்து வெட்டவும், சேர சோழராகிய இருபெரிய அரசரோடு குறுநில மன்னரும் இளைக்கும்படி பொருது வென்ற தோடமையாது குறிஞ்சி நிலமன்னரை வென்று பகைவர் நிலங்களைக் கைக்கொண்டு பொன்னா ரத்தை மார்பில் அணிந்த வடிம்பலம்பநின்ற பாண்டியன் மரபில் வந்த வேந்தே!

நானிலத்திலே தொழில்களில்மேலாகச்சொல்லப்படும் உழவு, வாணிகம் என்னும் இரண்டால்பெறப்பட்ட பெரிய செல்வத்தால் புகழ் நிறைந்த குடியானோர் வாழ்வர்.

முது வெள்ளிலை என்னும் குறுநில மன்னரின் நாடு செல்வமிகுந்தது. கொடிய வேனிலால் மேகம் வறட்பினும், தோன்றுங்காலத்தே தோன்றும் வெள்ளி தெற்கே எழினும் ஆற்று வெள்ளம் வந்து பெருகுதலால் அந்நாட்டில் விளைவு மிகும்; அதனால் முற்றிய நெற்கதிர்கள் காற்றிலசைந்து ஒலிக்கும்; அவற்றை அறுப்போர் ஆரவாரஞ் செய்வர்; பறவைகள் அவ்விடத்தே தங்குதலால் ஆரவாரமுண்டாகும். சுறுக்கள் திரிகின்ற கடலின் வெண்மணல் பரந்த கரையில் குடமுழாப்போன்ற காயைத் தாங்குந் தாழைவேலியுடைய குளிர்ந்த இளமரக்காவில் வந்து வீசுகின்ற துவலையின் ஓசையும், படகில் மீன்பிடிக்கச் சென்றோர் வந்து இறங்கும் ஆரவாரமும், கரிய பெரிய கழியிடத்துள்ள உப்புப் பாத்திகளில் வெள்ளிய உப்பை விற்கும் அளவர் ஒலியும், சிறு குடியாய் பெரிய தொழில்களைச் செய்வோருடைய ஆரவாரமும் கலந்தொலியா நிற்கும். இவ்வகையான குறுநில மன்னர் நாடுகளும் நானிலத்தோரும் ஏவல் கேட்கும்படி வேகமாகச் சென்று தீக்கொளுவி தலையாலங்கானமென்னும் ஊரிற்றங்கி பெருநில மன்னரிருவரும் குறுநில மனனர் ஐவரும் படும்படி போர்வென்று அவர் முரசைக் கொண்டு களவேள்வி வேட்டவலிய புயத்தை யுடையவனே!

நன் மக்களிடத்தே தலைமையும், சங்கும் முத்து முடைய சங்கு குளிப்பார் சேரியும், கள்ளுண்ணுங் குடிகளுடைய ஊர்களுமுடைய கொற்கை என்னும் ஊரினுள்ளோர் விரும்பும் பொருநனே!

நின் ஊரின் கண் இருத்தலை விரும்பாது பகைவர்மேற் பொருதலை மேற்கொள்வை ; கொண்டு யானைகளைப் பரப்பி புறங்கொடுத்தார்மேற் செல்லாத படையோடு முருகன் பகைமேற் செல்வதுபோலத் தடையறப் பகைவரிடத்திற் செல்லுவை ; சென்று நாவலந்தீவிலுள்ள சோழமண்டலம், தொண்டைமண்டலம் என்னும் மண்டலங்களை அடிப்படுத்தி பகைவர் நின் ஏவல் கேட்கும்படி ஒழுகுவை ; நின்னுடன் நட்புக்கொண்டவர் குடியை உயர்த்துவை. ஆகையினாலே நின் குலத்துப் பெரியோர் ஒழுகிய அரசமுறை இது வென்று அவர்க்கு விளக்குவை. பின்னர் அம் மண்டலங் களைச் சூழவிருக்கும் குறுநில மன்னர் அரண்களிலுள்ள வற்றை எளிதிற்கொண்டு அவற்றை எல்லாம் நினக்கெனப் பாதுகாவாது ஊரிடத்திருந்து பிறர்க்குக் கொடுப்பை. பனி ஒழுகும் மலைகளுள்ள காடுகளைக் கடந்து பகைவர் உள் நாடுகளிலே புகுந்து அவரரண்களைக் கைக்கொள்வை. தொன்றுதொட்டு வரும் ஒன்னலர் நின் ஏவல்கேட்டு ஒழு காமையால் அவர் நிலத்தை அடைந்து மரங்களைச் சுட்டு மலைகளை நீறுக்கும் இடியேற்றை ஒத்தனை?

அரச இலக்கணந் திறம்பாமல் படை எழுந்த ஆர வாரம் ஆகாயத்தின்கண் ஒலியா நின்றது. குதிரைகள் செல்லும் வேகத்தாற் தூசி எழும்பிற்று. சங்கும் கொம் பும் ஆர்த்தன. வீரர் மழைபோல் அம்புகளைத் தூவினர்; காட்டை வெட்டி யழித்து நாடுகளழியும்படி மதில்களைக் கைக்கொண்டு சுற்றத்தாரோடுகூடிய பகைவரின் வலியைத் தொலைத்தனர். மருத மரங்களை நெருப்புண்டது. நாடென்னும் பெயர் பெற்ற இடம் காடென்னும் பெயர் பெற்றது. பசுத்திரள் தங்குமிடம் புலி தங்குமிடமாயிற்று. ஊராயிருந்த இடங்கள் பாழாய்க் கிடந்தன. வளையலை

யும் மடப்பத்தினையுமுடைய மகளிர் துணங்கைக் கூத்தையும் தாள அறுதியுடைய குரவைக் கூத்தையும் மறந்தனர். சான்றோர்களிருந்த அம்பலங்களில் இரட்டையான அடிகளையும் அச்சந்தரும் பார்வையினையுமுடைய பேய்மகளிர் உலாவி ஆடினர். இல்லுறை தெய்வங்கள் உலாவும் அகன்ற ஊரிடத்து நிலத்திலுள்ளாரை யெல்லாம் உள்ளே போக்கும் வாயில்காப்போரின் வாயில்களிலிருந்து மனவருத்தமுடைய பெண்கள் வருந்தி அழுதனர். பசியாலுலர்ந்த குடிகளுக்குப் பாதுகாவலாக அயல் நாடுகளிலுள்ள சுற்றத்தார் வந்து சேர்ந்தனர். பெரிய மாளிகைகளிலே வெந்து வீழ்ந்த கரிந்த குதிரிலே கூட்டினையுடைய கூகைச் சேவல் பேட்டுடனிருந்து கத்திற்று செங்கழுநீர் மிக்க இடமகன்ற பொய்கையிடத்து யானை நின்றால் மறையும் வாட்கோரையுடன் சண்பகக்கோரையும் வளர்ந்தன. எருது களுழுத விளைகின்ற வயல்களில் பெண் பன்றியுடன் ஆண் பன்றி ஓடித்திரிந்தது. நின்னேவல் கேளாமையால் பகைவரது நாடுகள் இவ்வாறு கெட்டுப் பாழாயின. அந் நாடுகளை ஆட்சி புரியவேண்டுதலின் அவற்றில் பல ஆண்டுகள் தங்கியிருப்பை. அதனால் அந் நாடுகள் பண்டையில் சிறப்படைதற்குக் காரணமாயிருந்த வெல்லும் போரினை உடைய தலைவனே! தென்றிசைக் குமரி வடதிசை இமையம் கிழக்கும் மேற்கும் கடல் ஆகிய எல்லையாக உள்ள நாட்டிலுள்ளார் எல்லாம் ஏவல் கேட்கும்படி வெற்றி மிகுந் தன்மையுடையை. ஒரு பொய்யினால் தேவருலகை அமுதத்தோடே பெறவரினும் அதனை விரும்பாது மெய்யுடன் நட்புச் செய்தலுடையை. இவ்வுலகின்கண்ணுள்ள எல்லாருடனும் தேவர்களும் பகைவர்களாய்ப் படை எடுத்துவரினும் பகைவர்க்கு அஞ்சிப் பணிதலைச் செய்யாய். தென்றிசையிலுள்ள நிலத்தில் மலைகள் நிறையும்படி 'வாணன்' என்னும் சூரன்

வைத்த பொருட்டிரள் கிடைப்பதாயினும் பிறர் கூறும் பழி நமக்கு வருமென்பதனால் அதனை விரும்பாய். பிறர்க்குக் கொடுப்பதினால் வரும் புகழை விரும்புவை. புகழுடையவனே! எல்லாராலும் தொழப்படும் பிறை நாடோறும் சிறக்குமாறுபோல உனது வெற்றித் திருவினால் உன் பிற் சந்ததியிலுள்ளோர் வெற்றியும் தலை முறையாக மிகுவதாக. உனது பகைவரது ஆக்கம் தேய் பிறைச் சந்திரனைப்போல நாடோறும் தேய்வதாக. சேய் மைக்கண் சென்று விளங்கும் நின்புகழ் ஒருகாலமும் கெடாது நிலை பெறுவதாக.

திருவழுதி நாடென்னுஞ் சிறப்புப் பெயர் பெற்ற பாண்டி மண்டலம் குறிஞ்சி முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப் பெரியோரால் வரையறுக்கப்பட்ட ஐவகை நிலங்களும் பொருந்தி இனிது விளங்கும்.

கீழ்த்திசைக் கடலில் நீரையுண்ட மேகம் மேற்றிசைக் கடற்கரை யிடத்துள்ள மலையிற் றங்கி மருதநிலத்தே மழையைப் பொழியா நிற்கும். அதனால் எழுந்த வெள்ளம் கவலைக்கிழங்கு கிண்டிய குழியில் பாய்ந்து ஒலி செய்யா நிற்கும். மலையிடத்துள்ள யானைக் கூட்டங்கள் அஞ்சும்படி இடியோடு கூடிப் பெய்கின்ற பெருமழை மிகுதலால் ஆறு முட்டி ஆற்றிடைக்குறையில் ஏறும்படி வெள்ளம் பாயும். அவ்வெள்ளத்தைத் தேக்கிவைத்த குளத்து நீரால் கழனி களில் யானை நின்றாற் றெரியாத நெல்விளைந்திருக்கும். மடுக் களிலும் பொய்கைகளிலும் தாமரைப் பூவும், இதழ் விரிந்த நீலப் பூவும், மெல்லிய இலையினையும் வண்டுகளையுமுடைய ஆம்பற் பூவும், வண்டுகள் தங்கும் வாசம் பொருந்திய பிற பூக்களும் விளங்கும். கழனிகளிலும், மடுக்களிலும், பொய்கைகளிலும் சம்பங் கோழிகள் உறக்கங் கொள்

ளும்படி வள்ளைக் கொடியைத் தள்ளி மீன்களை வாரிக் கொண்டு விலைகூறி விற்கும் வளைந்த கொண்டையுடைய வலைஞர் கம்பலை ஒருபால் எழும். கரும்பிற்கு இட்ட ஆலை யிடத்து ஓசையும், களைபறிக்குமோசையும் ஒருபால் எழும். வயலிடத்துச் சேற்றிலே கிடக்கும் கிழ எருத்தின் வருத்தந் தீர்க்கும் கள்ளுண்ட களமரின் ஆரவாரமும் நெல் லறுப் போரின் ஆரவாரமும் ஒருபால் ஒலியா நிற்கும். மழைத் தூறலுடைய மேகந் தங்கும் திருப்பரங்குன்றில் விழாக் கொண்டாடுமோசையும், மகளிர் திரள் தம்மிடத்து நெருங்கின கூந்தல் தம் கணவர் மார்பின் மாலையுடன் கூடும் படி புதுப்புனலாடுமோசையும் ஒருபால் ஆகாயத்தின் கண் ஒலிக்கும். பலவகைப்பட்ட ஆரவாரங்களுடன், குரு கென்னும் பறவைகள் சத்தமிடும்படி வீட்டு மரங்கள் தோறும் மீனைத் திருத்தும் பாணர்களின் பாடலோசையும் சேர்ந் தொலியா நிற்கும். காடு சூழ்ந்த முல்லை நிலத்தில் முசுட்டையினதும் முல்லையினதும் வெள்ளிய மலர்கள் பாறைகளின் மீது உதிர்ந்து பரந்து கிடக்கும். கரிய காலினையுடைய வரகும் எள்ளின் காயும் முற்றியிருக்கும். ஒருபால் தினையினை அறுப்பார்கள். அங்கு மிங்கும் ஆழ்ந்த குழிகளில் இரத்தினங்கள் கிடந்து விளங்கும். பள்ளங்களி லுள்ள நீரில் நெய்தல் பூத்திருக்கும்.

குறிஞ்சி நிலத்தே அருவி நீர் ஒலியா நிற்கும். மேட்டு நிலத்தே ஐவன நெல்லும் தோரை நெல்லும் வளர்ந்திருக் கும். ஒருபால் தினையிடத்தில் கிளி ஒட்டுமோசையும், ஒரு பால் அவரையைத் தின்னும் ஆமாவை ஓட்டுமோசையும், ஒருபால் குறவன் ஆண்பன்றியைப் பொய்க் கிடங்கில்வீழ்த் திக் கொன்றதனாலுண்டான ஓசையும் எழாநிற்கும். ஒரு பால் வேங்கைப் பூவைப்பறிக்கும் மகளிர் புலி புலி எனக்

ஆரவாரமும்,ஒருபால் பன்றியைக் கொல்லும்புலியின் கூறும் ஆரவாரமும் ஆகிய இவ்வோசைகளெல்லாம் மலையிடத்து எதிரொலி செய்யா நின்றன.

அருவிகளில்லாத அழகு குன்றின பாலை நிலத்து ஊகம்புல் வைக்கோல் போல்காய்ந்திருக்கும். முழைஞ்சுகள் சூறுவளியை முகந்து கொள்ளும். அதனால் வேனிற் குன்று கடல்போல் ஒலிக்கும், குழையால் வேய்ந்த குடிசைகளில் வாழும், மான்றோலாகிய படுக்கையையும், தழை விரவின மாலையையுமுடைய இளையோர் அரசர் ஆணையால் சுரத்தே ஆறலைகள்வரைக் காக்கும்படி வில்லுடன் செல்லா நிற்பர். நெய்தல் நிலத்தில் முத்தும் வளையும் கடல்தந்த பல்வகைப் பண்டங்களும் விலைசெய்யப்படும். யவன முதலிய தேயத்தினர் குதிரை முதலியவற்றைக் கொணர்ந்து கொடுத்து, வெள்ளுப்பும் தீம்புளியும் கொழுத்த மீன்களைத் துணித்து உப்பிட்டுலர்த்திய கருவாடும் என்றிவை போன்றவற்றைக் கொண்டு போவர்.

இவ்வைந்திணைப் பாங்கும் அழகுறப் பெற்றுப் பாடல்கள் சான்ற நன்னாட்டு நடுவில் திருவாலவாய், திருநள்ளாறு, திருமுடங்கை, திருநடுவூர் என்னும் நான் மாடக் கூடல் எனப் பெயர் பெற்ற மதுரை மாநகரமானது பூமாதின் அழகிய முகம் போல் பொலிவு பெற்றிருக்கும். வைகை ஆற்றங்கரைகளில் வானளாவி உயர்ந்து மந்திகள் கிளைகளில் தாவி விளையாடுகின்றனவும்,மயில்கள் இருக்கின்றனவுமாகிய மரங்கள் செறிந்தனவும், மலை உச்சிகளினின்றும் குதிக்கும் நீர் கொண்டுவந்து குவித்த மணற்குன்றுகளுடையனவுமாகிய சோலைகளுண்டு. நீராடுங் கரைகளிலே மரங்கள் உதிர்த்த மலர்கள் மாலைபோல வைகையாற்றிற் செல்லும். அவ்வாற்றின் கண்ணுள்ள துறைகடோறும்

பாண் சாதியினர் குடியிருப்புகளுமுண்டு. நகரைச் சூழ்ந்த அகழி பெரிய செல்வத்தையுடைய மானவிறல்வேளின் அம்பி ஊரை ஒத்த நாடுகளைப் பறிகொடுத்த அரசர் பகை மேற்கொண்டு வந்து புறங்காட்டி ஓடுவதற்கேதுவாக மண்ணுற ஆழ்ந்திருக்கும். நகரைச் சூழ்ந்த மதில்கள் கற்படையுடையனவாய் வானுற ஓங்கி யிருக்கும். நெய் பூசுதலால் கருமை எய்திய நெடிய நிலைகளையும் திண்ணிய கதவினையுமுடைய வாயிலின் மீதமர்ந்த மாடங்கள் மேகமுலாவும் மலைபோல் ஓங்கி யிருக்கும். மாந்தரும் மாவும் இடையறாது போக்குவரத்துச் செய்தலின் வாயிலானது இடையறாது ஓடுகின்ற வையையாற்றினைப் போன்றிருக்கும். வாயிலைக் கடந்த மாத்திரத்தில் அகன்ற தெருக்களும் அவற்றின் இரு புறத்திலும் சாளரங்கள் பலவமைந்தனவாய் உயர்ந்து தோன்றும். வீடுகளும் ஆறு மதன் இரு கரையும்போல் விளங்கும். கடைத் தெருவிலே பல பாஷைகளைப் பேசும் மக்களின் ஆரவாரம் மிக்கொலிக்கும். ஒருபால் முரசை ஒலித்து விழாவினைச் சாற்றுமோசை காற்றால் கொந்தளிக்கும் கடலோசைபோல் முழங்காநின்றது. நீரைக் கையாற் குடைந்து விளையாடுதல் ஒத்த வாத்தியங்கள் ஒலித்தலைக் கேட்டோர் தெருக்களில் நின்று ஆடி ஆரவாரஞ் செய்தனர். அங்காடித் தெருவிலே கோயில்களுக்கு விழாக்களை நடத்திக் கட்டின அழகிய கொடிகளும், தண்டத்தலைவர் பெற்ற வெற்றியின் பொருட்டு எடுத்த வெற்றிக்கொடிகளும், கட்கடைகளில் கள்ளின் களிப்பு மிகுதியைச் சாற்றுகின்ற கொடிகளும் பெரிய மலையிடத்து அருவி அசையுமாறு அசையாநின்றன.

மரக்கலங்கள் பணிமீனும் சங்குகளும் உலாவுகின்ற கடலில் பாய்மரம் அடியோடு முறியும்படி காற்றடிக்கை

யினால் நங்கூரக்கல் கயிற்றுடனே நின்றுலாவி நீர்ச்சுழியிலே அகப்பட்டு நின்று சுழலும். அதனைப்போல கோபமிகுந்து குத்துக்கோற்காரரைக் கொன்று பாகரை வீசி காலிற் சங்கிலி கட்டின தறியை முறித்து முன்னும் பின்னும் சங்கொலிக்கும் மதயானைகளை யுடையது அரசனது யானைப்படை. தேர்ப்படை, காற்றைப் பிளந்து ஞாயிற்றை அடையவேண்டுமென விரும்பிப் பறக்கும் சிவந்த காலை யுடைய அன்னச்சேவலை ஒத்த வெள்ளிய குதிரைகள் பூட்டப்பட்டுக் காற்றெனச் செல்லும் தேர்களையுடையது. குதிரைப்படை வட்டமாகவும் நேராகவும் ஓடும் கடுஞ் செலவினையுடையது. காலாட்படை கள்ளுண்டு மயங்கி யானைபோற் செல்லும் வீரரையுடையது. இவ்வகைத் தாகிய யானையும் தேரும் புரவியும் வீருமாகிய நாற் படையும் வருவனவாய் மீள் கையினாலே, இனிய பண்ணியாரங்களை விற்பாரும், பொற்பூக்களுடைய தலை யினையும் வீரக்கழலணிந்த காலினையுமுடைய வீரர் முன் னின்று கொட்டும் வீரமத்தளத்தினது கண்போன்று உருண்ட பூந்தட்டிலே இட்டு வந்த பூவினை விற்பாரும், சுண்ணம் விற்பாரும், வெற்றிலையும் பாக்கும் சுண்ணாம்பு டனே விற்பாரும் இன்னுயிரஞ்சி ஏங்கி யிருப்பார்கள். அந் நாற்படையும் அகன்ற பின்னர் வருத்த நீங்கி, மாட மாளிகை கூடகோபுரங்களின் குளிர்ந்த நிழலிலே இருந்து இளைப்பாறுவார்கள்.

இளமகளிர் அழகும், சிவந்த நிறமும் ஆடவர்க்கு வருத்தம்தரும் கண்களும், நாருரித்த ஆம்பற்றண்டுபோன்ற நிறமும் பொருந்தா நிற்பர்; அவர்கள் நேரிய கூர்ந்த பற் களுடைய வாயும், தொய்யிற் குழம்பால் கொடி எழுதப் பெற்றதும் நெகிழ்ந்து சிந்துமாறுபோன்ற சுணங்கு பரந்தது

மாகிய இளைய தனமும், மையொழுகினாற் போன்ற செறிந்த மயிரும், மயிலின் சாயலும் மடப்பத்தையுடைய வார்த்தையும் உடையர். அவர்கள் தம்மைக் கோலஞ் செய்து மெத்தென நடந்து கையைத் தட்டி, காம நுகர்ச்சியினையன்றி வேறொன்றையுங் கல்லா இளையோருடனே மகிழ்ந்து அணைவர். சங்குபோல் நரைத்த மயிரினைக் கோதிப் பின்னே முடிந்த கிழப்பெண்டிர், அவ் விருப்ப மருவிய வடிவினையுடைய இன்பந் நுகர்கின்றார் விரும்பும் பொருள்களை நறும் பூவுடனே ஏந்திச் சென்று மனைகடோறும் உலாவி விற்பர். மேகம் முகப்பவும் ஆறுகள் பெருகவும் கடல் நீர் குறைதல் கூடுதலின்றி இருக்கும். அதுபோல அங்காடித் தெருவிடத்து பலர் வந்து கொள்ளக் கொள்ளக் குறையாமலும் பலர் கொண்டுவரக் கொண்டுவர மிகாமலும் பண்டங்கள் இருந்தன.

மாலைக் காலத்தே பூத் தொழிலுடைய பட்டாடைகளை உடுத்து, அரையிலே உடைவாளைச் செருகி தோளிலே சால்வை தரித்து, வீரக் கழலும், வேப்பமாலையும், மாணிக்கமாலையும், செங்கழுநீர் மாலையும் தரித்த செல்வர் குதிரைகள் பூட்டிய தேரில் காலாட்கள் சூழ்ந்துவர வீதிகளிற் சென்றனர். மாடங்கடோறும் நிலாமுற்றத்து விழாக் காணும் பொன்னாபரணங்களையும் பூத்தொழிலுடைய வளையிலையும் சிலம்பினையும் அணிந்த மகளிரின் முகங்களானவை, கொடிகளின் மீது மந்த மாருதம் வீசுதலால் மேகத்தில் மறையுஞ் சந்திரனைப்போல ஒரு காற்றோன்றி ஒருகால் மறையும்.

குற்றமில்லாத யாக்கையை உடைய செல்வர்கள் பூசியிருந்த புனுகு முதலியவற்றின் மணம் தெருக்களிற் கமழும். பெண்களின் முகங்கள் சந்திரனைப் போன்று

மறைந்து தோன்றும். சிவபெருமானை ஏனைத்தேவரினும் மேலாகக்கொண்டு வாடாத பூக்களையும் இதழ் குவியாத கண்ணினையும் அவியாகிய உணவினையுமுடைய மாயோன் முருகன் முதலிய தெய்வங்கட்கு பலி கொடுத்தற்கு அந்திக்காலத்துக்கு முன்னாக எழுந்த விழாவில் வாத்தியங் கள் ஒலித்தன. புத்தமதத்தினராகிய இளமகளிர் தாமரைப் பூவைப் பிடித்தாற்போல சிறு பிள்ளைகளை எடுத்துக் கொண்டு, தங் கணவரோடு பூசைக்குவேண்டும் பூவினையும் தூபங்களையும் கைகளில் ஏந்திச் சென்று வணங்கும் பௌத்த பள்ளிகள் ஓரிடத்துக் காணப்பெறும். சிறந்த வேதங்களை ஓதி யாகாதி கருமங்களைச் செய்து, பிரமங்கள் தாங்களேயாய், வீட்டின்பத்தை இவ்வுலகில் தானே அடைகின்ற பிரமவித்துக்கள் இருப்பிடம் ஒருபாற் புலப் படும். மலைக்கூட்டம்போல உயர்ந்து தோன்றும் நகரில் பூக்களைக் கையிற் கொண்டு விரதங்காப்போர் துதிக்க விளங்குகின்ற அமணப் பள்ளியிடத்து, மூன்றுகாலமும் மூவுலகின் செய்தியும் முழுதுணரும் சமண முனிவர்கள் உறையா நிற்பர். அப்பால் துலாக்கோல் போன்று நடுவு நிலையுடைய தருமத்தைக் கூறும் அறங்கூறவை தோன்றும். யாகங்களைப் பண்ணிப் பெரிய சுவர்க்கத்தை ஏறப்போகு மந்தணர் அரசனை அடக்குவர். அதுபோல அரசன் தன்னிடத்துள்ள நன்மையும் தீமையும் நெஞ்சத்தாலே கண்டு அத்திங்குகளை ஆராய்ந்து அவற்றிலே ஒழுகாமல் அடக்கும் சுற்றத்தினையுடையன். காவிதிப்பட்டம் கட்டப் பெற்றவரும், தலைப்பாகை தரித்தவரும், அரசன் தருமத் தினின்றும் திறம்பாமல் பார்துகாப்பவருமாகிய அமைச்சர் இருக்கை அப்பாற் றோன்றும். அப்பால், மலைகளைப் போன்று பருந்துகள் இளைப்பாறியிருந்து பின்பு உயரப்

பறக்கும் பல தொழில் மாட்சிமைப்பட்ட, பிற நாடுகளி னின்றும் வந்த செல்வர்களாகி வணிகரின் மனைகள் தோன்றும்.

இடைவிடாது மழை பெய்கின்றமையால் விளைவுடைய பழையன என்னும் குறுநில மன்னனுடைய மோகூரிடத்து கோசர் விளங்கினாற்போல புரோகிதர், சேனாபதியர், தூதர், ஒற்றர் என்னும் நால்வகைப் பெரிய கூட்டத்தினரும் விளங்குவர்.

சங்கை அறுத்து வளையில் முதலியன செய்வாரும், மணிகளைத் துளையிடுவாரும், பொற் கொல்லரும், பொன் வாணிகரும், ஆடை விற்பாரும், செம்பை நிறுத்து வாங்கு வாரும், பூக்களையுஞ் சாந்தையும் விற்பாரும், சித்திரகாரரும், நெய்தற் றொழிலைச் செய்வோரும், பிறருங் கூடி அந்திக் கடையில் ஒருவர்க் கொருவர் கால் நெருங்கும்படி நிற்பர். அவ் வாரவாரம் பனந்தாரையுடைய சேரனுடைய பெரிய நாளோலக்க இருப்பிலே அறிவுடையோர் கூடித் தருக்கங் களைக் கூறும் ஆரவாரம் போன்றிருந்தது. அறக் கூழ்ச் சாலையில் பலாப் பழம், வாழைப்பழம், முந்திரிகைப் பழம் முதலிய பழங்களையும் பாகற் காய் வாழைக்காய் வழுது ணங் காய் முதலிய காய்களையும் இலைக் கறிகளையும் கண்ட சருக்கரைத் தேற்றையும், இறைச்சிகளையுடைய சோற்றை யும் கிழங்குகளுடனே பால் முதலியவற்றையும் கொண்டு வந்து பசி தாகங்களினால் வருந்துவோர்க்கும் தரித்திரர்க்கும் இடுவார்கள். மரக் கலங்களிற் பண்டங்களைப் பறிக்கும் பட்டினத்துப் பெரும் ஆரவாரமுண்டாகும். பல இடங் களிலும் எழுந்த ஆர்ப்பு மரக்கலங்களிற் பண்டங்களை இறக்கும். அப் பட்டினங்களில் பார்ப்புக்கு இரையைக்

கவர்ந்து பறந்து செல்கின்ற பல்வகைப் பறவைகளின் ஆரவாரத்தை ஒத்தது.

ஞாயிறு அத்தகிரியில் மறைந்தது. நிறை உவா தோன்றிற்று. பெரிய நகரினிடத்துப் பெண்ணைப் பெண் காமுறும் அழகிய மகளிர் ஒளியுடைய விளக்கை ஏற்றினார்கள்; தம்மைக் காதலிக்கும் இனிய கணவரைக் கூடுதற்கு நெடியமயிரிற் பூசினமயிர்ச் சாந்தத்தை அலைத்து நீக்கினார்கள்; கஸ்தூரியையும் நறிய சந்தனத்தையும் பூசினார்கள்; மெல்லிய நூலாற் செய்த ஆடைகளுக்கு அகிற் புகை ஊட்டினார்கள். மாலைக்காலம் ஓசை உடையதாயிருந்தது. கணவரைப் பிரிதலிற் கூட்டத்தை விரும்பியிருந்தார்க்கு நோய் செய்யும்முன் யாமம் கழிந்தது.

நீல ஆகாயத்தே விளையாடும் தெய்வமகளிர் வருத்துமாறுபோல தம்மைக் கண்டோருடைய நெஞ்சை வருத்திப் பொருள் வாங்கும் பரத்தையர் விளக்கின் ஒளியில் பலருஞ் சேர நெருங்கினார்கள். கடற்கரையிற் றுறைபிற் குவிந்த மணலில் யாழ்வாசித்து மத்தளங் கொட்டி ஆடினார்கள். அதனை வெறுத்து குவளை மலராற் றொடுத்த மாலையை ஆடையின் விளிம்பிலே படும்படி உடுத்தார்கள்; வெள்ளிய பூக்களாற் செய்த மாலைகளை ஆகாயத்திலே சென்று நாறும்படி கொண்டையில் முடிந்தார்கள். தமது வடிவழகை விரும்பிவந்த உள்ளூராரும் பிற நாட்டாருமாகிய செல்வ இளைஞரை பல வஞ்சனைகளையுடைய மொழிகளால் கூட்டிச் சென்று அவர்கள் மார்பு தம் மார்பிற் படும்படி முயங்கினார்கள்; அன்புடையார் போற்றழுவின முயக்கத்தைப் பொருள் தருமளவும் மறைத்து அவருடைய செல்வமெல்லாம் கெடும்படி வாங்கினார்கள்; பூ அலருகின்ற காலமறிந்து அதன் நுண்ணிய தாதை உண்டு தாதற்ற வறிய

பூவைப் பின் நினையாமல் துறக்கும் வண்டுகளைப்போல் தம்மைக் கலந்தோருடைய நெஞ்சு கலங்கும்படி அவருடைய கூட்டத்தைக் கைவிட்டார்கள் ; முற்படப் பலருடன் புணர்ந்த புணர்ச்சியால் குலைந்த ஒப்பனைகளைப் பின்னும் அழகு செய்தார்கள். அரும்புகள் அலரும் செங்கழுநீர்ப் பூவையும் ஏனைய மலர்களையும் மழைக்கு மலர்ந்த சிறு தூற்றைப்போல் வேய்ந்தார்கள் ; அலரும் பருவமாக மலர்ந்த புதிய விடு பூக்கள் தெருக்களெங்கும் கமழ்ந்தன. வளையலணிந்த கையுடைய அவ் விலைமாதர் கைவீசி நடந்து மனைகடோறுஞ் சென்று பழ மரத்தைத் தேடிச் சென்று அதன் பழக்கத்தையே உண்ணும் புள்ளினம்போல பொருடருதற்குரிய இளைஞரோடு விளையாடினார்கள்.

அவுணர் கூட்டத்தைவென்ற பொன்னாற் செய்த மாலையுடைய திருமால் பிறந்த ஓணநாளில் ஊரிடத்தில் விழா எடுப்பார்கள். போர்த்தினவுடைய மறவர் கள்ளுண்டு ஒருவரோடொருவர் பொருது நெற்றியிலே காயமுடையராய்த் தோன்றினர். போர்பழகும் யானை ஓட்டுதலால் ஓடுகின்ற களிற்றினை பரிக்கோற் காரர் சென்று பிடிப்பர். அதனைப் பிடிக்குந் துணையும் போர்க் களிறு அணுகாதபடி நீலச் சீலையிலே வைத்துள்ள கப்பணத்தைச் சிதறுவர். அக்கப் பணங்கள் காலைத் தொளைக்கவும் அஞ்சாதவர்களாகி அப்போர் மறவர் காயங்களுடன் திரிதலைச் செய்வர்.

ஈன்றணிமை நீங்கிய செல்வமகளிர் தெய்வத்தினருளால் ஓரிடுக்கணுமற்று குளத்து நீரிற் குளிப்பார்கள். அஞ்ஞான்று முதற் சூற் கொண்டமகளிர் இவ்வாறே இடுக்கணின்றிப் புதல்வரைப் பயத்தல் வேண்டுமென்று தெய்வத்தைப் பரவுவர். பின்னர் தமது சுற்றத்துடன் பூசைக்கு

வேண்டும் பொருள்கள் பலவற்றுடன் *தேவராட்டியோடு யாழிற் செவ்வழிப் பண்ணை வாசித்து முழவு கொட்டி சிறு பறை ஒலிப்ப மயில்போல மெத்தென மெத்தென நடந்து கையாற்றொழுது பாற்சோறு முதலியவற்றை உண்பர். கார் காலத்தே பூத்த குறிஞ்சிப்பூவைச் சூடிய மகளிர், கடம்பு சூடுகின்ற முருகனைத் தம் மெய்யிடத்தே நிறுத்தி வழிபட்டு கைகோத்து மன்றுகடோறும் குரவை ஆடுவர். சேரி கடோறும் நிகழும் பாட்டுகளும் கூத்துகளும் கலந்தலினாலே வேறு வேறு ஆரவாரம் தோன்றும். நன்னன் கொண்டாடும் பிறந்த நாளிடத்து சேரியிலுள்ளார் கொண்டாடுகின்ற விழாவால் ஆரவாரம் எழுந்தாற்போல கம்பலை நிறைந்த முற்சாமம் கழிந்தது. பதினைந்து நாழிகைகொண்ட இரவில் இரண்டாஞ் சாமத்துக்கும் நாலாஞ் சாமத்துக்கு மிடையில் தெய்வங்கள் உலாவா நின்றன. சங்குகள் ஆரவாரமின்றிக் கிடந்தன. மடப்பத்தினையும் செருக்கினையும் ஒள்ளிய அணிகலன்களையு முடைய மகளிர் துயில் கொண்டனர். இனியபாகோடு சேர்த்துக் கரைத்த மாவினையுடைய அப்பவாணிகரும் அவற்றோடே யிருந்து தூங்குகின்றவர்களாய் உறங்கினர். திருநாளிலே கூத்தாடுங் கூத்தர் அஃதொழிந்து உறங்கினர். பேய்களும் தெய்வங் களும் உறவுகொண்டு சுழன்று திரியா நின்றன.

நகர் காவலர் புலிபோலுனர்; துயில்கொள்ளாத கண்ணர்; அஞ்சா நெஞ்சர்; களவு தொழிலையும் தந்திரங் களையுங் கண்டறியும் நுண்ணறிவினர்; குறிதப்பா அம்பினர்; தெருக்களில் மழை நீர் பெருக்கெடுத்தோடும் காரிருள் கவிந்த யாமங்களிலும் ஊர் சுற்றிவரும் இயல்பினர்; கறுத்த உடலினர்; கருஞ்சேலை உடுத்த உடையினர்;

* தெய்வ மேறப்பெற்றவள்.

வாள் கைக்கொண்ட கையினர்; மென்னூலேணி சுற்றிய அரையினர்; விழித்தகண் இமைக்குமுன் மறைந்தோடும் வலியுடைய கள்வரையும் கடிதிற் கொணரும் ஆற்ற லுடையர். இவ்வகையினராகிய காவலர் உலாவுகையி னாலே ஒலியின்றி அடங்கின கடலைப்போல படுக்கையிலே துயில் கொள்வோர் இனிதாகக் கண்வளர்ந்தனர். வைகறைக் காலந் தோன்றிற்று. வேதத்தை முற்ற ஓது தலையுடைய அந்தணர் அவற்றிற் சொல்லிய துதிகளைப் பாடினர். பரிக்கோற்காரர்களிறுகளுக்குக் கவளத்தைத் தீற்றினர். தேரிற் பூட்டும் குதிரைகள் பந்தியில் நின்று புல்லை மென்றன. பண்டம் விற்பார் பலவேறுபட்ட பண்டங்களையுடைய கடைகளை மெழுகினர். கள்ளு விற் போர் களிப்பினையுடைய கள்ளுக்கு விலை கூறினர். திண்ணிய சுவர்களுடைய வீடுகளில் கதவுகளொலித்தன. கள்ளை உண்டு களித்தோர் முழங்குகின்ற மழலை வார்த்தைகளைக்கூறினர். நின்றேத்துவார் வாழ்த்தினர்; இருந் தேத்துவார் புகழினைச் சொல்லா நின்றனர்; வைதாளிகர் தத்தமதுறைக்குரியவற்றை இசைத்தனர். நாழிகைசொல்லு வார் நாழிகை சொல்லா நிற்ப பள்ளி எழுச்சி முரசு ஒலித் தது. பொறியினையுடைய கோழிச் சேவல் விடியற்காலத்தை அறிவித்துக் கூவிற்று. சேவற் பறவைகள் தத்தம் பெடை களை அழையா நின்று தீங்குரல் செய்தன. கூட்டிலே உறை கின்ற கரடி புலி முதலிய வலிய விலங்குகள் முழங்கின. பிடியோடு கூடின யானைகள் பிளிறின. முதுகுகாட்டிப் போந்த வீரரும் வெட்டுண்ட வீரரும் விடுத்த யானை களும், பகைவருரைச் சுடுகின்ற விளக்கிலே நிரைகாத் திருந்த வீரரை மாளவெட்டி வேல் கோலாக அடித்து வந்த பசுத்திரளும், தோல்வியடைந்த அரசர் திறையாகக் கொண்டுவந்த கலங்களும், அவைபோன்ற பிறவும் அரண்

மனையை நோக்கிச் சென்றன. இங்ஙனம் கங்கையாறு கடலிற் கலந்தாற்போல, உலகிற் பொருள்களெல்லாம் மதுரையை அடையும்.

இம் மாநகரில் கோயில் கொண்டு செங்கோல் செலுத்தும் பாண்டியன் விளங்குகின்ற ஆபரணத்தையுடைய மகளிர் பொன்னாற் செய்த வட்டில்களிலே எடுத்த மண நாறுகின்ற கள்ளினைத் தரத்தர அதனை உண்பான். உண்டு சிறந்த கற்பும் அழகிய தேமலும், மணிகளழுத்திய பொன்னாபரணங்களும், மாந்தளிர் போன்ற நிறமும், கூரிய எயிலும், பிரகாசிக்கின்ற மகரக் குழை பொருந்திய காதும், மலர்ந்த செந்தாமரைபோன்றமுகமும், தொடியுமுடைய மகளிரின் தோளில் முயங்குவான். தூக்குமாலைகள் நாலும் படுக்கையில் துயில் கொள்ளுவான். "தான் செய்யு நல்லறனும் ஒண் பொருளுஞ் சிந்தித்து" வைகறையாமந் துயிலெழுவான். எழுந்த காலைக் கடனை முடித்து மார்பிலே மாலை தாங்கி கையிலே வீர வளையுடன் கணையாழியைச் செறித்துக் கஞ்சியிட்ட துகிலையுடுத்து, அதன்மேலணியும் அணிகலன்களை அழகுறவணிந்துகொலு மண்டபத்து வீற்றிருப்பான். இருந்த வளவிலே ஏனாதிப் பட்ட முதலிய சிறப்புப் பெற்ற படைத் தலைவர் அவனது வெற்றித் திறத்தை வாழ்த்துவர். பின்னர் அரசன் தான் நாடு நகர் பெறும்படியாகவும், தன் வெற்றி சிறக்கும்படியாகவும் உதவிய வீரரை எல்லாம் அழைத்துப் பாவலருடனே பாணர் பாட்டியரையும் அழைத்து யானை தேர் என்பன போன்ற பரிசளிப்பான். அங்ஙனம் பல பல பொருள்களைக் கொடுத்தலால் அந் நாட்டில் வாழும் குடிமக்கள் செல்வம் பெருகி யிருப்பர். இவ்வாறு விளங்குகின்ற அரசனே! வாழ்வாயாக. புகழ் செறிந்த வேந்தர் செல்வ வருவாயினையுடைய நகரிலிருந்து நாடோறும் யாழ்வாசித்தாற் போன்று பாடும் விற

லியர் அணியும்படி வளைகளை நல்குவர். கொழுத்த இறைச்சியைத் தின்று சோற்றை வெறுத்து கள்ளருந்தி அவற்றாலும் ஆசை தணியப் பெறாத பாணர் மகிழும்படி பல பிடி யானைகளையும், தமது சுற்றத்தினர் மகிழும்படி பகை அரசர் அரண்களை அழித்துக் கவர்ந்த பொருள்களையும் வழங்குவர். விடியற்காலத்தே வந்து திரண்டு பாடும் சூதர்க்கு தேருடன் குதிரையைக் கொடுப்பர். பெரிய குப்பிகள் வற்றும்படி கள்ளுண்டு வஞ்சிசூடிப் பூசிப் புலர்ந்த சந்தனத்தையுடையோரைத் தமக்குப் படைத்தலைவராகக் கொள்வர்; தம்மை வழிபட்டோர் நாடுகள் ஏவல் கேட்கையால் வழிபடாதோரின் தேசங்கள் திறை அளித்து ஏவல் கேட்கும்படி போர் மேற் செல்வர்க்கென்று உயரப் பறக்கும் பருந்துகளும் பறக்கலாற்றாத உச்சியையுடைய அரண்களுடைய பாசறைக்கண்ணே விடியற் காலத்து நாள்முரசம் ஒலிக்கும்படி தங்குவர். தங்கி பகைவர் படைக்குக் கேடுண்டாக வென்று பின்னும் அழிக்கவேண்டுமென்ற நிலங்களை அழித்த வலியினையும் வெற்றி முரசினையுமுடையருமாய் விளங்குவர். இங்ஙனம் புகழ் விளங்கும்படியும், உலகத்து ஏவல் கேட்கும்படியும் வாழ்ந்து பிறப்பறமுயலாது மாண்ட மன்னர் கடற்கரை மணலினும் பலராவர். அப்பயனின்மையாலே, அண்ணலே நீயும் அவ்வாறு கழிதல் ஆகாதென்று இவ்வாழ்விற் பெரிதாயிருப்பதொரு பொருளை யான் கூறுவேன். அஃது என்னாற் காட்டுதலரிது. அதனை கண்ணனைப் போன்றவும் பல்யாகசாலை முதுகுடுமியைப் போன்றவும் தொல்லாணை நலாசிரியரிடத்திற் கேட்பாயாக. கேட்டு நீ கந்தழியிடத்திற் கண்ட அதிசயமும் பின்பு பெற்ற அமைதியும் தலைமை பெற்ற பலராற் சொல்ல அறிவாயாக. பெருமானே! நல்ல ஊழிக் காலத்தே இத்துணைக் காலமிருத்தியெனப் பால்வரை தெய்வத்தாலே வரையப்பட்டு நீ அறு

தியாகப் பெற்ற நாள் முழுதும் இனிதாகப் பேரின்பத்தை நுகர்ந்திருப்பாயாக. அதனை நுகராது ஐம் பொறிகட்கும் முன்னிற்கப் படுவனவாகிய இந்நுகர் பொருள்கட்கு நின்னோடு என்ன உறவுண்டு. இனி உன்னிடத்துண்டாகிய மாயை கெடுவதாக.

---

## VII. நெடுநல் வாடை*

பருவம் பொய்யாத வானம் உலகம் குளிரும்படி மேருவை வலமாக வந்து மழையைப் பெய்தது. கையிலே கொடிய கோலையுடைய இடையர் வெள்ளத்தை வெறுத்தவர்களாய் ஏறுகளுடைய மந்தைகளை மேட்டு நிலத்தே மேயும்படி விட்டனர். அவர்கள் மார்பிடத்தணிந்த காந்தள் இதழ்களாற் கட்டிய மாலைகள் மழைத் துளிகள் வீழ்தலால் நலனழிந்தன. குளிரால் வருந்திய பொதுவர் கையிடத்தே நெருப்புடையவர்களாய் அலகுடனலகு சேர்ந்து பற்பறை கொட்டும்படி நடுங்கினர். விலங்குகள் மேயா தொழிந்தன. குரங்குகள் கொடுகொடுத்தன. காற்று மிகுதியால் பறவைகள் மரங்களினின்றும் நிலத்தில் வீழ்ந்தன. பசுக்கள் பால்கொடாது கன்றுகளைக் காலாலுதைத்தன பற்றைகளில் முசுட்டை வெண்ணிற மலர்களைப் பூத்தது. பீர்க்கு பொன்னிறப் பூக்களை மலர்திற்று. வேகமாய் ஓடும் நீருக்கெதிராகக் கயல் மீன்கள் சென்றன. மழை நின்றபோது பசுங்காலுடைய கொக்குத் திரளும், வரியுடைய நாரைக் கூட்டமும் பரந்த கரிய வண்டலையும் சேறு பரந்த ஈரத்தையுமுடைய வெண் மணலிலிருந்து அம் மீன்களை உண்டன. ஆகாயத்திலே எழுந்த வெள்ளிய முகில்கள் துளிகளைச் சிதறின. வயல்களில் வெள்ளத்துக்கு

* நெடுஞ்சேழியனை நக்கீரனார் பாடியது.

மேல் உயர்ந்த நெற்பயிர்களின் கதிர்முற்றி விளைந்தன பருத்த அடியினையுடைய கமுகின் நீலமணிபோன்ற தலையி லுள்ள காய்கள் உள்ளே நீர் நிறைத்தாற்போன்று திரண்டு முற்றின. நிறைந்தமலர்களுடைய சோலையிடத்துள்ள மரங்கள் கிளைகளிலே தங்கிய நீரைச் சொரிந்தன. உயர்ந்த மாடங்களும் செல்வமும் மலிந்த பழைய ஊரிடத்து ஆறு கிடந்தாற்போல விசாலித்து நீண்ட தெருக்கள் கிடந்தன. அழகும் பெருமையும் வலியும் மிகுந்த தோளில் தழைகலந்து கட்டப்பட்ட மாலை அணிந்தவர்களும்,வண்டு மொய்க்கின்ற கள்ளை உண்டுகளிப்பு மிகுந்தவர்களும், முன்னும் பின்னும் தூங்குகின்ற உடையினை உடையவர்களும், முறுக்குண்ட உடம்பினர்களு மாகிய 'மிலேச்சர்' மழைத்துளிக்கு அஞ்சாதவர்களாய் தெருக்களிலே திரிவாராயினர். இராக்காலமும் பகற்கால மும் அறியாது மயங்கிய சிவந்தகாலுடைய ஆண்புறு தனது பேட்டுடன் வெளியிற் சென்று இரைதேடி உண்ணு மல், பலகையின்மீது இருந்து கடுத்தகால்கள் ஆறும்படி மாறி மாறி இருந்தது.

காவலையுடைய வீடுகளில் வேலையாட்கள் சாந்தரைக் கும் கரிய அம்மியிலே கஸ்தூரி முதலிய பசிய கூட்டை அரைத்தார்கள். அதனுல் வடநாட்டார் கொண்டுவந்த வெள்ளிய சந்தனக்கற்களும் தெற்கே பெறப்படுகின்ற சந்தனக்கட்டையும் பயன்படாமற் கிடந்தன. குளிர் மிகுதியால் கூந்தலிடத்து மாலையைச் சூடி முடியாதமகளிர் அதனிடத்து சில மலரிட்டு முடிக்க விரும்பி, சந்தனக் கட்டையை எரித்து அதனிடத்தே அகிற்கட்டையையும் செவ்வரக்கையும் இட்டுப் புகைத்தார்கள். கைதேர்ந்த கம்மியனுல் அழகாகச் செய்யப்பட்ட ஆலவட்டங்கள் சிவந்த உறைகளிலிடப்பட்டனவாய் சிலந்தியின் வெள்ளிய

நூலாற் சூழப்பெற்று வளர்ந்த முளைக்கோல்களிற் றூங்கின இளவேனிற் காலத்து படுக்கையிடத்தில் குளிர்ந்ததென்றற் காற்றை வீசுகின்ற சாளரங்களில் உலாவுவாரின்மையால் அவை இரண்டு கதவுகளும் சேரும்படி தாழிடப்பட்டிருந்தன. கல்லென்னும் ஓசையுடைய சிறு திவலைகளை வாடைக் காற்று எங்கும் பரப்புதலால், குவிந்த வாயையுடைய கரகத்தில் நீருண்ணப்பெறாத இளையோரும் முதியோரும் தீச்சட்டியிலுள்ள நெருப்பின் சூட்டை நுகர்ந்தனர். ஆடுமகளிர் தாம் பாடுகின்ற பாடல்களை கரிய தண்டினையுடைய யாழில் வாசித்தற்கு நரம்புகளை தனங்களிடத்தே தடவி வெப்பம் ஊட்டி யாழைப்பண்ணிற்கும் முறையில் நிறுத்தினார்கள். இவ்வாறு கார்காலம் மழை செறிந்து கூதிர்காலமாக நிலைபெற்றது.

சித்திரை மாதத்தின் மத்தியில் ஓர் நாளில் பதினைந்தாவது நாழிகை அரசனது கோயிலமைப்பதற்குரிய முகூர்த்தமாக நியமிக்கப்பட்டது. அம் முகூர்த்தத்திலே சிற்ப நூலறிந்தோர் நூலை நேரே பிடித்து திசையை அறிந்து அத்திசைக்குரிய தெய்வங்களை வழிபட்டபின், அரசற்கு வேண்டிய மனைகளையும் வாயில்களையும் மண்டபங்களையும் வகுத்தார்கள். அவற்றை எல்லாம் ஒரு மதில் வளைத்திருந்தது. மதிலின் வாயில் இரும்பினால் கட்டப்பட்டு செவ்வரக்கு உருக்கிப் பூசப்பெற்றது. அதன் கதவுகள் தாழ்கள் சேர்த்து இரண்டாக அமைக்கப்பட்டது. பல மரங்கள் நிலைகளாக *உத்தரக் கற்கவியில் இடை வெளியின்றிச் செருகப் பெற்றன. உத்தரக் கற்கவி நடுவே இலக்குமியும் இரண்டு புறத்தும் செங்கழுநீர்ப் பூவுமாகிய வேலைப்பாடு பொருந்தியது. நிலைகள் நெய் பூசி சிறுவெண்

* நிலை தாங்குவதாகிய சுவரின் பகுதி.

கடுகு அப்பப்பெற்றன. வாயில் மலையை இடையே திறந்தாற் போன்று யானைகள் வெற்றிக்கொடி யுடன் செல்லும் படி உயர்ந்துள்ளது. வாயிலிடத்தே கவரிமாவும் அன்னப் புள்ளும் தாவித் திரிந்தன. முற்றம் வெண்மணல் பரப்பப் பட்டு இலக்குமி தங்கும் சிறப்புப் பெற்றிருந்தது.

பந்தியில் நின்று வெறுத்தனவும் பிடரி மயிரினை யுடையனவுமாகிய குதிரைகள் புல்லை அதக்குதலால் ஓசை எழா நின்றது. நிலா முற்றத்தில் நீர்வந்து கொப்பளிக்கும் பொருட்டு அமைக்கப்பட்ட குழாய் மீனின் அங்காந்த வாய் போன்றது. குழாய் நீர் நிறைகையினாலே கலங்கி வீழ் கின்ற அருவி ஓசையைச் செய்தது. அதன் அருகே மயில் கள் கொம்பின் இசைபோன்று ஆரவாரித்தன. இவை மலையினிடத்துள்ள ஆரவாரத்தை நிகர்த்தன. கோயி லின் அந்தப்புரத்தேயுள்ள தூண்கள் நீலமணியாற் செய்தாற் போன்ற கருமையும் திரட்சியுமுடையன. உயர்ந்த சுவர்கள் செம்பினாலே பண்ணினா லொத்த வேலைப்பாடுகளுடையன; அவற்றின் பலவிடங்களில் வெண்சாந்தினால் பல பூக்கள். யுடைய கொடிகள் விளங்கும்படி எழுதப்பட்டுள்ளன அவை இந்திரகோபம் போன்று பல நிறமுடையனவாய்த் திகழ்ந்தன. யவனர் செய்த பாவை விளக்கின் நெய் நிறைந்த தகளியில் கொளுத்தப்பட்ட பரியதிரி கோயிலினுள்ளே அந்தப்புரத்தில் எரியா நின்றன. நெய் வற்றி ஒளி மழுங்கிய காலத்து பாண்டியனல்லதுவேறுகுற் றேவல் செய்யும் ஆண் கள் திரியைத் தூண்டாத அரிய காவலையுடையது அரசி இருத்தற்குரிய அந்தப்புரம்.

பள்ளி யறையினிடத்தே, பாண்டிமாதேவி பள்ளி கொள்ளுமிடமாயுள்ள வட்டவடிவினதாகிய கட்டில் நாற்பதியாண்டு நிறைந்து போர்க்களத்தேபட்ட களிற்றின் தானாக வீழ்ந்த மருப்பினைச் சீவிக்கம் மியரால்

மூட்டுவாய் தெரியாமற் செய்யப்பட்டது. தச்சர் தமது கூரிய உளிகளால் இலையின் வடிவங்களை இடையிடையே செதுக்கியும், பல நிறமயிர்களை * உள்ளே வைத்து அவற்றின் மேலே சிங்கம் முதலியவற்றை வேட்டையாடுகின்ற வடிவாகச் செய்த தகடுகளை வைத்தும், முல்லைப் பூக்களையும் பிற பூக்களையும் அமைத்தும், சாளரங்களாகத்திறந்த வெளிகளை ஆணிகளால் தைத்தும் செய்த வேலைப்பாடுகளை அக் கட்டில் பெற்றிருந்தது. நூலிற் கோக்கப்பட்ட முத்து மாலைகள் கட்டிலைச்சூழ நான்றன. நடுவிலுள்ள வெளி புலியின் நிறத்தையுடைய நாடாவினால் பின்னப்பட்டது. கால்கள் சூல் கொண்ட பெண்ணின் தனங்கள் போன்று திரண்டு ஓரிடத்திற் சிறுமையும் ஓரிடத்திற் பருமையுந் தோன்றும்படி வேலைப்பாடு செய்யப்பட்டிருந்தன. அப் படுக்கையின் மேல் பேட்டுடன் புணர்ந்த அன்னச் சேவலின் தூவியைப் பரப்பி அதன்மேல் கஞ்சி தோய்த்த வெள்ளைத் துகிலினை விரித்து அதன்மேல் செங்கழுநீர் முதலியவற்றின் இதழ்களைப் பரப்பின படுக்கையிலே கிடக்கின்ற இராசமாதேவி அரசனது பிரிவாற்றுமையால் துயருழந்து தனது அணிகலன் முதலியவற்றை வெறுத்தாள். முத்தாற் செய்த கச்சுச் சுமந்த தனங்களையுடைய மார்பிடத்து தாலிநாண் ஒன்றுமே கிடந்தது; பொன் வளையில் கிடந்த தழும்புடைய கையில் வலம்புரிச் சங்குவளையும் காப்பாகக் கட்டிய நூலுங் கிடந்தன; பூத் தொழிலுடைய பட்டை உடுத்திய அரையில் நூலாற் செய்த மாசேறிய ஆடை கிடந்தது; கையினால் நீவுதல் செய்யாமையால் உலர்ந்த மெத்தென்ற மயிர்கள் நெற்றியிற் கிடந்தன. மகரக்குழை அணியப்பெற்ற காதுகள்

---

*புலி முதலியவற்றின் வரிகள் தோன்ற.

வறிதே கிடந்தன. இங்ஙனம் கூதிர்காலத்து நடுயாமத்தே துயிலின்றிக் கிடக்கின்ற அரசியை சேடியர் "உன் மனதுக்கினியவர் இப்பொழுதே வருவர்" என்று பொருளொடு புணராப் பொய்மொழியும் மெய்ம் மொழியுமாகிய உரைகள் பலவற்றையுஞ் சொல்லித் தேற்றவுந் தேருளாயினுள். மெழுகுவழித்த மேற்கட்டியின் மேலே புதிதாக எழுதின திங்களின் பக்கத்திருக்கும் உரோகிணியைப் பார்த்து, "இது போன்று யாமும் பிரிவின்றியிருக்கப் பெற்றிலேமே" என்று சிந்தித்துப் பெருமூச்செறிந்தாள். கண்களினின்றும் ததும்புகின்ற நீரைத் தனது * முடக்கு மோதிரம் அணிந்த சிவந்த விரலால் எடுத்துத் தெறித்தாள். மாந்தளிர்போன்ற மேனியும் அம் மேனியின் இடையே பரந்த சுணங்கும், மூங்கில்போற் றிரண்ட மெல்லிய தோளும், கச்சினுல் வலித்துக்கட்டப்பட்ட தாமரை முகைபோன்ற தனங்களும் ஒடுங்கி வளைகின்ற இடையும் மெத்தென்ற தன்மையுமுடைய சேடியர் அவளது செம்பஞ் சூட்டப் பெறாத அடியை துயிலுண்டாகு மென்று வருடினார்கள். வண்ணமூட்டி எழுதப் பெறாதவடி வுடைய சித்திரம் போன்றவளாய் தனிமையோடு கிடக்கும் அன்புமிகுகின்ற அரிவைக்கு கொற்றவையை நோக்கிப் பரவுவாள் கூறுகின்றாள் :

அம்மா! கேட்பாயாக. சேரன், செம்பியன், திதியன் எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன், முதலிய எழுவரோடு பொருதல் குறித்துச் சென்ற அரசன் பாசறையிலுள்ளான். நெற்றிப்பட்டத்தையுடையமாற்றாரின் களிறுகளைக் கொன்ற வீரர், அம்மாற்றாரின் விளங்குகின்ற வாளால் போழ்ந்த புண்ணைப் பரிகரித்தற்கு நடுயாமத்தே

* முடக்கு—மீனினங் காய்ந்தவாய் போன்ற மோதிரம் என்க.

நித்திரை கொள்ளானாய் புறம் போந்து திரிவான். வாடைக் காற்று வீசுந் தோறும் விளக்குகள் தெற்கு நோக்கி யதலையுடையனவாய் எரியும். வேப்பமாலையைத் தலையிலே கட்டிய வேலுடன் முன் நடந்து செல்கின்ற சேனாதி புண் பட்ட வீரரை முறையே முறையே காட்ட அவர்களுக்கு அகமலரும்படி முகமலர்ந்து இன்னுரை கூறுவான். ஆங் காங்கு கட்டப்பட்டுள்ள குதிரைகள் மீது வீழ்கின்ற மழைத் துளிகளை உதறும். அரசன் வாளெடுதற்கு தோளி லேவைத்த வலக்கையனாய் இடத் தோளினின்றும் நழுவி வீழ்கின்ற உத்தரீயத்தை இடப்பக்கத்தே அணைப்பான். முத்துமாலை கட்டப் பெற்ற வெற்றிக் குடை மழையை மறைக்கும்பாசறையிலிருந்துபொருகின்றபோர்த்தொழில் அரசனுக்கு வெற்றியைக் கொடுத்து இனிதுமுடிவதாக.

---

## VIII. குறிஞ்சிப் பாட்டு*

தாயே வாழ்வாயாக; அன்னாய்! யான் கூறுவதனை விரும்பிக் கேட்பாயாக. பிரகாசிக்கின்ற நெற்றியை யுடைய எனது தோழி தன்னுயிரைத் தான் வைத்திராமைக்குக் காரணமாகிய தாங்குதற்கரிய ஓர் எண்ணத்தை மறைத்து வைத்திருக்கின்றாள். அந் நினைவினால் அவளது ஆபரணங் கள் நெகிழ்ந்தன. மருந்தினால் மாற்றுதற்கரிய அவளது நோயை உனக்குச் சொல்லுதல் எளிதல்ல. ஆதலின் அதனை என்னுள்ளே அடக்கிவைக்கலாயினேன். அவ ளுடைய அழகு கெடுதல், தோள் மெலிதல், வளை கழலுதல் முதலியவற்றையும், அவள் தனிமையால் வருந்தும் வருத் தத்தையும் கண்டு அவை யாவற்றால் நேர்ந்தன என்று அறியும் அறிவு இல்லை ஆயினை. நீ வருத்தமடைந்து, ஊரிடத்துக் கட்டினாலுங் கழங்கினாலும் அறிந்து குறி

சொல்லுவாரை வினவினய், அவர் அது தெய்வத்தால் வந்த வருத்தமெனக் கூறினர். அதனால் நீ பல தெய்வங்களை பன்னிறமலர்களும் தூபங்களும் சந்தனம் முதலியனவுங் கொடுத்து வழிபட்டனை. அதனால் அந்நோய் தணியாமை யால் மயக்கமுற்று வருந்தா நின்றாய். யான் அவளிடத்தி லுள்ள ஆற்றுதற்கரிய நோய் யாதெனக் கேட்டேன். அவள் என்னை நோக்கி "முத்தானும் மணியானும் பொன்னானு மியன்ற அருங்கலன் கெட்டதாயினும், பின்னும் வந்து பொருந்தும். அஃதன்றிக் குணங்களின் அமைதியும், மேம் பாடும், ஒழுக்கமுங் கெட்டால் உண்டாய மாசு போம்படி கழுவி முன்போலப் புகழை நிறுத்தல் குற்றமற்ற அறிவினை யுடைய முனிவர்க்கும் எளிதன்றென்று பழைய நூலை உணர்ந்த அறிஞர் கூறுவர். யாங்கள் இருவேமும் ஆய்ந்த மன்றல் இதுவென, நாம் தாய்க்கு அறிவுறுத்தின், நமக்குப் புகழின்றிப் பழி வருவதில்லையாகும். இங்ஙனம் வெளிப் படுத்த பின்பு, தலைவர்க்கே நம்மைக் கொடுக்க நேர்ந்தில ராயினும் நாம் உயிர்போந்துணையும் இவ்வருத்தத்தைப் பொறுத்திருப்பின் நமக்கு மறுமையினும் இக் கூட்டம் வருவதொன்றாகும்" என்று கூறி மான்போன்ற நோக்கமின்றிமைய னேக்கங்கொண்டு செயலொழிந்து அயர்ந்து ஆற்றுந் தன்மையளல்லாத நோயுடையளாயினள். நினக்கும் இவள் வருத்தத்துக்கு மஞ்சி இரண்டு பெரிய அச்சத்தாலே யானும் இரு பகை அரசரைச் சந்து செய் விக்கும் சான்றோரைப் போல் வருந்தா நின்றேன். இரண்டு குடியும் ஒத்திருத்தலையும, குணத்தையும், சுற்றத்து உதவி களையும் ஒத்துப் பார்த்து இக் காந்தர்வ மணத்தைச் செய் தருளினேம். முன்பு நடந்த முறையை நீ யறியும்படி சொல்ல விரும்பினேன், தாயே! அதனைக்கேட்டு கோபியாதிருப் பாயாக. 'பெரிய கதிர்களையுடைய தினையுள் வீழ்கின்ற

கிளிகளை ஓட்டி பகற்பொழுது கழியாமுன் வருவீராக' என்று எங்களை அனுப்பா நின்றீர். நாங்களும் போய் மரத்தினுச்சியிலே அமைக்கப்பட்ட பிரம்பினாற் பின்னப் பட்ட பரணில் ஏறி இருந்தோம் இருந்து கவணும் தட்டை யும் பிறவுமாகிய கிளியோட்டும் கருவிகளை முறையே கையில் எடுத்து " ஆயோ " என்னுஞ் சொற்களை நடுவே சொல்லி கிளிகளை ஓட்டா நின்றோம். வெயில் மிகுந்த பகற் காலத்தே பறவைகள் தாம் விரும்பும் சேக்கையிற் சென்றன. கடலிடத்தே நீரை உண்ட மேகம் குறு முழக்கஞ்செய்து முருகக்கடவுளின் வேலபோல் மின்னி மலையிடத்து மழை பெய்ததினால் மலைச்சிகரத்தினின்றும் வெள்ளிதாகிய அருவி குதித்தோடிற்று. பளிங்கைக் கரைத்து ஊற்றினாற் போன்ற நீரிடத்தில் விருப்புடையோமாய் அதனிடத்தே விளையாடி எமக்கு விருப்பமாகிய பாட்டுகளைப் பாடினோம். பொன்னிலே அழுந்தின நீலம்போன்று முதுகிலே தூங்கும் கூந்தலை நீரைப் பிழிந்து உலர்த்திச் சிவந்த கண் உடையே மாயினோம். பின்னர் அம்மலைச் சாரலிடத்திலுள்ள சிவந்த பூக்களையும், மலை எருக்கு, சிவந்தகோடல், ஆம்பல், அனிச் சம், செங்கழுநீர், குறிஞ்சி, வெட்சி, செங்கொடுவேரி, தேமா, செம்மணி, பெருமூங்கில், எறுழ், மராமரம், கூவி ரம், வடவனம், வெள்ளிய வெட்டாப்பாலை, பஞ் சாய்க் கோரை, வெண்காக்கணவம், கருவிளம், பயினி. வானி, குரவம, பச்சிலை, மகிழ், காயா, ஆவிரை, சிறு மூங் கில், சூரை, சிறுபூளை, குன்றி, முருக்கிலை, மருது, கோங்கு, மஞ்சாடி, பாதிரி, செருந்தி, புனலி, காந்தை, காட்டுமல் லிகை, மா, தில்லை, பாலை, முல்லை, கஞ்சா, பிடவம், செங் கருங்காலி, வாழை, வள்ளி, நெய்தல், தெங்கின் பாளை, செந்தாமரை, ஞாழல், மௌவல், கொகுடி, பவழக்கான் மல்லிகை, சாதி கருந்தாமரைகொடி, வெண்கோடல்,

தாழை, சுரபுன்னை, காஞ்சி கருங்குவளை, ஓமை, மாவம் இண்டம், இலவம், கொன்றை, அடும்பு, ஆத்தி, அவரை, பகன்றை, பலாசப, அசோகம், வஞ்சி, பிச்சி, கருநொச்சி, தும்பை, திருத்துழாய், தோன்றி, நந்தியாவட்டம், நறை, புன்னை, பருத்தி, பீர்க்கு, குருக்கத்தி, சந்தனம், அகில், நாரத்தம், நாகம், இருவாட்சி, குந்தம், வேங்கை, ஒண் செங்காந்தள் முதலியவற்றின் விரும்பப்படும் பூக்களை எல்லாம் பறித்து மழையினுற் கழுவப்பட்ட பாறைமீது குவித்தேம். குவித்து ஆயோவென்று இடை யிடையே சத்தமிட்டுக் கிளிகளை ஓட்டினேம். தழைகளைக் கொய்து இடையிலே தழை உடையினை உடுத்தேம். பல நிற முடைய மெல்லிய மலர்களை மெல்லிருங் கூந்தலில் அழகு பெறச்சாத்தினேம். பின்னர் நெருப்புப்போ லும் நிறத்துடன் விளங்கும் அழகிய தளிருடைய அசோகினது தாதிர்கின்ற தண்ணிழலில் மேவியிருந்தேம். அஞ்ஞான்று ஓர் அழகிய தோன்றல் அழகு பெறும்படி வந்தான். அவன் மயிரிடத்து மயிர்ச்சாந்தைப் பூசி உலர்த்தி, அகிற்புகையூட்டி அகில் நெய் தடவி முடிந்த நீல மணிபோன்ற குஞ்சியுடையன். அவன் மலையிடத்தும், நிலத்திடத்தும் கொம்பரிடத்தும் சுனைகளிடத்தும் பூத்தனவாகிய பன்னிறமலர்களையும், அம் மலர்க ளாற் றொடுத்த மாலைகளையும் வெண்டாமரையிடத்துள்ள கண்ணியையும் சென்னியிலணிந்து முருகன் போல் விளங்கி ஞன்; சந்தன மணிந்த மார்பிடத்து பல ஆபரணங்கள் விளங்கின. சென்னியிலே சுற்றப்பட்ட பிச்சிமாலையும் காதிற் செருகிய அசோகந்தளிரும் அழகைச் செய்தன. அவன் ஆடையின்மீது கச்சுத்துலங்கும்படி கட்டி பூண் இறுகின முன்கையில் அழகிய வில்லையும் அம்பையும் ஏந்தி, தன் ஞேடெதிர்த்த விடைகளையெல்லாம் வென்று புதிய ஆவைக்

காணும் ஏறுபோல நம்முன் தோன்றி நின்ருன். கோபத்தையும் மூங்கில் முளைபோன்ற வெள்ளிய பல்லையுமுடைய நாய்கள் இமை வெட்டாது எம்மைப் பார்த்து வளைத்துக்கொண்டு வரலாயின. யாம் மிகுந்த அச்சமுடையேமாய் வேறு இடத்திற்செல்லா நின்றேம். அஞ்ஞான்று அப்பெருந்தகை யாம் வெருவுதற்கஞ்சி இனியவாகிய மொழிகளைச் சொல்லி எமது அழகைப் புகழ்ந்துரைத்தான். பின்னர் இளையீர்! என எம்மை விளித்து "இவ்விடத்தேபோந்த பல கெடுதிகள் உண்டு" எனக் கூறினுன். அதற்கு யாம் மறுமொழி பகராது நின்றேம். அதற்கு வருந்திய பெருந்தகை 'மெல்லியலீர்! கெட்டன காட்டித்தாரீராயினும் எம்முடன் ஒரு வார்த்தை பேசுதல் நுங்கட்குப் பழியாமோ?' என்று கூறினர். கூறி, பூக்களையுடைய, தழை பரந்த கொம்பரைமுறித்துப் பரிக்கோலைக் கைகடந்த மதயானைபோல ஓச்சிக் கல்லென்னும் ஓசைபடக் கத்தும் வேட்டை நாய்களின் ஓசையை மாற்றி யாங்கள் வார்த்தை சொல்வதோர் காலத்தை எதிர் பார்த்து நின்ருன். குறிய கால்களையும், தினைவைக்கோலினுல் வேய்ந்த கூரையையும் உடைய குடிசையிலிருக்கும் குறமகன் பிணைபோன்ற நோக்கையுடைய மனைவி தானே சமைத்த கள்ளை எடுத்துக் கொடுப்ப அதனை உண்டு தினைப் புனத்தைக் காவல் செய்ய மறந்தான். அதனுல் யானை தினைப் புனத்தை அழித்தது. அதனைக் கண்டு வருத்த மிகுந்தவனுகிய குறவன் பாம்பின் வடிவினதாகிய வில்லை வளைத்து பகழியை எய்து தட்டையைப் புடைத்து, வாயை மடித்துச் சீழ்க்கை அடித்து யானையைப் புனத்தினின்றும் வெருட்டினுன். கோபம் மிகுந்த யானை மரங்களை முறித்து இடியேறுபோல ஆரவாரஞ் செய்து கையை நிலத்தே எறிந்து எமனைப் போல் எங்கள் மீது நெருங்கி வந்

தது. அதனைக் கண்டு நடுக்கமுற்று உயிர் பிழைக்கும் ஓரிடத்தைப் பெறவேண்டி நாணைக் கைவிட்டு வளையலொலிப்ப அக்குரிசிலைச் சார்ந்து தெய்வமேறின மயில் போல நடுங்காநின்றேம். அக்குரிசில் வில்லை நிரம்ப வளைத்து யானையின் முகத்தில் பகழியைப் போக்கினன். புள்ளியினையும் புகரினையுமுடைய மத்தகத்தில் அம்பு பட்டு உருவின புண்ணிலிருந்து உதிரம் முருகனால் வருத்தலுற்ற மகளிர்க்கு வெறியாடுங்களத்திற் குருதிகுதிக்குமாறு போலப் பெருகிற்று. அவ்வேழம் அவ்விடத்தே நிற்றல் ஆற்றாது புறங் கொடுத் தோடிற்று. அதன் பின், யாங்கள் முருகவேளுக்குவரையாமகளிர்கைகோத்தாடுவது போன்று கடம்பின் அரையினை நெருங்கச் சூழ்ந்த மாலை போல் கைகோத்துக் கொண்டு யாற்றின் பெருக்கிலே குதித்து விளையாடலுற்றேம் இடிகரையினின்ற வாழை போல ஆற்றோட்டம் எங்களை இழுத்துச் சென்றது. அது கண்டு அழகிய மாலை அணிந்த ஆண்டகை விரைந்து வந்துஎடுத்து யான் 'நினது அழகிய நலத்தை நுகர்வேன்,நின்னை நீங்குவேனெனச் சிறிதுமஞ்சாதே' என்று சொல்லி, ஒளி பொருந் திருந்திய நுதலைத்துடைத்து நெடு நாள் இக்களவொழுக்கம் நிகழவேண்டு மென நினைத்து என் முகத்தை நோக்கிச் சிரித்தான். அங்ஙனம் அவன் அணுகா நின்ற விடத்து தனக்கு இயல்பாகிய நாணமும் அச்சமும் அவ்விடத்து வந்து தோன்றுகையினாலே விரைய அவனிடத்து நின்று நீங்கவும் விடானாயினன்.அங்ஙனம்நின்றநிலையிலே கையாலே அணைத்து இவள் மார்பு தன்மார்பிலே ஒடுங்கும்படி தழுவினான். மிளகு பழம் சிந்திக்கிடக்கும் நீண்ட பாறையிடத்து மாம்பழங்களும் பலாப்பழங்களும் உதிர்ந்துகிடக்கும்.இவற்றின் சாற்றினால் முற்றிய கட்டெளிவை நீரெனக் கருதிமயில்கள் உண்ணும். உண்டு , ஊர்களிலே கொண்டா

டப்படும் விழாக்களில் வாத்தியங்கள் ஒலிப்ப ஆடு மகளிர் கயிற்றிலே ஆடுகின்ற தாளத்தினூற்றளருமாறு போலத் தளரும். இவ்வகையான மலைநாட்டினன், தான் முயங்குதலால் இவள் உள்ளத்து விரும்புவதுமேல் வரைந்து கொண்டு இல்லறம் நடத்துவதாயிருக்குமென்று உட்கொண்டான்.

'பலரும் வந்துண்ணும்படி அகன்ற கதவு திறந்து கிடக்கின்ற வாசலையுடைய வளநகரிடத்து மிடாச் சோற்றை வருவார்க்கெல்லாமிடுகின்ற விழாக்கொண்டாடப் பெறும். அதுபோலச் செல்வமிக்க மனை பொலிவு பெறும்படி உயர்ந்த எமது சுற்றத்தினர் விருந்துண்டு எஞ்சிய நிணமொழுகும் நெய்மிக்க அடிசிலை நீ இடநானுண்டல் உயர்ந்ததாகும் என்று கூறினான்.

அவன் மலையிடத்துள்ள முருகனைக் கைதொழுது பிரியேன் எனக் கூறி ஆற்றி மலையிடத்துள்ள தெளிந்த அருவி நீரைக் குடித்துச் சூளுறவுசெய்தான். தேவர்களும் விரும்பும் குகை களிலுள்ள பூஞ்சோலையிலே களிறு கூட்டின கூட்டத்தை அன்றைப் பகற்பொழுதெல்லாம் போக்கினான். ஞாயிறு எழுகுதிரை பூண்டதேரை யேறிப்பகற்பொழுது போம்படி தாழ்ந்து அத்தகிரியில் மறைந்தது. மான்திரள் மரத்தடியிற் திரண்டன. பசுக்கூட்டம் கன்றுகளை அழைக்குங் குரலு டையனவாய் மன்றுகள் நிறையப் புகுந்தன. ஊதுகின்ற கொம்பு போன்ற வளைந்த வாயையுடைய அன்றில் உயர்ந்த பெரியபனையின் உண்மடலிலேயிருந்து பேட்டையழைத் தது. பாம்பு தான் மேய்தல் காரணமாக தன்னிடத்துள்ள மாணிக்கத்தை ஈன்றது. இடையர் பலஇடங்களினின்று ஆம்பலென்னும் பண்ணினையுடைய அழகியஇனிய குழ லிடத்து தெளிந்த ஓசையைப் பல காலும் எழுப்பினர். ஆம்பலினது அழகிய இதழ்கள் தளை அவிழ்ந்தன. பார்ப்பார் அந்திக்காலத்தே செய்யும்தொழி

லைச் செய்தனர். செல்வத்தையுடைய மனைகளில் தொடி யினையுடைய மகளிர் விளக்கைக் கொளுத்தி அந்திக் காலத் திற்றொழிலை நிகழ்த்தினார்கள். அக் காட்டில் வாழ்வார் விண்ணைத் தீண்டுகின்ற பரணிலிருந்து தீக்கடைகோலாலே நெருப்பைப் பிறப்பித்து எரித்தனர். மேகம் பெரிய மலை யிடத்தைச் சூழ்ந்து கறுத்தது. காட்டிலுள்ள விலங்குக ளெல்லாம் கல்லென்றும் ஓசையுடையவாய் ஒன்றற்கொன் றுமாறிக் கூப்பிட்டன. பறவைகள் காடுகளிலிருந்து ஒலித்தன. இவ்வாறு கோபித்த வேந்தனது போரைப் போல இருண்ட மாலைக் காலம் வந்தது.

"விளங்குகின்ற பூணினையுடையீர்; நும்முடையசுற்றத்தார் நுமது முன் கையைப் பிடித்து எமக்குத்தர நாட்டிலுள்ளா ரெல்லாமறியும் நல்ல கலியாணத்தைப் பின்பு நிகழ்த்துவேம். களவொழுக்கத்தாற் பெறும் பேரின்பம பெறுதற்கு இங் ஙனம் சிறிதுநாள் ஒழுகா நின்றேமென்று நினைந்து நெஞ்சு கலங்காதீர்" என அவள் நெஞ்சில் வருத்தந்தீரும்படி சொன்னான். சொல்லி ஆவைப் புணர்ந்த கன்றுபோல விடா மல் எம்முடனே கூடவந்து நம்மூவர் வாசலிலுள்ள நீருண்ணுந் துறையில் எம்மை விட்டு மீண்டுபோனான். அப்புணர்ச்சி தொடங்கி அம்முதனாட் போன்ற விருப்பத் தேடோ எந்நாளும் இரவுக்குறியிலே வருதலைத் தனக்கு இயல்பாகவுடையன். அங்ஙனம் வரும்போதெல்லாம் ஊர் காவலர் கடுகிக் காத்தாராயினும், கோபத்தையுடைய நாய் குரைத்ததாயினும், நீ துயிலுணர்ந்தாயாயினும், நிலவு வெளி யாக எறித்ததாயினும் மூங்கிலை யொத்த மெல்லிய தோளிற் பெறும் இனிய துயிலைப் பெறாது போவன். யாங்கள் குறி யல்லதனைக் குறிபாகக் கருதிச் செல்லா நின்று மீண்டு மனையிடத்தே புகினும் அதற்கு வெறுத்தலைச் செய்யான்.

அவன்றான் இளமைப் பருவத்தைக் கடந்து மிலன்; நற்குணங்கள் மாறுதற்குரிய செல்வச் செருக்கான் எந் நாளும் தன் குலத்திற்குரிய நற்குணங்களின் நீங்கியது மிலன். பிறர் கூறும் பழிமொழி முதலியவற்றால் இரவுக் குறியிலே கூடுதற்கு வருதல் ஒழுக்கமன்றென்று நினைத்து அவன் வரைந்து கொண்டு இல்லறம் நிகழ்த்துதலே நல்லொழுக்க மென்று தலைவி துணிந்தாள். அதனால் இவளுடைய பெரிய மதர்த்த கண்கள் கலங்கின. பின்னர் இவள், அவர் வருகின்ற மலையிடம் புலியும், யாளியும் முதலியன இடும்பை செய்வனவாயிருக்குமென்று நினைத் தாள். அஞ்ஞான்று அவள் வலையிலகப்பட்ட மயில்போலே தனது நலம் போம்படி மெலிந்து, கண்ணில் வீழ்கின்ற நீர் நாள்தோறும் மார்பிலே துளிப்பக்கலங்கா நின்றாள். இது காண் நல்வினை நிகழ்ந்த வண்ணம் எனப் பாங்கி செவிலிக் குக் கூறிநின்றாள்.

---

## IX. பட்டினப்பாலை*

குற்றமில்லாத புகழையுடைய காவிரியாறு மேல் காற் றடி மலையிற்றோன்றி கடலிடத்தே பாயும். வெள்ளி என்னும் விண் மீன் தான் நிற்றற்குரிய வடதிசையில் நில்லாது தென் திசைக் கண்சேரினும், தன்னைப் பாடிய துளியாகிய உண வையுடைய வானம்பாடி துளியைப் பெறாது புலரும்படி வானம் பொய்பினும் பொன்கொழிக்கும் காவிரியிடத்தில் நீர் வறளாது. இவ்வகைச் சிறப்பமைந்த ஆற்றின் கரையிடத் தே சோழ வளநாடுள்ளது.

மருத நிலத்தே ஒன்றற்கொன்று அணிமையிலுள்ள பல ஊர்களுண்டு. வயல்கள் மிகுந்த விளைவை அளிக்கும்.

---

* கடியலூர் உருத்திரங்கண்ணனார் கரிகாற் சோழனைப்பாடி பதினாறுநூறாயிரம் பொன் பரிசில்பெற்றான்.

ஆங்காங்கு இடப்பட்டுள்ள கருப்பஞ்சாறு காய்ச்சுங் கொட்டில்களில் எழுந்த தீம்புகை படுதலால் வயலிடத்தேயுள்ள நெய்தற் பூ வாடும். செந்நெற்கதிரை நிரம்ப வுண்டு வயிறு பருத்த எருமைகள் ஆங்காங்குள்ள நெற்குதிர்களின் நிழலில் உறங்கும். விளைவு நீங்காத அகன்ற கழனிகளில் குலைத் தெங்கும் குலைவாழையும், காய்க்கமுகும், மணநாறும், மஞ்சளும், பல இனமரங்களும், குலையுடைய பனையும், பரந்த அடியினையுடைய சேம்பும், முளையினையுடைய இஞ்சியும் செறிந்து வளரும். சிறார்களிடத்தே மனைகளின் முற்றத்து உலர வைத்த நெல்லைக் கோழிதின்னாதபடி ஒள்ளிய நுதலையும் மடப்பத்தையுமுடைய சிறு பெண்கள் காவலாக இருப்பர். அவர்கள் நெல்லைத் தின்னும் கோழிகளைத் தமது பொன்னாற்செய்த மகரக்குழைகளால் எறிந்து ஓட்டுவர். தாளிடத்தே பூணணிந்தசிறுர் குதிரை பூட்டாமற் கையா லுருட்டும் மூன்று சில்லுடைய சிறுதேர்களை முற்றங் களிலே உருட்டி விளையாடுவர். அஞ்ஞான்று அம்மகரக்கு ழைகள் அச்சிறு தேருருள்களை உருளாதபடி தடுக்கும்.

சோழநாட்டின் பலஊர்களிலுஞ் சென்று விற்ற உப்பின் விலையாகப் பெற்ற நெல்லை ஏற்றிவந்த படகுகள் பந்தியிலே நிற்கும் குதிரைகளைப்போல கழிசூழ்ந்த நெய்தல் நிலத்தே கட்டப்பெற்று நிற்கும். புது வருவாயினையுடைய தோப்புகளுக்குப் புறப்பே பூஞ்சோலைகள்உண்டு. அச்சோலை களிடத்துள்ள பொய்கைகளில் திங்களைச் சூழ்ந்து மகம் என்னும் மீன் விளங்கினாற்போன்று மணங்கமழும் பன்னிற மலர்கள் நிரம்ப மலர்ந்திருக்கும. காவிரிப்பூம் பட்டின மடங்கலும் இம்மையிலும் மறுமையிலும் காம வின்பத்தைக் கொடுத்தற்குரிய ஏரிகள் மிக்கிருந்தன.

அடுக்களை, புலியுருக்கள் செதுக்கப்பட்டனவும் வாய்பொருந்தப்பெற்றனவுமாகியகதவுகளும், திருமகள்எழுதியமதிலு

முடையது. அதனிடத்து மிகுதியாகச் சமைத்த சோற்றை வடித்தலால் ஒழுகிய கஞ்சி ஆற்றின் வெள்ளம்போலப் பெருகி ஓடிற்று. அதனைக் கண்டு குடித்தற்குச் சென்ற எருத்து மாடுகள் ஒன்றோடொன்று சண்டையிடுதலால் அது மண்கலந்து சேறாய்ப் பின் தேர்கள் ஓடுதலாற் புழுதியாய் மேலெழும். எழுந்து பலவேறுவகையான சித்திரங்கள் தீட்டப் பெற்ற வெள்ளிய அரண்மனையின் மேற்படிந்து வெண்ணீற்றிற் புரண்ட களிற்றியானை போல அதனை அழுக்கேறச் செய்யும்.

ஆங்காங்கு குளிர்ந்த சிறிய குளங்களை உள்ளடக்கிய முற்றத்தையும், பெரிய எருத்திற்கு வைக்கோலிடும் பல சாலைகளையும் உடைய தவஞ்செய்யும் அமணப் பள்ளிகளும் பௌத்தப் பள்ளிகளும் காணப்பட்டன.

விளங்குகின்ற சடைமுடியுடைய முனிவர் தாம் தங்கும் இளமரக்காவிலே நெருப்பில் நெய்பெய்து ஓமஞ் செய்யாநிற்பர். அப் புகையினைக் கண்டு முகிலென அஞ்சிய குயிற் சேவல்கள் அச்சோலையில் இருத்தலை வெறுத்து தம் பெடைகளோடும் அவ்விடம் விட்டுச் செல்லும்; சென்று பூதங்கள் காவலாயிருத்தலாற் புகுதற்கரிய காளி கோட்டத்திற் சென்று கல்லைத் தின்னும் புறாக்களோடு ஓர் ஒதுக்கிடத்தே தங்கி யிருக்கும்.

பனையிலிருக்கும் குருவிகள் அஞ்சும்படி கல் எறிகின்ற கவண்களை உடையவர்களும் வலிய தொழிலைச் செய்கின்றவர்களுமாகிய பரதவர், இறால் மீனின் சுட்ட தசையையும், புழுக்கிய வயலாமை இறைச்சியையும் உண்பர். மணலிலே படர்ந்த அடம்பின் பூமாலையைத் தலையிலே கட்டுவர். நீரில் நின்ற ஆம்பற்பூவைப் பறித்துச் சூடுவர். ஆகாயத்தே வலமாக எழுகின்ற நட்சத்திரங்களைப்போல அகன்ற மன்றிலே கூடி ஆட்டுக்கிடாய்களையும் கவுதாரிகளையும் போர்செய்ய

விட்டு விளையாடி பொழுதுபோக்கா நிற்பர். அங்ஙனம் போர் செய்வித்தலினாலே மாறுபட்டு எழுந்த சினத்தால், வாரடித்த அறலுடைய மணல்மேடுகளுள்ள முதிய கிளைத்த மரங்கள் நிற்கும் போர்செய்தற்கமைத்த இடத்தே செல்லா நிற்பர். சென்று கல்லில்நின்ற தெய்வமானவனும் அவனுக்கு வைத்த கிடுகும் வேலும்போல தமது கிடுகையும் வேலையும் ஊன்றி முதுகு கொடாமல் கையாற் குத்தியும், படைக்கலங்களால் வெட்டியும் ஒருவர் மெய்யோடு ஒருவர் மெய் உறும்படி கலந்து போர்செய்வர். பாக்கங்களிலே உள்ளோர் இவ்வகையான பகையை யல்லது பிற பகையை அறியார்.

குட்டிகளுடைய பன்றியும், பலகோழிகளும், சிறிய கிணறுகளும்இருக்கும்செம்படவர்புறச்சேரியிலேசெம்மறிக் கிடாய்களோடு கௌதாரிப் பறவைகள் விளையாடா நிற்கும். புல்லிய தலையை யுடைய பரதவர் பூரணைக் காலத்தே கரிய கடலிடத்து மீன் பிடிக்கச் செல்லாது மனைகளிற்றங்குவர். தங்கி பசிய தழையுடையையும் கரிய நிறத்தினையுமுடைய தமது மகளிரோடு நெடிய தூண்டிற்றடிகள் சாத்திவைத்திருக்கும் குறிய இறப்பினையுடைய வீடுகளின் நடுவில், நிலவின் நடுவே இருளைப்போல வலைகிடந்துலரும் மணலுடைய முற்றத்தே குழுமுவர்; அவ்விடத்தே சினைச் சுறவின் கொம்பை நட்டு அதனிடத்து ஏற்றிய தெய்வம் காரணமாக விழுதையுடைய தாழையின் அடியிடத்தே நின்ற வெண்டாளியின் குளிர்ந்த பூவாற் கட்டிய மாலையைச் சூடுவர். சூடி மடலையுடைய தாழையின் மலரை மிலைந்தும், சொறியுடைய பனையின் கள்ளையும் நெல்லாற் சமைத்த கள்ளையும் குடித்தும் விளையாடா நிற்பர். அதன் பின்னர் எல்லோரும் புலால் நாற்றத்தையுடைய மணலிடத்தே பூக்களையுடைய கடற்கரையிற் கூடி இருந்து தெளிந்த நீரை

யுடைய கடலிடத்தே, கலங்கிய நீரையுடைய காவிரியாறு கரியமேகஞ் சூழ்ந்த செக்கர்மேகம்போலவும்* தாய்முலையைத் தழுவிய குழவிபோலவும் கலக்கின்ற ஒலியுடைய புகார் முகத்தே தமது தீவினை போகும்படி நீராடுவர். பின் அவ் வுப்பு நீங்க வேறு நீரிலே குளித்தும், நண்டுகளைப் பிடித் தாட்டியும், உலவுகின்ற அலையிற் போயதனை உழக்கியும் பாவை செய்தும் ஐம்புலன்களால் நுகரப்படுவன வெல்லாம் நுகர்ந்து மயங்குவர். அவர்கள் ஒருவரை ஒருவர் நீங்காத காதற்கிழமையுடையராய் இவ்வாறு பகற்பொழுதெல்லாம் போக்குவர்.

இராக்காலத்தே மடப்பத்தையுடைய பெண்கள் சுவர்க்கத்தை ஒத்த உயர்ந்த மாடங்களிலே இருந்து பாட்டைக் கேட்டும் நாடகங்களைக் கண்டும், நிலா விடத்தே பெறும் சுகத்தைப் பெற்றும் கள்ளுண்டலை விட்டுக் காமபானத்தை உண்டும் மகிழா நிற்பர். பட்டாடையை நீக்கி வெண்டுகிலுடுத்துத் தம் கணவரைச் சேர்ந்த மங்கையர் கள்ளின் மயக்கத்தால் தங்கா தலர் சூடிய மாலையைத் தமதென்றெடுத்துச் சூடுவர்; காதலர் தங்காதலிமார் சூடிய மாலையைத் தமதென் றெடுத்தணிவர். இவ்வகையாக இன்பம் நுகர்ந்த ஆடவ ரும் மகளிரும் கண் உறங்கிய கடையாமத்தே மாடங்களில் விளக்குகள் எரியா நிற்கும். வைகறைக் காலத்தே கட்டு மரங்களுடன் கடலிடத்தே சென்ற பரதவர் மாடங்களில் எரிகின்ற விளக்குகளை எண்ணுநிற்பர்.

அடுத்த நாட் காலையில், அகன்ற கடைத்தெருவிலே பலருந் தொழுந் தெய்வங்களுக்கு பாடு மகளிரோடு புல்லாங் குழல், யாழ், முழவு, முரசு முதலிய வாத்தியங்கள் ஒலிப்ப திருவிழாக்கள் கொண்டாடப்பெறும்.

---

* சிறிய பொருள் பெரிய பொருளோடு சேருதற்குவமை.

காவலையுடைய பண்டசாலை, வெள்ளிய பூங் கொத்துகளையுடைய தாழைகள் நிற்கும் கடற்கரையிலுள்ள பரதவரின் அகன்ற தெருவிடத்தே உள்ளது. கப்பல்களில் ஏற்றும்பொருட்டு கொண்டுவரப்பட்ட மிகுந்த பண்டங்கள் சுங்கம் மதித்து புலிமுத்திரை இடப்பெற்று பண்டசாலை முற்றத்தே அடுகப் பெற்றுக் கிடந்தன. மரக்கலங்களால் இறக்கப்பட்ட பண்டங்கள் புலிப்பொறி இடப்பெற்றுச் சுங்கம் மதித்தற்பொருட்டுப் பண்டசாலை முற்றத்தின் ஒருபக்கத்தே குவிந்து கிடந்தன. இவ்வாறு நிலத்திலிருந்து கடலிற் பரம்புவதற்கும், கடலிலிருந்து நிலத்திற் பரம்புவதற்கும் காத்துக்கிடந்த பண்டங்கள், மேகம் தான் முகந்த நீரைமலையிடத்தேசொரிவதற்காகவும்,மலையிடத்தே சொரிந்த நீரை மீண்டு கடலிடத்தே பரப்புவதற்காகவும் பெய்கின்ற தன்மைபோல் இருந்தது.

அரசனுடைய பொருளை பிறர் கொள்ளாமற் காக்கும் பழைய புகழினையுடைய சுங்கங் கொள்வோர் எரிகின்ற சினத்தையுடைய கிரணங்களையுடைய பகலவன் தேரிற் பூண்ட குதிரைகளைப்போல ஒருகாலும் ஓய்வின்றி நாடோறுங் குறையாது சுங்கங் கொண்டனர். மலையிடத்தே உலாவுகின்றவருடை மானின் நகங்கள் போன்ற உகிரினையுடைய ஆண்நாய்களும் ஆட்டுக்கிடாய்களும் பண்டசாலையின் முற்றத்தே கிடந்த மூட்டைகளில் ஏறிக் குதித்தன.

அணுகிய படிகளுடைய ஏணிகள் நாற்புறத்துஞ் சாத்தப்பெற்ற வீடுகள் பெரிய வாயில்களும், படிக்கட்டுகளும் * நடைகளும் உடையன. வானைத் தீண்டும் மாடங்களில் சிவந்த அடியினையும், தூசுபோன்ற உடையினையும் பவழ நிறத்தினையும், நெருங்கிய துடையினையும்,

* யாழ்ப்பாணத்தில் இச்சொல் பெரு வழக்காயிருக்கின்றது.

பசிய ஆபரணங்களையும், பெரிய அரையையும், மான்போல் நோக்கினையும், கிளிபோலும் மழலை மொழியையும் மயிலின் சாயலினையுமுடைய அழகிய இளநங்கையர் உலாவா நின்றனர். அம்மகளிர் தென்றற்காற்று வீசும் சாளரங் களின் எதிரே நின்று அங்காடித் தெருவிடத்தே, மாதர் பாட, புல்லாங்குழல் ஊத, யாழ் வாசிக்க, முழவு கொட்ட, முரசு ஒலிப்ப விழா எடுக்கப்படும். வெறியாடுதற்குரிய முருகனுக்கும், பிறப்பறுத்தற்குக் காரணமான பலருந் தொழூந் தெய்வங்களுக்கும் வளையில் செறிந்த செங்காந் தள் மலர்போன்ற கைகளைக் குவித்து வணங்கினர்.

இல்லுறை தெய்வங்கள் மகிழும்படி மனைகளின் வாசல் களில் கொடிகள் கட்டப்பட்டிருக்கும். கடைத்தெருவின் இரண்டு புறத்தும் எடுத்த துகிற்கொடிகள் காட்டாற்றங் கரையினின்ற அழகுபொருந்தின கரும்பினது பூவைப் போன்று வயங்கின. உணவுப்பொருள் வைக்கப்பட் டிருக்கும் பெட்டியைத் தாழிட்டு, குளிர்ந்த பல பண்டங் களின்மேல் வெள்ளிய அரிசியைப் பலியாகச் சிதறி, மெழுகை உருக்கிப் பூசிய கோல்களை நாட்டி, அவற்றின்மேல் கவிந்த சட்டத்தில் நட்டுவைத்த வெள்ளிய துகிற்கொடி கள் அசையா நின்றன. பல நூல்களை முற்றக்கற்ற ஆசிரி யர்கள் பிறர்க்கு மெய்ப்பொருள் தெருட்டுதற்பொருட்டு நாட்டிய அச்சந்தருங் கொடிகளும், அசையாத கம்பத்தை அசைக்கும் யானைகளைப்போல் காவிரிப்பூம் பட்டினத் துள்ள துறைமுகத்தே நிற்கும் மரக்கலங்களின் பாய் மரத்தின்மீது கட்டப்பட்ட கொடிகளும் விளங்கின. கள்ளுக்கடையின் முற்றத்தே மீனையும் இறைச் சியையும் அறுத்துப் பொரிப்பர். கள்ளுண்பார் செல்லும் மனைகள் பலவற்றிலும் கள்ளு விற்றற்கு அடையாளமாகக் கொடிகள் கட்டப் பெற்றிருந்தன.

இக் கொடிகளோடு வேறு. வேறு கொடிகளும், உருவாற் சிறந்த பெருங் கொடிகளும் நிறைந்தமையால் அவற்றின் நிழலாலே ஞாயிற்றின் கிரணங்கள் மறுகிடத்தே நுழைதல் கூடாவாயின.

கடவுளர்களது பாதுகாவலினாலே, காற்றின் உதவியால் ஓடும் மரக்கலங்களிற் கொண்டுவந்த குதிரைகளும், மிளகு பொதிகளும், மேருவிலே பிறந்த மாணிக்கமும் பொன்னும், பொதியின் மலையிற் பிறந்த சந்தனமும், அகிலும், தென்றிசைக் கடலிற் பிறந்த முத்தும், கீழ்திசைக் கடலிற் பிறந்த பவழமும், கங்கையாற்றில் உண்டாகிய பொருளும், பர்மா தேசத்திலுண்டான நுகரும் பொருள்களும், சீனம் முதலிய இடங்களினின்றும் வந்த கருப்பூரம், பனிநீர் முதலியனவும், காவிரியிலுண்டான பொருள்களும், இலங்கையிலுண்டாய உணவுப் பொருள்களும் இவையல்லாத பிற பொருள்களும் புகார்நகரிலும் துறைமுகத்தும் தங்குகையினால் தெருக்கள் மதித்தறிய முடியாத செல்வமுடையனவாய் விளங்கின. பற்பல நாடுகளினின்றும் போந்த பலவேறு வேறு மொழிகளைப் பேசும் மக்கள் காவிரிப்பூம்பட்டினத்தே தங்கியிருந்தனர்.

வலைஞர் முற்றத்தே மீன்கள் பாய்ந்து திரிந்தன. ஊன் விற்பார் குடிசையிலே ஆடு முதலிய விலங்குகள் திரண்டு நின்றன. அறத் தொழில் முட்டுப் படாத இல் வாழ்க்கையையுடைய வேளாண்மக்கள் இவ்வாறு முதற்கண் மக்களிடையே கொலைத் தொழிலைப் போக்கினர். பின் களவு செய்வாரை அக்களவினின்றும் விலக்கினர். இன்னும் அந்தணர்க்குண்டாகும் புகழினை நிலை நிறுத்தினர். பெரிய புண்ணியங்களைப் பண்ணி அவற்றைச் செய்ய மாட்டாதார்க்கு தானங்களை ஈந்தனர்; அரிசி கறி முதலியவற்றை அவர்க்கு உண்ண அளித்தனர். அவர் மேழித் தொழி

னுடைய உழவரது நுகத்தில் தைத்த பகலாணி போல நடுநிலை யென்னுங் குணம் நிலைபெற்ற நெஞ்சினையுடையர்; தம்முடைய பல சரக்குகளையும் பிற சரக்குகளையும் பொருளொப்ப ஆராய்ந்து தம் குடிக்கு வடுவாமென்றஞ்சி மெய் சொல்லி விற்குமியல்பினர்; தாம் கொள்ளுஞ் சரக்கையும் தாம் கொடுக்கும் பொருட்குமிகையாகக் கொள்ளார்; தாம் கொடுக்குஞ் சரக்கையும் தாம் வாங்கும் பொருட்குக் குறையக் கொடாமல் மெய்சொல்லி விற்பர். அவர்களிடத்தே கொள்ளப்பட்ட பழைய பண்டங்கள் மிக்கிருக்கும்.

கூரிய நகங்களையுடைய புலிக் கூட்டிலே அடைபட்டு வளர்ந்தாற்போல கரிகாற்சோழன் பகைவருடைய சிறையி லிருந்து வலி மிகும்படி வளர்ந்தான். சிறையினின்றும் வெளி யேற விரும்பிய அவன், குழியிலே அகப்பட்ட யானை சுவரின் கரைகளை கொம்பாற் குத்தித் தூர்த்துப் பிடியிடத்தே சென்றாற்போல, காவலாய் நின்றோரை வாளாற் றுணித்து அவ்விடத்தினின்றும் அகன்றான். அகன்று தனது அரசுரிமையை முறையாற் பெற்றான். அங்ஙனம் பெற்ற அரசுரிமையினால் திருப்தி அற்றவனாய், அவன், முடி யுடைய கரியதலைகளை உருட்டும் முன்காலில் நகங்களும், பகைஅரசரின் மதிற் கதவுகளை முறித்து அரணை அழித்த கொம்புகளும் உடைய யானைகளோடும், மணிகட்டிய குதிரைகளோடும் போர் வேட்டுப் பகைப் புலஞ் சென்றான். பாசறையிடத்தே பேயின் கண்ணை ஒத்த முரசம் முழங் கிற்று; வானிடத்தே பருந்து உலாவும்படியாகப் பகைவர் தூசிப்படையை அழித்தான். முதலைகள் செருக்கித் திரியும் பொய்கைகளுடையதும் கரும்புடன் நெல்லும் குவளை களினிடையே நெய்தலும்வளரப் பெற்றதுமாகிய மருத நிலத்தேயுள்ள குடிகளை ஓட்டினான். அதனால் வயல்களும்

வாவிகளும் நீர் அற்றன. அவ்விடங்களில் கோரையும் அறுகும் பூளையும் பூவளர்ந்தன ; அறல் பட்ட கொம்புடைய ஆண் மானோடு பெண் மான் துள்ளி விளையாடிற்று.

பூக்களைச் சூடிய அருட் தறிநிறுத்தப்பட்ட அம்பலம் சிறையாகப் பிடித்து வந்த பகை நாட்டு மகளிர் நீராடுந் துறையிலே சென்று முழுகிவந்து மெழுகிய மெழுக்கத்தினையும், அந்திக் காலத்திலே அவியாது கொளுத்தின விளக்கத்தினையு முடையது. அதனிடத்தே பிறநாட்டவர் பலருஞ் சென்று வணங்குவர். அவ்வகையான அம்பலத்தினிடத் துள்ள தூண்கள் சாய்ந்துகிடக்க அவற்றில் களிறுகளும் பிடிகளும் தமது உடம்பைத் தேய்த்தன. தெருக்களில் பூக்களைத் தூவி மத்தளங் கொட்டி யாழ் ஒலித்து திருநாள் கொண்டாடப்படும் மன்றங்கள் விழாக்களை மறந்தன. அவ்விடத்தே சிறிய பூக்களையுடைய நெருஞ்சிற் பூண்டும் அறுகம் புல்லும் நெருங்கி வளர்ந்தன ; அகன்ற வாயையுடைய நரிகள் ஊளையிட்டன ; அழுங்குரலாய்க் கூப்பிடும் கூகைகளோடு கோட்டான்களுமிருந்து எதிர் கூவின ; ஆண்பேய்த் தொகுதியுடனே மயிரை அவிழ்த்துத் தொங்கவிட்டு இருந்து பிணத்தைத் தின்னும் வளைந்த காலையுடைய பெண் பேய்கள் கூடியாடின.

அடுக்களை, விருந்தினர் மாடத்தே நீண்ட தலைவாசலில் கூடி இருந்து பின்பு உள்ளே சென்று உண்டு மிக்கிருக்கின்ற பெரிய சோற்றையுடையது. இவ்வகையான அடுக்களைகள் பொருந்தப்பெற்ற சாந்திட்ட வீட்டின் உயர்ந்த திண்ணைகளிலே பசிய கிளிகள் இருந்து இனிய சொற்களைப் பேசும். இவ்வாறு செழுமை மிகுந்த நகரத்தே வளைந்த வில்லையுடைய வேடர் செருப்பிட்ட அடியினையுடையராய்த் துடியொலிப்பத் திரண்டு சென்று கொள்ளை கொண்டமையால் வறிதாய்ப்போன நெற்கூடு

களின்மேல் கூகைகள் நண்பகற் காலத்தே குழறுகின்றன. இவ்வாறெல்லாம் அரிய காவலையுடைய மதிலையுடைய பகைவர் வீடுகள் அழகழியவும் அவர்கள் குலமின்றாகவும் நாட்டைப் பாழ் செய்தனன். பல அரசர்கள் எதிர்த்து வரினும் தான் ஒருவனாய் நின்று போர்கொடுக்க வல்ல னென்று வஞ்சினங்கூறிய நாற்படையையுடைய பாண்டியனை வென்ற கொற்றத்தாலும் இவன் மகிழ்ச்சி எய்தானி னன். இவன் தெய்வத்தன்மை உடையவனாதலின், இம்மலைகளை எல்லாம் அகழ்தலைச் செய்வன். கடல் களையெல்லாம் தூர்த்தலைச் செய்வன்; தேவருலகைக் கீழ் வீழச் செய்வன்; காற்றை இயங்காமல் விலக்குவன்; எனஉலகத்தார் மீக் கூறும்படி தான் நினைத்தவற்றை அந்நினைத்தவாறே துறைபோக முடிக்க வல்லவனாயினன். அதனாலே ஒளிநாட்டார் பலரும் வந்து தாழ்ந்து ஒடுங்கவும், அருவாள நாட்டினரசர் அவன் ஏவிய தொழிலைச் செய்தற்கு அவன் சொற்கேட்கவும், வடநாட்டில் அரசர் வாடி நிற்கவும், குடநாட்டார் மன வெழுச்சி குன்றவும், புல்லிய இடைய அரசரது கிளைமுழுதுங் கெட்டுப்போகவும், இருங்கோவேள் சுற்றத்தார் அழிபவும் காட்டை எல்லாம் அழித்து நாடாக்கிக் குளங்கள் அகழ்வித்துப் பல்வளங்களும் பெருகச் செய்தனன். விளங்கும் மாடங்களுடைய உறையூரிடத்து கோயில்களையும் குடிகளையும் நிலைபெறச் செய்து, சிறு வாயிலும் பெருவாயிலும் அமைத்து மதில்களில் அம்பெய்யும் *ஞாயில்களில் அம்புக் கட்டுகளை வைத்தான். இவனைப் பணிய வந்த வாரிறுக்கின முழவினையுடைய மற் றை அரசர் தம் ஒலிமழுங்கப் பெறாராயினர். அவர் இவன் அருள் நோக்கத்திற்குத் தக்கராகல் வேண்டி இவனைப் பணிதலால் அவர் முடிகளிற் பதித்த மணிகள் வீரக்கழல்

* அம் பெய்து மறையுமிடம்.

கள் அணிந்த கால்களில் ஊஞ்சும். பொற்காப் பணிந்த தமது புதல்வர் ஓடி விளையாடவும் தொழில் முற்றுப் பெற்ற அணிகலன்களணிந்த மனைவிமாரின் கொங்கைகள் தழுவவும்; ஒள்ளிய பூணினையுடையவனும் சிங்கேற்றைப்போன்று பகைவர்க்கு வருத்தத்தைச் செய்பவனுமாகியகரிகாற் சோழனது மார்பிடத்தேயுள்ள செஞ்சந்தனக்குழம்பு கலந்திருக்கும்.

இப்பெற்றியனான அவ்வேந்தன் பகைவர் மேல் ஓச்சிய வேலைக் காட்டினும் யாம் போதற்கு எழுந்த கானம் கொடியதாயிருந்தது. இவள் அகன்ற மெல்லிய தோள்களோ அவன் செங்கோலினுங் குளிர்ந்தனவாயிருக்கின்றன. ஆதலின் இவ்வகைபான சிறப்புடைய காவிரிப்பூம் பட்டினத்தையே எனக்குரித்தாகப் பெறினும் நெஞ்சே! நீண்டகரிய கூந்தலினையும் விளங்குகின்ற பூணினையுமுடைய என் காதலி ஈண்டு தனியளாயிருப்ப இவளைப் பிரிந்து வருதற்கு உடன்படேன்.

---

## X மலைபடுகடாம்*

ஆகாயத்தில் முழங்கும் ஓசைபோல் ஒலிக்கும் மத்தளம் வலித்து இறுக்கிய வார்க்கட்டுடையது. கஞ்சதாளம் வெண்கலத்தை உருக்கித் தகடாகத் தட்டிச் செய்யப் பட்டது. கொம்பு மயிலிறகுந்தழையுங் கட்டப்பெற்றது. நெடுவங்கியம் யானையின் தும்பிக்கை போன்று கணுக்களிற்றுளைகளுள்ளது. குறிய தூம்பு இளி என்னும் நரம்பின் ஓசையைத் தன்னிடத்தே தோற்றுவிற்கும் இயல்

* நன்னன இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப்பெருங் கௌசிகனர் பாடியது காலம் கி. பி. 100—130.

பினது. இனிய குழல் பாட்டின் சுருதி குன்றுமற்கைக் கொண்டு நிற்கும். கரடிகை மத்திமமாகிய ஓசையைச் செய்யும். எல்லரி தாளத்தைக் கொண்டு ஒலிக்கும். ஒரு கண் மாக்கிணை மாத்திரை அறிவிக்கும் தாளத்தையுடையது. இவற்றோடு சிறு பறையும் இன்னும் கூறுதொழிந்த வாத்தியங்களும் இடுதற்குரிய உறைகளிலிட்டுச் சுருக்கிடப் பெற்று, பலாக்காய்க் கொத்துகள் போன்ற தோற்றத்தை உடையனவாயிருக்கும்.

கூத்தர் இவ்வகைப் பல வாத்தியங்களைத் தூக்கியவர்களாய் காட்டுவழிய்ய செல்லா நின்றனர். முட்செடிகள் வளர்ந்த பக்க மலையிடத்தே கற்களைப் பதித்தாற் போன்ற ஒப்பரவாகிய பாறைகள் கிடந்தன. அப் பாறைகளின் பக்கத்தே நிலத்தே கிடக்கின்ற வழியை எடுத்து நிறுத்தினாற் போன்று மலையை இடித்துச் செய்யப்பட்ட அரிய ஓடுஙகிய வழியுண்டு. வில்லிடத்தே தொடுத்த அம்பினராகிய கானவர் தமது மனைவியர்களுடன் அரசர் ஆணையால் அவ்விடத்தே காத்து நின்று வழிச்செல்வோரை ஆறலைகள்வர் வருத்தாமற் பாதுகாத்தனுப்புவர். செல்லுதற்கரிய இவ் வழியிடத்திற் போதலைக் கூத்தர் அஞ்சுவாரல்லர்.

பெரிய ஓசையை யுடைய பேரியாழ் பெண்கள் கையிலணியும் வளையல் போன்று ஒன்பது வார்க் கட்டினை யுடையது. நூல்களிற் சொல்லிய இலக்கணம் அமையும்படி வடித்து முறுக்கின அதன் நரம்புகள் வெண்சிறுகடுகளவேனும் கொடுமுறுக்கு விழாதபடி உருவி ஓசை ஓர்ந்து பார்த்துக் கட்டப்பெற்றன. ஒலித்தலமைந்த பத்தல் வரகின் கதிர் ஒழுகின தன்மைபோல நுண்ணிய துளைகள் செய்து, துளைகள் நிரம்பும்படி சுள்ளாணிகள் இறுகத் தைத்து யானைக் கொம்பாற் புதிதாகச் செய்த யாப்பை வலிபெற இறுக்கப்பட்டது ; பிசினோடு சேர்த்த தோலாகிய

புதிய போர்வை பொன்னிற முடையது. உந்தி, தனது கூந்தலிலே இருந்த வண்டுக்கு கலியாணஞ் செய்தவளுடைய மணத்தைக் கொடுக்கின்ற மடந்தையின் மார்பிடத்தே சென்று மறையும் மயிரொழுங்கு பெற்ற அழகிய வயிற்றை ஒத்தது. வளைந்து ஏந்திய தண்டுகழாப்பழத்தின் நிறமுடையது. பாணர், நூல்முறைமையிற் செய்யப்பட்ட யாழை அவைக்களத்தே மன்னர்கள் கேட்டு மகிழுமாறு துறைபோகக் கற்று விளங்கினர்.

விறல்படப் பாடியாடும் மகளிரின் கல்லுப்போன்ற சிற்றடிகள் மலையிடத்தே ஓடி வலிகெட்ட நாயின் நாக்குப் போன்றன. பலவகை வாத்தியங்களுடன் பாணரும் விறலியரும் சூழ்ந்திருப்பத் தலைமை பெற விருந்த கூத்தர் தலைவனை, நன்னனிடத்தே பரிசில் பெற்று வந்தானொரு கூத்தன் எதிர்ப்பட்டுக் கூறுவான் ; குளத்திலே புகுந்தாலொத்த குளிர்ந்த நிழலிலே வழிநடந்த வருத்தந் தீர்ந்திருக்கும் கூத்தர் சுற்றத்துக்குத் தலைவனே ! மலை உச்சியினின்றும் இழிந்த நல்ல பூக்கள் செறிந்த ஆறு கடலை நோக்கிச் சென்றாற்போல யான் நன்னனை நோக்கிச் சென்று சில பரிசில்களைப்பெற்று வரா நிற்கின்றேன் :—நீ விரும் பழங்களைச் சொரிகின்ற காட்டில் அவற்றைச் சுற்றத்தோடே சென்று தின்னற்கு விரைந்து பறக்கும் பறவைத் திரளையொப்ப நன்னன் மகனாகிய நன்னனிடத்தே செல்வீராக. அவன் அழகிய மாலையை மார்பிடத்தே அணிந்துள்ளான். அவன், அழகிய தனங்களையும் மூங்கில் போற்றிரண்ட தோளையும், பூப்போல் குளிர்ந்த கண்ணிணையுமுடைய மகளிர்க்குக் கணவன். நாஞ்சில் உழவர்களாகிய புலவர்களுக்கு வேண்டிய காலத்துப் புதுப்பெருக்காய் வந்த நீர் போலப் பொருளளிப்போன்; தன் ஆக்கத்தினை உணரும் நினைவினையும், விற்றொழிலிற் பயின்ற கையினையும்பேரணி கலன்களை

யுமுடையன். அவன் தரும் பரிசில்கள் இவைஎன்று ஓர்ந்து அப்பரிசில்களை விரும்பி நீவிரும் அவன் பால் செல்வீராக. என்னை எதிர்ப்படுகையினாலே நீவிர் புறப்பட்ட நேரம் நன் முகூர்த்தத்தோடே நன்னிமித்தமும் உடையதாயிருந்தது. அவனை அடைவதற்குச் செல்லும் வழியின் நன்மையினள வும் ,தீமையின் அளவும், நீர் தங்கும் நல்ல இடங்களின் தன்மையும், பிறநாட்டாருக்குக் கொடுக்கும் அவன் நாட் டில் விளையும் உணவுகளும, அவனாட்டின் மலைகளின் தன் மையும், சோலைகளின் தன்மையும், விலங்குகள் விரும் பித்திரியும் காட்டின் தன்மையும் கூறுவேன்! இன் னும், பகைவரிடத்திருந்தும் கொள்ளை கொண்ட பேரணி கலன்களை முறபட அறிவுடையோர்க்குக் கொடுத்து பின் அவர்க்குச் சொரியும் பொன்மழையின் தன்மையையும் இகழ்ந்திருக்கும் பகைவரை அரசு கொடாமல் சுருக்கும் அறிவின் வலிமையையும் நவிலுவேன். சூதர், மாகதர், பாணர், கூத்தர் முதலியோர்க்குத் தான் வென்ற பகைவ ரரசைக் கொடுப்பதோடமையாது அத்தாணி மண்ட பத்தே இருந்து பல பரிசில்களை அளிப்பான். தாங்கற்ற வற்றைப் பிரசங்கிக்கும் வன்மையுடைய கற்றோர் குழுமி யிருக்கும் அவனது அவைக்களத்தே, வந்த அறிவுடை யோர் தாங்கற்றவற்றை எடுத்து விளக்கும் வன்மை இலராயின் அவர் அவ்வறிவுடையோரின் மாட்டாமையை மறைத்துத் தாம் பொருளைச் சொல்லிக் காட்டி எல்லோரும் ஏற்றுக்கொள்ளும்படி அறிவித்து நடத்துவர்.

கடல்சூழ்ந்த உலகத்தவர் அஞ்சி நடுங்கும் நஞ்சை ஊணாகை உடைய இறைவன் 'நவிர' மென்னும் மலையிடத் தில் இருப்பான். ஞாயிறு இருளைக் கடிவதுபோல அவன் தன் பகையாகிய இருளைக் கடிந்த தன்மையை யுடையன். அவனது முன்னோர, பகைவர் தேயம் தூரத்திலுள்ளன

வாயினும் அவ்விடத்தே சென்று முன்னணியிலுள்ள காலாட்களைக் கொன்று யானைப்படையிற் சென்று வேற் போர் புரிந்த வீரர்க்கு நாடு ஊர் முதலியவற்றைக் கொடுப் பர். அவனது புகழ் பரந்த பழைய ஊர் இரையைத் தேடி உலாவும் வளைந்த காலினையுடைய முதலைகளோடே திரை யுண்டாக ஆழ்ந்த அகழியையும், மலையை ஒத்த உயர்ச்சி யுடைய வானைத் தீண்டும் மதிலினையும் உடையது.

இப்பொழுது நீவிர் நன்னனைக் கருதிச் செல்கின்ற திசையைக் கேட்பீராக. நிலத்தே இட்ட விதைகளெல் லாம் விளையவேண்டுமென்று ஆண்டுள்ளார் விரும்பினாற் போல விளையும்படி மேகம் மின்னி மழையைப் பெய்யும். மழைபெய்த கொல்லை நிலத்து புல்லிய கொடியினையுடைய முசுண்டை ஆகாயத்தில் கார்த்திகை நட்சத்திரம்போல் வெள்ளிதாக மலர்ந்திருக்கும். வயல்களிலே முளைத்த பல கிளைகளையுடையஎள்ளுமரங்கள்நீலமணிபோன்றுவிளங்கும். நீர்ச்சாலை ஒத்த நிறைந்த சுனைகளையுடைய காட்டிடத்தே மிகுந்த துளிபடுகையினாலே எள்ளு மரங்களின் தடிகள் முற்றிச் சிவந்த நிறத்தை அடைதலைத் தவிர்ந்தன. முற்றிக் கறுத்து நிறைந்த நெய்யுடைய விதைகளையுடைய ஏழு காய்கள் ஒரு பிடியில் அடங்கும்படி கொழுத்திருந்தன. விளையாடிப் பொருகின்ற யானைக் கன்றுகளின் ஒன்றோ டொன்று சேர்ந்த கைகளை ஒத்த கதிர்களையுடைய தினை முற்றி அறுக்கும் பருவத்தை அடைந்திருக்கும். தினை அரிந்த தாள்களில் அரிவாளின் வாயை ஒத்த காயைக் கொண்ட அவரையின் தயிர்த்துளிபோன்ற பூக்கள் உதிர்ந்து கிடக்கும். வழியில் எருமை கிடந்தாற் போன்ற பாறைக ளுடைய வழியிடத்தே, தர்க்கிக்கின்றவனது இணைத்தகை விரல்களையொத்தஇரட்டித்த கதிர்கள்முற்றிவளைந்து அரிவா ளால் அரியப் பெறும், மலர்களையுடைய காட்டிடத்துள்ள

ம்தாரைநெல் முற்றி அவலிடிக்கும் பருவத்தை அடைந்திருக்கும். உழாது மண்வெட்டியால் கொத்திய தோட்டங்களில் விதைத்த வெண் சிறுகடுகு நெருங்கி விளைவெய்தியிருக்கும். மனிதனால் வரையப்படாத இயற்கைச் சித்திரம் போன்றமைந்த இஞ்சிக்கிழங்கு உறைப்புப்பெற்றிருக்கும். கொழுவிய கொடிகளையுடைய கவலை குழிகளிலே யானையின் மடித்த முழந்தாளைப் போன்ற மாவுடைய கிழங்குகளை வீழ்த்தும். மலைகளைச் சூழ்ந்து நெருங்கி வளர்ந்திருந்த வாழைகளின் பொத்திகள் யானையைக் குத்தும் பிடியில் இறுக்கிய வேல்களைப்போல் மலைப் பக்கங்களைக் குத்தும். நெருங்கிய காய்களையுடைய வாழைக் குலைகள் பழுத்திருக்கும். நெல்லு முற்றிய பெரிய மூங்கில்கள் அசையா நிற்கும். மரங்கள் காலமன்றியும் நிலவிசேடத்தாற் பயனைக்கொடுக்கும். காற்று அசைதலினால் நாவல் கரிய பழங்களைப் பாறையில் உதிர்க்கும். விடாய்த்தகாலத்துவாய் நீரூறுதற்குக் காரணமான உயவைக் கொடி நீரைப் போலப் படரும். கூவைக்கிழங்கு நீறு பூத்து முற்றிக் கிடக்கும். உண்பாரை வெறுஞ்சென்றிற் செல்லவிடாமற் தடுத்துக்கொள்ளும் பழங்கள் மாமரங்களிற் றூங்கும். நீண்ட அடியை உடைய பலாவின் பழம் வெடித்து உள்ளுள்ள விதையைச் சிந்தும். மலைப்பக்கத்தே பேராந்தை பேடுஞ் சேவலுமாக மாறி மாறி அலறும். அசைகின்ற கிளைகளையுடையை பலாவின் கீழிடங்களிலும் மேலிடங்களிலும் வழிப்போகும்கூத்தருடைய மத்தளம் போன்றகாய்கள் தூங்கும். ஐவன நெல்லும் வெண்ணெல்லும் ஈன்றகதிர்கள் பால் கட்டி காற்றாலடிபட்டு நன்றாய் விளைந்திருக்கும். இனிய கரும்பின் தண்டு பாத்தி தெரியாதபடி திரண்டிருக்கும். இலைகள் கவிழ்ந்து வேற்படைகள் ஒன்றோடொன்று சாய்ந்தாற்போல் காற்றடித்தலாற் சாய்ந்த கரும்

புகள் ஆலையிலிடுவதற்கு அறுக்கப்படும். மிகுந்த செல்வ முடைய புதுவருவாயையுடைய ஊர்களாலே புதிய தன்மையை அடைந்த அவ்வழியின் தன்மை இதுவாகும். நெருப்பை ஒத்த பிரகாசிக்கின்ற செங்காந்தளின் மழையாலே செருக்கி வளர்ந்த முகையை கபில நிறமுடைய முதுகையுடைய கழுகு தசை எனக் கருதி எடுக்கும்; எடுத்து தசை அல்லாதபடியால் அவற்றை பாறையிலே சிந்தும்படி போடும். அப் பாறைகள் நெருப்பை ஒத்த பல இதழ்கள் பரந்த வெறியாடுகளனை ஒக்கும். மணஞ் செய்த மனைபோல் பரிமளிக்கும் பெரிய மலைப் பக்கத்திற் சிறு குடியிலுள்ள கானவர் தேனையும், கிழங்கையும், தசை நிறைந்த கடகத்தையும், சிறிய கண்ணையுடைய பன்றியின் இறைச்சியையும், மற்றும் தசைகள் நிறைந்த பனை ஓலையால் முடைந்த கடகங்களையும், தம்மிற் பொருதுபட்ட யானையின் கொம்பைக் காவுமரமாகக் கொண்டு காவிவரா நிற்பர். வளவிய புதுவருவாயினையுடைய அவர்களது சிறிய ஊரிலே தங்குவையேல் கரிய பெரிய சுற்றத்தோடே அவ் வுணவுகளை உண்ணும்படி பெறுகுவை. அவற்றைப் பெற்று இளைப்பாறி அற்றைநாள் இராப்பொழுதும் அவர்களுடனே பொருந்தி அவ்விடத்தே தங்குவீராக. விடியற் காலத்தே எரிகின்ற நெருப்புப்போன்ற ஒள்ளிய பூங் கொத்துக்களைச் சூடிச் சிவந்த அசோக மரத்தையுடைய நல்ல வழியே செல்வீராக. அரிய வழிகள் இழிகின்ற மூங்கிலொலிக்கும் சிலம்பிடத்தே யுள்ள சிறூர்களைச் சேர்ந்து 'வெற்றியுடைய நன்னனுடைய கூத்தர்யாம்' என்று கூறுவீர்களாக. மலைகளிலுள்ளோர் நும்மை உள்ளே அழைத்து தூரத்தில் நின்றும் வந்த வருத்தந் தீரும்படி இனிய மொழிகள் கூறி நெய்யிற் பொரித்த இறைச்சியுடன் தினைச் சோற்றை உண்ணும்படி தருவர்.

மலையின் உச்சியிலேயுள்ள நன்னனுடைய நாடு யான் கூறிய தன்மைத் தன்று; மிக்க சிறப்பமைந்தது. ஆண்டுப் பெறுவனவற்றைக் கேட்பீராக. அவ்விடத்தே பெண்ணாய் ஓடிக் கடித்த உடும்பின் இறைச்சியோடு கடமானின் கொழுவிய தசையையும், முட்பன்றியைக் கொன்ற பசிய நிணமுடைய தசைகளையுங்கலந்து தின்று இடையே மூங்கிற் குழாய்க்குள் இருந்து முற்றிய தேனாற் செய்த கட்டெளி வைக் குறைவின்றி நிரம்ப உண்ணப் பெறுகுவிர். பின்னர் நெல்லாற் சமைத்த கள்ளையும் உண்டு களிக்கும்படி பெறு குவிர்.

நறிய மலரைச் சூடின நாறுகின்ற கரிய மயிர் முடியினையுடைய குறமகள் சுனைநீர் கொண்டுவந்த பலாப் பழத்தின் வெள்ளிய விதையின் மாவையும் புளியம் பழத்தின் புளியையும் மோருக்கு அளவாகக் கலப்பாள்; கலந்து மூங்கிலரிசியைச் சுரபுன்னை நெருங்கிய மரச் சாரல் எல்லாம் கமழும்படி துழாவி ஆக்குவாள்; ஆக்கிய வெள்ளிய சோறாகிய உணவை, நெஞ்சு நிறைந்த மகிழ்ச்சியுடையராய் விருந்தினரைப் பெற்றே மென்னும் ஆசையோடே நெஞ்சு கலந்து தத்தம் பிள்ளைகளைக் கொண்டு முறை சொல்லித் தடுத்து, விடியற் காலத்துக் கள்ளுண்டு மகிழ்ச்சியுற்ற நும்முடைய மதம் தீரும்படி பெறுகுவிர். இன்னும் உச்சிமலையிலே ஏறிக் கொண்டுவந்த விளங்குகின்ற பண்டங்களையும் பெறுகுவிர். அங்ஙனம் பெற்றதாலே போரைச் செய்கின்ற வலியுடைய நன்னனிடத்துப் பெறக்கருதிய பரிசிலை மறந்து நீடித்திருப் பினும் இருப்பிர். நிரைத்த இதழையுடைய குவளையை தெய்வம் விரும்புதலால் வாசம்பொருந்திய பூக்களைக் கிட் டினும், ஆண்டுவரையர மகளிருடைய இருப்பைக் காணி

னும் வெதும்பி நடுங்குதலுமுரியிர். ஆகையால் பல நாள் நில்லாது அவ்விடத்தைவிட்டுச் செல்வீராக.

முற்றின தினைப்புனத்தைப் பன்றி அழிக்கையினுல் அதற்கஞ்சி வைக்கப்பட்ட கற்பொறிகள் வழிகளிலுண்டு. ஆகையினுல் செறிந்த இருட்காலத்தே அவ்விடத்திற் றங்கியிருந்து விடியற்காலத்தே போவீராக. மிகுதியாகப் பலரும் போகாத வழியே போகத் துணிவீராயின் மேட்டு நிலத்தேயுள்ள கற்களுடைய பள்ளத்திற் பிளப்பில் பாம்பு மறைந்து கிடக்கும் குழிகளுள. அப்பள்ளத்தைக் கவனித்து, மரங்களிலேறி அவற்றிற்றட்டி மிருகங்களைப் பார்ப்பீராக. விறலியர் பாம்பு மகிழும்படி கையாற் றொழுது வாழ்த்த விலங்குகள் கிடக்கும் வழியை அகன்று வலப்பக்கத்தே உள்ள வழியை நுமக்கு நெறியாகக்கொண்டு செல்வீராக. யானைகள் தினைப்புனத்தை அழியாதபடி குறவர் உயர்ந்த பரணில் ஏறி இருந்து காவல் காப்பர். காத்து குறிய காட்டிடத்தே நிறைந்த யானைகள் நிலைகுலையும்படி கவணுற் கற்களை எறிவர். அக் கற்கள் கூற்றுவனைப்போல் உயிர்போக்குந் தன்மையன. அவை, குரங்கும் அதனது குட்டியும் ஓசை அடங்கும்படி பெரிய மூங்கிலின் கோலைக் கடந்து விசைகெடாது வரும். அவற்றுக்கு மரங்களின் பின்னே ஒதுங்கி நின்று செல்வீராக. காட்டாறு வலிய யானையை விழுங்கும் வலிய முதலைகள் தங்கும் இராக் காலத்தை ஒத்த இருள் செறிந்த காவற்காட்டையும், ஆழ்ந்த நீருறத கிடங்குகளையுமுடையது. அவ்வாறு அகழியிலே இழிந்தாற்போன்று ஏறுதற்கும் இறங்குதற்கும் அரிய தன்மையுடையது. அவ்வாற்று வழி வழுக்கும் கரையுடையது. அவ் வழியிற் செல்லு ஞான்று செம்மறியாட்டை யொத்த செம்பட்டை மயிருடைய பிள்ளைகளோடே மரங்களிற் சுற்றிக் கிடக்கும் கொடி

களைப் பிடித்துக் கால் வழுக்காதபடி ஒருவரை ஒருவர் பாதுகாத்துச் செல்வீராக. அசையும் செவ் வெருக்கு வளரும் பக்கமலையில் வீழ்ந்தோரைக் கொல் லும் ஆழ்ந்த குளங்களுக்கு அருகே நிலத்தை மறைத்துப் பாசி யிருக்கும். அதனிடத்தே மிதிக்கின் ஊன்றிய அடி யை ஓடப்பண்ணும். அதனால் அவ்விடம் போதற்கு அரு மையுடையது. அதற்குப் பரிகாரமாக வழிமுழுதும் பின்னி வளர்ந்த நுண்ணிய கோல்களையுடைய சிறு மூங்கிலோடே கொறுக்கைப் புல்லையும் பற்றுக் கோடாகப் பிடித்துப்போ வீராக.

முகபடாத்தையும்,நெடுமையையுமுடையமலைபோலும் போர்க்களிற்றினையும், மழைபோல் வில்லிடத்தினின்றும் புறப்படும் அம்பினையுடைய தூசிப்படையையும் பெற்றுப் பொலிவு எய்திய பழைய மதில் உடைய ஊரிடத்து பூக் களையுடைய மடுவுடைய ஆற்றங்கரையில் ஓர் வழியுண்டு. அதனிடத்தே துதித்தற் கரிய முறைமையினையுடைய கடவுளைக் கண்டீராயின் நீவிர் வணங்கிப் போதலல்லது வாச்சியங்களை ஒலியாதிருப்பீராக. அதற்குக காரணம் யாதெனில், அவனது வளவிய நவிர மென்னும் மலை மயங் கின துளியையுடைய மழையை இடைவிடாமற் பெய்யும். அதனால் வாச்சியங்கள் நனைந்து நுமக்குப் போதல் அரிதாகும்.

அக்காட்டிடத்தே மயில் கலாபத்தினது பாரத்தாலே ஆடி யிளைத்து நிற்கும். நெடிய மூங்கிலின் கவடுகளிலே கூத்தருடைய பிள்ளைகளை ஒத்த கடுவன்பாயும். தெய்வம் விரும்பும் நெடிய பக்கமலையிலே தேன் கூடுகள் காணப்படும். அவற்றை விரைந்து பார்த்து நெறியின் கண் செல் வீராக, அதற்குக் காரணம் யாதெனில் வழி தப்புவிர். மலையைச் சேர்ந்த வழியினையுடைய காட்டிடத்தே செல்லு

மிடத்து, கானவர் யானை முதலியவற்றுக்கு எட்டாத பரணிலிருந்து எய்ததலினால் மார்பிலே புண்பட்டு அம் புடன் வழியைக் கடந்து சென்ற, தேய்ந்த கொம்பினையும் வெள்ளிய நிணத்தையும் ஒப்புரவில்லாத கழுத்தையும், கரிய நிறத்தையுமுடைய பன்றியைக் காண்பீர்கள். கண்டு மூங்கிலிடத்துப் பிறந்த தீயினால் வாட்டி மயிர் போகச்சீவித்தின்று குவளை வளரும் பசிய சுனையில் பளிங்கு போன்ற தெளிந்த நீரை வழியிடத்து இளைப்புத் தீரும் படி உண்பீராக. பருத்த தசை முழுவதையும் உண்ணு மல் பொதியாகக் கட்டிக்கொண்டு* வளைகையினின்றும் நீங்குதற்குக் காரணமான பிள்ளைகளுடனே அவ்விடத் தினின்றும் போகாது நும்மில்லிலே புக்காலொத்த மலை முழைஞ்சுகளில் இராக்காலத்துத் தங்குவீராக. இராக் காலத்தே எல்லோருங் கூடி இளைப்பாறி விடியற் காலத்தே துயிலுணர்ந்தெழுந்து நல்ல காட்டுவழியே செல்வீராக. அகன்றபடத்தினையும் அழகிய கண்ணி னையுமுடைய வலி மிகுந்த சினத்தையுடைய யானையை விழுங்கும் பெருமரங்களை ஒத்த பெரும் பாம்புகள் கிடக் கும் வழியை விலகிச் செல்வீராக. தூரத்தே மணங்கமழ் கின்ற பூவையும், உண்டவர் மறந்து உயிர்வாழ்தலாற்ருத பழங்களையும் தெய்வங்களன்றி மானிடர் நுகரார். ஆகையி ஞலே நீண்ட காம்புடைய அப்பூக்களையும் பழத்தையும் குளத்தைக் கண்டாற்போலும் குளிர்ச்சியுடைய மரக் கூட்டத்தையும், யான் கூறியதனை நினைத்து அவற்றின் குறிகளை அறிந்து இடத்தினும் வலத்தினும் பார்த்து அவற்றை அணுகாமற் போவீராக. பழங்களையுடைய கிளை களில் பலவாச்சியங்களொப்ப பல ஓசைகளைச் செய்

---

* பிள்ளையைப் பெற்ருல் வளையல் அணியா ரென்பது.

யும் பறவைக் கூட்டத்தையுடைய ஆலமரங்கள் நிற்கும் நாடுகளை மெல்ல அடைவீர்கள். அப்பால் நிழல் மரங்கள் நெருங்கின குறுங்காட்டால் வெய்யில் நுழையாததும், இராக்காலத்தே வேட்டையாடுங் குறவரும் திசை தெரியாமல் மயங்குகின்ற குன்றிடத்தே செல்லுங்கள். சென்று வழியிடத்தே போகாது அகன்ற பாறையிலே இருந்து கல்லென்னும் ஓசைபட நும்முடைய வாச்சியங்களை ஒலிப்பீர்களாக. இனிய ஓசையுடைய அருவிகளுடைய உச்சி மலையிலே காட்டைக் காத்திருக்கும் கானவர் பலருளர். அவர்கள், துறை தப்பி ஆழத்திலே சென்ற வலியழிந்த மாக்கள் புனலிலே அழுந்துகின்றதைக் கண்டு விரைந்து எடுப்பாரைப்போல நீவிர் திசைமயக்கத்தால் அறிவழிந்த வருத்தம் தீரும்படி ஓடிவந்து சேர்ந்து உண்டற்கினிய பழங்களையும் சூடுதற்கினிய பூக்களையும் தருவர். பின்னர் இடையூறு மிக்க வழியிடத்து நுமக்கு முன்னே துணையாக வழிகாட்டிச் செல்வர். அதனாலே நும்முடைய சுற்றத்தோடே மனமகிழ்ச்சி எய்துவீர். பக்கமலை புதியமாந்தர் கண்ணுற்றுக் காணினும் தலைமயக்கும் தன்மையது. திசைகாட்டுவார் கூறிய திசையை அறிந்து குறியவும் நெடியவுமாகிய பக்க மலைகளை முறையே இழிந்து, பூப்பரந்த பல வரிகளையுடைய நிழலிலே இளைத்திருப்பீர்களாயின் பல கூறுபாடுகளையுடைய ஓசைகளைக் கேட்பீர்கள்.

மலையிடத்தே குரங்குகள் பலாப்பழத்தைத் தோண்டுதலால் மலைமுழுதும் அத்தேன் நாறும். அம் மலை உச்சியிலுள்ள பண்டங்களை வாங்கிக்கொண்டு விசையுடன் ஆரவாரஞ் செய்து வருகின்ற அருவியை ஆடும் தெய்வமகளிர் கையாற் குடையுந் தோறும் நும்முடைய வாச்சியங்களைப் போல தாளந் தெரிகின்ற இனிய ஓசை பிறக்கும். தினைப் புனத்துப் புகுந்து தின்னும் விளங்குகின்ற ஏந்தின கொம்

யையுடைய தன்னினத்தைப் பிரிந்த தலைமையுடைய ஆண் யானையை மலையின் மேலிட்ட பரணில் இருந்து காவல் செய்யும் கானவர் பிடித்தற்கு விரும்பி வளைத்தலால் ஆரவாரமுண்டாகும். நீண்ட அளையில் தங்கும் முட்பன்றி தனது கூரிய முள்ளால் எய்து கொன்றவர் பொருட்டு அழுகின்றவர்களின் ஆரவாரம் ஒருபால் எழும். தம் கணவர் மார்பிலே புலி பாய்ந்து உண்டாக்கிய நெடிய பிளந்த புண்ணை ஆற்றுதற்குக் காவலென்று கருதி கரிய கூந்தலுடைய கொடிச்சியர் பாடி ஒலியைச் செய்யா நிற்பர். முழுகளிலே பூத்த பொன்போலுங் கொத்துடைய வேங்கைப்பூவைச் சூடுதற்கு மகளிர் புலிபுலி என்று அச்சமில்லாத ஆரவாரஞ் செய்வர். கருப்பமுடைய பிடிக்கு களிறு கவளந் தேடிக் கொடுத்துப் பாதுகாக்கையால், அதன் போக்கினைக் கவனித்து ஒளித்திருந்து புலி பாய்ந்ததாக, அப்பிடி தன் சுற்றத்தோடே மலையிடத்தில் சத்தமிடா நிற்கும். குட்டியைத் தனது கையால் தழுவ மறந்த மந்தி அக்குட்டி எடுத்தற்கரிய மலைமுழைஞ்சில் வீழ்ந்திறந்ததாக, தனது சுற்றத்தோடு அதனை நெருங்கியிருந்து துன்பத்தால் ஆரவாரஞ் செய்யும். குரங்குகள் ஏறமுடியாத மலையிடத்தில் ஏணியாகக் கூட்டி நட்ட மூங்கிற் றடிகளின் கணுக்களில் மிதித் தேறித் தேனெடுப்போர் ஆரவாரஞ் செய்வர். அழகிய வேலினையுடைய நன்னனுக்குக் கொடுத்தற்கு இச்சிற்றரண்களிற் கைக்கொண்ட பொருள் போதுமெனக் கருதி அழித்தற்குரிய பகைவர் சிற்றரண்களை அழித்தலால் கானவர் ஆரவாரஞ் செய்யா நிற்பர். விடியற்காலத்தே கள்ளினையுண்ட குறவர் மான்தோல் போர்த்த பறை கல்லென்னும்படி ஒலிக்க வானைத் தீண்டும் உச்சிமலையிடத்தே தம் பெண்டிரோடு கூடிக் குரவை யாடுவர், அழகிய உயர்ந்த தேர்கள் வழியிடத்தே ஓடி வந்த

தன்மைபோல் கல்லின்மேல் வரும் ஆறுகள் முழைஞ்சு களிலே வீழ்ந்து இடைவிடாது ஓசையைச் செய்யும். காட்டாற்றின் நீண்ட சுழியில் அகப்பட்ட கொடிய யானை யின் கோபத்தைத் தணியப் பண்ணி பெரிய கம்பத்திலே சேர்க்கும் பாகருடைய ஆரவாரம் ஒருபால் எழும். ஒரு பால் தட்டையைப் புடைத்துப் புனங்கடோறும் கிளிகளை ஓட்டுகின்ற மகளிர் சத்தமிடும் ஆரவாரம் எழும். ஒரு பால் நிரையினின்றும் பெயர்ந்த அசையும் ஏரியினையுடைய இடபமும், போர்த்தொழில்கைவந்தமரை ஆணின் ஏறும், முல்லை நிலக்கோவலரும் குறிஞ்சி நிலக் குறவரும் சேரக் கூடி வென்ற தன் வெற்றி தோன்ற முதுகிடாது புண் உண் டாகும்படி முட்டிப் பொரும் ஆரவாரம் எழும். எருமைக் கடாக்கள் காட்டு மல்லிகையும் குறிஞ்சியும் வாடும்படி பொருது ஆரவாரஞ்செய்யும். பலாப்பழங்களின் சுளையை விரும்பினோர் தின்று வீழ்ந்துகிடக்கும் மிகுந்த பழத்தின் விதையைப் பயன்படுத்துதற்கு, சிறுவர்கள் கன்றுகளைப் பிணைத்துத் துடுப்புப்போலும் காந்தளினது கமழுகின்ற மடலாலே அடித்து ஆரவாரஞ் செய்து கடாவிடுவர். கருப்பஞ்சாற்றைப் பிழிந்து சாறெடுத்தலால் ஆலையிடத் தில் ஓசை எழா நிற்கும். தினையைக் குற்றும் மகளிரு டைய இசைமிகுந்த வள்ளைப் பாட்டாலும், சேம்பையும் மஞ்சளையும் விதைத்து வளர்த்த பின்பு பன்றி கிழங்கு அகழாமற் காப்போர் கொட்டும் பறையாலும் ஆரவார முண்டாகும்.

யான் கூறிய இவ்வோசைகளும், திரண்ட தாழ் வரையிலும் உச்சிமலையிலுள்ள ஆரவாரமும், இவை யல்லாதபல ஒலிகளும் சேர்ந்து நெருங்குதலையினாலே மலை யாகிய யானையிடத் துண்டாகின்ற ஒலி திசைகளெங்கும் ஒலியா நிற்கும். பலநிறம்பொருந்திய மாலையணிந்த

மகளிரின் ஆடற்கு ஏற்ற முழவின் ஓசையினால் ஊரிடத் துள்ளோர் துயிலறியார். இவ்வியல்புடைய ஊரிடத்தே கொண்ட திருநாளைப்போன்ற காண்டற்கினியவற்றைக் கண்குளிரக் கண்டும் கேட்கப்படுவனவற்றைச் செவிகுளி ரக் கேட்டும் உண்டற்கினிய பல உணவுகளைக் கொண் டாடி உண்டும் மகிழ்வீராக. மகிழ்ந்து நமக்கு மேலும் இந்நுகர்ச்சி உண்டாவதாக வென்று விரும்பிப் பழைய உறவான மக்களைப் போலும் முறைமையினையுடை யீராய் அவ்விடத்தே சிலநாள் தங்குவீர்களாக. போர்த் தொழில் மிக்கு நடத்தலால் உலகம் புகழும் திருமகள் தங்கும் மார்பையுடைய நன்னனது இடியேறு முழங்கும் மலைகள் தோன்றும். அவற்றை நுமக்கு பின்னால் விட்டுச் செல்வீராக. பக்க மலையிடத்தே அதிசயம் நெருங்கின இனிய யாழையுடைய விறலியர்குறிஞ்சியென்னும் பண்ணைப் பாட நீவிரும் ஆண்டுறையும் தெய்வங்களைக் கையாலே தொழுது 'எங்குறை முடித்தால் நுமக்கு இவை தருதும்' என்று பரவுக் கடன்பூண்டு வாழ்த்திச் செல்வீர்களாக.

பின்னிய பஞ்சுபோலச் சென்று கார்காலம் வருமளவும் மலையிற் கிடந்த மேகம் சூல் கொண்டு கையினாற் பிடிக்கத் தக்க அண்மையில் கருமை பெற்று விளங்கும். அதுவலியத் தாவினாலொத்த துளிகளைத் தூவாநிற்கும். அதனால் விரை வாக நடந்து செல்லமுடியாத உமது சுற்றத்தோடே காவிச் செல்லும் வாத்தியங்கள் நனையாதபடி கிணறுகள் போன்ற குகைகளிடத்தில் நுழைந்து புகுவீர்களாக. பெரிய கல்லுகள் முறிந்து விளங்குகின்ற மலைகளை அடையாதீர். எட்டத்தே நின்று கணணினாற் பார்க்கினும், அவை கண்ணினொளியை அழகாலே வாங்கிக்கொள்ளும். இப் பெரிய மலையில் வருத்தத்தைச் செய்யும் குழிகளிடத்துப் பிறக்கும் இடை யூறுகள் பல. மண் செறிந்த முழவைத் தூக்கிச் செல்லும்

காமரத்தை நுமக்கு ஊன்றுகோலாகக் கொண்டு அக் குழிகளில் விழாமற் போவீராக. வெயிலுள்ள வழியிடத்தே செல்ல விருப்பின் வெயிற்றாழ்ந்த அந்திப்பொழுதிற் போவீராக. அவ்விடத்தே நன்னனது யானைப் படையை உடையதும் பொருதிவந்த அரசர் வலியைக் கெடுப்பது மாகிய அரண்களுண்டு. அவ்வரண்களிற் பின்னி வைத்தாலொத்த கொடிகளடர்ந்த சிறு காடுகளுடைய சிறு வழிகள் தோன்றும். முன்னே போகின்றவன் எதிரே கிடக்கும் திரண்டகோல் முகத்தில் அடியாமல் முன்னே தள்ளி விலக்கிச் செல்வான். அவ்விசையுடைய கோல் யாழின் பத்தரையும் முழவின் கண்களையும் கொடாதபடி காத்து அதனைக் கையாற் பிடித்துக்கொண்டு மெல்ல மெல்லச் செல்வீராக. யானைகள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து பொருதினாற்போல நெருங்கின குன்றுகளிடத்து மழையினாற் செழுமையுற்ற பல காடுகள் உண்டு. ஏவல் கேளாத பகைவர் போரில் முதுகிட்டனர். அதனைக் கண்ட வஞ்சியார் படை வெற்றிதோன்ற ஆரவாரஞ் செய்தது. அதனைக் கண்டு பொறாத புறங்கொடுத்த மறவர் உயிர் கொடுத்தற்கு இது நல்ல காலமென்று நாணத்தினால் மீண்டு வந்து உயிரைக் கொடுத்தனர். அவர்கள் புகழினை எழுதி நட்ட பல கற்களையுடைய முதுகிட்டோடினோரை இகழும் பல வழிகள் அக் காட்டிடத்தே உண்டு. அந் நடுகற்களிலுள்ள தெய்வங்களுக்கு விருப்பமுண்டாகும்படி நுமது யாழை வாசித்து விரைந்து செல்வீர்களாக. வழியறியாமற் தீய நிலத்தே போய்த் திரும்பி வந்தவர்களும், இனி வருகின்றவர்களும் அவ்வாறு போய் மீளாதபடி பல வழி கூடிய சந்தியை கையாலே கூட்டி ஊகம்புல்லை முடிந்து அடையாளமாக வைப்பீர்களாக. இவ்வாறு பொருது இறந்த இன்னான் என்று அவன் பெயரை உலகமே அறியும்படி

எழுதி மராமர நிழலிலே நட்ட வீரக் கற்களின் தெய்வத் தன்மை மிகுந்த கொடுமையால் அக்காடு பிறநாடு களை இகழ்வது போன்றது. அதனிடத்துள்ள பலவழி களில் நன்னனது பகைவருறையும் கொடிய இடங்கள் பல வுண்டு. தம் மூர்களினின்று நினைப்பினும் தலை நடுங்கும் சுரத்து, தேன் சொரியும் மாலையையும் கொடுத்துக் கவிந்த கையினையும் தனக்கென்று ஒருபொருளையும் பேணாத இயல்பினையுமுடைய நன்னனை நாடிச் செல்கின்றே மென்று கூறுவீர்களாக. கூறுவீர்களாயின் அப்பகைப் புலம் நம்மை ஒத்த பரிசிலர்க்கு செல்வமிக்க நன்னனுடைய உயர்ந்த ஒழுக்கத்தினையுடைய பழைய ஊர்களை ஒக்கும். ஆதலின் அச்சமின்றி அவ்விடத்தே இளைப்பா றிப் போவீராக. காட்டிடத்தே புலி பாய்ந்துகொன்ற பெண்மானை நினைந்து கலைமான் சத்தமிடும்; வில்லின் ஓசைக்கு வெருவின சிவந்த கண்ணையுடைய மரையேறு குறுங்காட்டிலே விரைந்தோடும். வேற்றுப் புலங்களில் சென்று மேய்ந்த ஏற்றையுடைய நிரையிடத்துள்ள சங்கு போல் வெள்ளிய பசுக்களின் இனிய பாலை, வளையினை யுடைய மகளிர் மனமகிழும்படி நிரையைச் சூழ்ந்து காவல் செய்யும் இடையர் கொண்டுவந்து சொரிவர். அவ் விடத்தே செல்லின் நீவிர் அவர்களது விருந்தாகுவிர். பண் டம் விற்றலினுற் பெற்ற பலசாதி நெல்லினைக் குற்றிய அரி சியைப்போல கிடாயுடைய செம்மறித்திரள் வெள்ளாட் டுடனே கலக்கும். கலந்து கல்லென்ற ஓசையுடைய காட் டிடத்தே கடல் போலொலிக்கும். இவ்வகையான ஆட்டுத் திரள் நிற்கின்ற காட்டிடத்தே இராக் காலத்தே செல்வீ ராயின், இடையர் நுமக்கென்று சமையாமல் தமக்கென்று சமைத்த பாற்சோற்றையும் பாலையும் பெறுகுவிர். இடை யர் நெருப்பை எரித்து, மெல்லிய தலைமயிரை அடைந்த

மெத்தையைப் போன்று, ஆட்டுத் தோலைத் தைத்துச் செய்த படுக்கையிலே துயில் கொள்வர். அந்நெருப் பிடத்தே துணையாக இராத்தங்கிப் போவீராக. அரசன் ஆணையால் நாட்டைக்காத்து நிற்கும் வேடர் கூட்டத்தைக் கண்டீராயின் நன்னனை நினைத்துப் போகின்றோமென்று கூறுவீராக. அவர் கள்ளையும் கிழங்குகளையும் உண்ணும்படி நுமக்கு நலிந்து தருவர். அவற்றை நுகர்ந்து அவ்விடத்தே அவர் போகச் சொன்ன வழியே செல்வீராக. அக்காட்டின் தன்மை இவ்வகையின தாகும். தேன் துளிக்கும் மெல்லிய மலர்க் கொத்துகளையும் யானை முறித்த தளிர்களையுடைய ஆச்சாவின் பூக்களையும், மரல் நாரினாலே மாலையாகக் கட்டிச் சூடுவீராக. பருக்கைக் கற்களுடைய மேட்டு நிலத்தில் சிறு வழி மழை பெய்து குளிருகையால் அவ்விடத்தே தங்கிநின்ற தெளிந்த நீரைக் குடித்து வழிக்கும் முகந்துகொண்டு போவீர்களாக. சென்று தடிகளால் தெற்றிப் பண்ணிப் புல்லால் வேய்ந்த குடில்களி ருக்கும் குடியிருப்பினையுடைய அகன்ற ஊரை அடைவீர் கள். அவ்விடத்துத் தங்குவீராயின் வேங்கைப் பூவின் நிறத்தையுடைய அவரை விதையையும் மூங்கிலரிசியையும் புளி கரைத்த உலையிலே சொரிந்து ஆக்கின குழைந்த புளியங்கூழைக் காட்டிடத்துப் பகல்வழி நடந்த வருத்தந் தீரும்படி இராக்காலத்தே பெறுகுவிர். அவ்விடத்தே சில நாட்டங்குவீர்களாயின் இறைச்சி கலந்த நெய்ச் சோற் றையும் தினைமாவையும் பெறுகுவிர். அவற்றை உண்டு குறங்கொள்ளியை எரித்து பனி வருத்தாது நித்திரை கொண்டு விடியற்காலத்தே நிமித்தம் பார்த்துப் போவீர்க ளாக.

நன்னனுடைய குளிர்ந்த மருத மரத்தையுடைய நாடு காஞ்சிமரத்தையும் நீர்வந்து பொருகின்ற அறுகுகளையும்,

மெல்லிய விளைநிலங்களையும், பொழில்களையும், இடைச் சேரிகளையும் உடையது. இவ்வகையான ஊர்களில் ஒரு நாள் தங்கிப்போகினும் பலநாள் நிற்பினும் யாழின்பண்களை மாறி வாசிக்குமிடத்து எவ்வாறு இனிதா யிருக்குமோ அவ்வகையான நல்ல பல பொருள் களை மாறி மாறி உண்ணும்படி பெறுகுவிர். நண்டுகள் ஆடித்திரியும் வயலுக்கு அருகே உள்ள மேட்டு நிலத்தே மலை ஒத்த போர்களைக் கீழே தள்ளிக் கடாவிடும் உழவர் நெல்லை அள்ளித் தருவர். பகன்றைப் பூவாற் செய்த மாலையணிந்த கள்விற்கும் வலையருடைய மகளிர், வலைவீசு வார் கொண்டு வந்த வாளைமீன்றசையுடன் தூண்டிலிற் பிடித்த பிடியின் கையை ஒத்தசிவந்த கண்ணையுடையவரா லினது உடுக்கின் கண் போன்ற தசையைக் கலப்பாள். கலந்து அசைகின்ற மிடாவினின்றும் வார்த்த நெல்லு முளையாலாக்கின கட்டெளிவுடன் விடியற்காலத்தே களங் கடோறும் நல்குவர். இன்னும் நன்னனுக்கு உணவாதற்கு அமையுமென்று கண்டோர் மருளும்படி முள்ளைக் கழித்து ஆக்கின கொழுப்பால் வெள்ளிய நிறத்தையுடைய தசை யுடைய வெள்ளிய சோற்றை நும் சுற்றத்துடனே உண்பீ ராக. உண்டு எருத்தை அடிக்கின்ற உழவர் ஓசையோடே கூடும்படிமருதப்பண்ணைவாசித்துஇளைப்பாறிப்போவீராக. நெல்லறுப்போர் கொட்டும் பறை யோசைக்கு அஞ்சி எரு மைத் திரளைப்பிரிந்த கடா நும் மேல் வருவதைப் பாது காத்து, குயவன் வனைகின்ற மட்கலத்துச் சக்கரம்போலக் குமிழி சுழன்றுதோன்றும் வாய்த்தலையில் ஒழிவில்லாமல் ஓடும் சேயாற்றங்கரையை வழியாகக் கொண்டு செல்வீ ராக.

நன்னனது பழைய மூதூர் பல வண்டுகள் ஒலிக்கும் குளிர்ந்த பொழில்களையும், உயர்ந்த மதிலினையும், திருநா

ளென்னும்படி மாந்தர் பொருந்திக் கடலெனக் காரென ஒலிக்கும் ஆரவாரத் தோடுதிரியும் பெரிய மாடங்கள் ஓங்கிய அங்காடித்தெருவினையும், பல குறுக்குத் தெருக்களையும் உடையது. இவ்வகைத்தாகிய அவனது வியநகர் சேய்மைக் கண்ணன்று. பல பின்னிய வழிகளையுடைய கோபுரவாயிலில் பகைவரின் கரிய தலைகளைப் பருந்துகள் படிந்து உண்ணும்படி போரை வெல்லும் வாளையுடைய மறவர் கரிய காம்பினையுடைய வேலைச் சாத்தி வைத்துக் காத்து நிற்பர். அவ்வரிய கோபுர வாயிலை ஐயுறுமற் புகுவீராக. அம்பலங்களிலே தங்குகின்ற தூர தேசங்களினின்றும் வந்த கூத்தர் முதலியோரெல்லாம் நும்மைக் காண்பர். கண்டு வெல்லுகின்ற போரையுடைய முருகனைப்போன்ற நன்னனிடத்துப் பரிசில் பெற வந்தாரென்று அன்பாகப் பார்ப்பர். பார்த்து நீவிர் தனிமையாய் இருக்கும் வருத்தம் நீங்கும்படி தமது விருந்தினராய் உங்களை எதிர் கொள்வர். நீவிர் அவ்விடத்தே தங்கி யிருப்பீராக. அரசனது தலைவாயிலிடத்தே மராமரத்தின் கீழ்க் கிடந்த ஆமானின் குழவியும், யானைக் கன்றும், வளைந்த அடியினையுடைய கரடியின் வாய் திறவாக் குட்டியும் வளைந்த காலினையுடைய எட்டுக் காலுடைய வருடையின் கிடாயும், கீரியும், புலி பாய்ந்து கொன்ற மரையானின் பெரிய செவியுடைய குட்டியும், சிவந்த நிலத்திற் சுக்கான் கல்லின் மேல் தவழும் ஆண் உடும்பும், மலையிடத்தே ஆடும் மயிலும், கோழிப் பேட்டை அழைக்கும் குரலுடைய சேவலும், முழவு போன்ற பலாப்பழமும், இனிய மாம்பழங்களும், மணம் பொருந்திய நறைக் கொடியும், காவிக் கொண்டு வந்த நுகம் போன் றூறைக்கிழங்கும், கருப்பூரமும், மாணிக்கமும், புலியினாற் கொல்லப்பட்டயானை களின் முத்து

டைய கொம்புகளும், காந்தட் பூவும், புன்னைப் பூவும், திலகப் பூவும், பசியமிளகுக் கொத்தும், மூங்கிற் குழா யில் முற்றிய கட்டெளிவும், மூங்கிற் குழாயிலூற்றிய எருமைத் தயிரும், தேன் சொரியும் இறாற்கூடுகளையுடைய ஆசினிப் பலாக்கள் நிற்கின்ற மலைகளினின்றும் பிறந்த காவிரி கடலிலே மிக்குச் செல்கின்ற புகார் முகத்தை யொப்ப ஈண்டிக்கிடக்கும். வானைத் தொடும் யானைகளின் இலத்தி கிடக்கும் முற்றத்தே அணுகுவீராக. அவ் விடத்தே, மழை முழக்கம் போன்ற கண்ணையுடைய முழவும் புள்ளாங்குழலும் ஒலிப்ப, விறலியர் பழைய முறைமையிற்றப்பாது கடவுளை முதலில் வாழ்த்தா நிற்பர். பின்பு புதிய பாடும் பாட்டுகளைப் பாடி 'பெரிய புகழுடைய நினது முன்னோர் மரபில் வந்த பல உபகாரிகள் இறந்தார்கள். அவர்களைப்போலாது நின்பேர் இக்காலத்து இவ்வுலகில் நடந்துவிடாது உலகுள்ளளவும் நிற்கும்படி கொடைக்கடனை முடித்தலையுடையவனே' என்று கூறுவீராக. கூறி அவனது வெற்றிப்புகழை அவன் ஐம்புலனும் தன் வசமாகும்படி புகழ்ந்து கூறுவீராக. நும்மனத்திற் சென்ற ஏனைப் புகழ்களை முற்றக்கூறவும் விடானாய் "என்மேலுள்ள விருப்பங் கொண்டுவருகை யினாலே என்னிடத்தே வந்ததுபோதும், வழிவந்த வருத் தம் பெரிது" எனக் கூறுவான். பின்னர் படைத்தலைவ ரோடே பொலிவு பெற்ற செல்வத்தையுடைய தன் மனை யின் முற்றத்தே உங்களை அழைத்துச் செல்வான். சென்று * சமயத்திருக்கு மண்டபத்தே யிருப்பான். இருந்து உயர்ந்த அரச உரிமையையும் கொடுமையில்லாத அமைச்சர் முதலியோரையும், அகன்ற நாட்டினையும்,

* யாவருங் காணுதற்கெளியனாய் வீற்றிருக்கும் மண்டபம்.

சுருங்கின அறிவினையுமுடையராய் இரந்து வந்தோர்க்கு இல்லை என்று கூறி மறித்தகையினராய் தம் பெயரை உலகில் நிறுத்தாமல் இறந்துபோன அரசர் மலையினின்றும் பெருகி ஓடுகின்ற சேயாற்றங் கரை மணலிலும் பலராவர். ஆகையினால் நமக்குத் தெய்வம் இத்துணை காலமிருவென எல்லையிட்ட காலம் புகழோடே கழிந்துபோவதாக'' என்று நினைவான். பின்னர் கொடையை விரும்பினவனாய் நும்மை இனிதாக நோக்கி, இழைபோன விடமறியாத நுண்ணிய நூலாற் செய்த ஆடைகளை அழுக்கேறிய துணிகள் கிடக்கும் அரையிலே உடுக்கும்படி தருவான். அவ்விடத்தே நெடுநாள் தங்குவீராயினும் நெல்லரிசிச் சோற்றுடன் பெண்ணாய்வேட்டையாடிக் கொண்டு வந்த கொழுப்புடைய இறைச்சியையும் ஒரு நாட் போலப் பல நாளும் பெறுகுவிர். மலையினின்றும் வீழும் அருவி வெற்றிக்கொடி போல தோன்றும் மலைநாட்டுக் குரியவனும் மழைபோன்ற கொடைத்தொழிலையுடையவனுமாகிய நன்னன், கொடுக்கக் குறைவுபடாத பல பொருட்களையும் தேரையும் வேழத்தையும், மணிகட்டிய பசுத்திரளையும், பொன்னாற் செய்த சேணத்தையுடைய குதிரைகளையும் நல்குவான். நல்கி கூத்தர் தலைவனாகிய நீ பொற் றாமரை சூடவும் விறலி பொன்னா பரணங்களணியவும் செய்து முதல் நாளிலே பரிசில் தந்து அடுத்த நாள் போகும்படி மொழிவான்.

முற்றும்.

Printed at The Royal Printing Works, Mount Road, Madras.